Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 01 ஞாயிற்றுக்கிழமை (17-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:327

## திருமலையில் முஸ்லிம்களோடு தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

திருகோணமலை,ஒக்.17

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது.

தமிழ்த்தேசியத்தை வலுப்பெறச் செய்தல் மற்றும் உரிமைப் போராட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ்க்கூட்டமைப்பின் பதினேழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் குழு ஒன்று நேற்றுப் பிரசாரப் பணிக்காகத் திருகோணமலைக்கு வருகை தந்தது.

நேற்றுமுற்பகல் தமிழ்க்கூட்டமைப்பு குழுவுடன் விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.புரட்சி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் மலரவன் ஆகியோரும் இணைந்து கூட்டாக முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

பள்ளிவாசல் தலைவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய விரிவுரையாளர்கள், இஸ்லாமிய சட்டத்தரணிகள் ஆகியோர் முஸ்லிம்கள் தரப்புக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

முஸ்லிம் மக்கள் மொழியால் தமிழர்கள் தான். தமிழ்மக்களின் பிரச்சினைகளில் முஸ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆலோசகர் ஹரீம் கிளிநொச்சிக்குத் திடீர் விஜயம்

கிளிநொச்சி,ஒக்.17

ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

வவுனியா அரச அதிபரின் ஏற்பாட்டில் ஏ-9 வீதி ஊடாகக் கிளிநொச்சிக்கு வந்த அவர் ஆனையிறவுக்குச் சமீபமாக நிர்மாணிக்கப்பட்ட இரு புதிய பாலங்களைப் பார்வையிட்டார். அதன் பின் அந்தப் பாலங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கினார். அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த அவர் பின்னர் விமானம் மூலம் கொழும்பு திரும்பினார்.

கிளிநொச்சியில் ஹரீம் பீரிஸ் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார் என்று இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டன.

(ஐ-3-13-ரி)

# ஊர்காவலர்கள் இருவரையும் புலிகள் நேற்று விடுவித்தனர்

## திருமலையில் பதற்றம் தணிவு

திருகோணமலை,ஒக்ரோபர்17

**துப்பாக்கிகளுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த சமயம் கைதுசெய்யப்பட்டு கடந்த இரண்டு மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிங்கள ஊர்காவல் படையினர் இருவரையும் புலிகள் நேற்று விடுவித்தனர்.**

**சம்பூரில் உள்ள புலிகளின் மாவட்ட நீதிமன்றம் இவர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்க அனுமதித்தது.**

ஊர்காவலர்கள் இருவரும் நேற்றுமாலை சம்பூர் மாவட்ட நீதியாளர் இனியவன் முன்னிலையில் தமிழீழக் காவல்துறையினரால் ஆஜர்செய்யப்பட்டனர். இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையிலும் ஒவ்வொரு சரீரப் பிணையிலும் விடுவிக்க நீதியாளர் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப ஊர்காவலர்களின் மனைவிமார் மற்றும் உறவினர்கள் அப்போது அங்கு சமுகமளித்திருந்தனர். நீதிமன்றம் கோரிய பிணைப் பணத்தைச் செலுத்துவதற்கு தங்களுக்கு வசதி இல்லை என்று அவர்கள் நீதியாளரிடம் தெரிவித்துவிட்டனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் புலிகளின் குழு சந்திப்பு

பெல்ஜியம்,ஒக்.17

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுவரும் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் நாளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களைச் சந்திக்கின்றனர்.

நேற்று பெல்ஜியம் போய்ச்சேர்ந்த இக்குழுவினர் இன்று அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்களுடன் கலந்துரையாடுவர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களை நாளை சந்திக்கும் குழுவினர் அவர்களுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்துவர். (ஐ-3)

## உள்ளே சூரியகாந்தியில்

- ★ புலிகளின் இராஜதந்திர சுற்றுலா... அடுத்தது என்ன?
- ★ இந்தியப் படைகளின் பிரம்படிப் படுகொலைகள்...
- ★ காலங்களை வெல்லும் தலைவன்
- ★ இறைவன் விரும்பியபடி நடந்துகொண்டால்...
  *- நினைக்க சிரிக்க சிந்திக்க...*
- ★ கலிபோர்னியாவில் இந்துக் கோவில் கட்டுவதில் பிரச்சினை...
  *- சத்தமும் சந்தடியும்*
- ★ கிழக்கும் மேற்கும் இணையாது.... மற்றும் கவிதைகள்....

## விடுதலைப் புலிகள் எங்களை கௌரவமாகப் பராமரித்தனர்

### விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவிப்பு

திருகோணமலை,ஒக்.17

சிறைச்சாலையில் தடுத்துவைப்பது போலல்லாமல் சுதந்திரமாக நடமாடக்கூடிய வகையில் விடுதலைப் புலிகள் எங்களை கௌரவமாகப் பராமரித்தனர்.

பிணையில் விடுதலையான ஊர்காவலர்கள் இருவரும் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்.

சம்பூர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட பின் ஊடகவியலாளர்களிடம் பேசிய சந்தன பண்டார, சமிந்த பியசிறி ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

உயிர்களைக் கொல்லக்கூடிய பயங்கர ஆயுதங்களுடன் நாங்கள் கைதுசெய்யப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கைதிகள் விடுவிப்பு விவகாரம்

## கண்காணிப்புக் குழுவின் முயற்சி: பாராட்டுகிறார் புலிகளின் பிரமுகர்

திருகோணமலை,ஒக்.17

சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பத்துப் போராளிகளையும் விடுவிக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடும் முயற்சி எடுத்தது. அதற்காக நல்லெண்ண அடிப்படையில் பதில் நடவடிக்கையாக - சமாதானத்தின் ஒரு சமிக்ஞையாக இரண்டு ஊர்காவலர்களையும் விடுவித்துள்ளோம்.

- இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்.

ஊர்காவலர்களின் விடுதலை தொடர்பாக அவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

சிறுசிறு குற்றங்கள் காரணமாக தடுத்து வைக்கப்பட்ட பத்துப் போராளிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டிருந்தோம்.

அவர்கள் எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக பத்துப் போராளிகள் விடுதலை செய்யப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தி வந்த நபரைக் கண்டதுண்டமாக வெட்டி பரலுக்குள் போட்டு எரித்தார் இராணுவ மேஜர்

### மன்னாரில் நடந்த கொடூர சம்பவம் அம்பலமாகிறது

மன்னார்,ஒக்.17

அனுராதபுரத்தில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்தி வந்து, அவரை மயக்கமுறச் செய்து, உடலைக் கண்டதுண்டமாக வெட்டி தீக்கிரையாக்கியிருக்கிறார் ஓர் இராணுவ மேஜர்.

மன்னாரில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த இந்தக் கொடூரச் சம்பவம் பற்றிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

உயிலங்குளத்தில் உள்ள பிரஸ்தாப இராணுவ மேஜரின் தங்குமிடத்தில் இருந்து ஆயுதங்கள் பல மீட்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

கண்டி, வத்தேகமவில் இடம்பெற்ற வாகனக் கடத்தல் சம்பவம் தொடர்பாக மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் டபிள்யூ.ஏ.அனுருத்த சம்பிக்க என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். தெல்தெனிய நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட இவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த இராணுவ மேஜர் தொடர்பாக இராணுவப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

உயிலங்குளம் இராணுவ முகாமில் உள்ள அவரது அறையைச் சோதனைசெய்த இராணுவப் பொலீஸார், அங்கு இரத்தக்கறைகளையும் சவரக் கத்தி போன்ற ஆயுதங்களையும் கண்டுபிடித்தனர்.

சந்தேகம் கொண்ட இராணுவப் பொலீஸார் அந்த மேஜரின் உதவியாளரான கோப்ரல் குமாரதிலக என்பவரை விசாரணைக்குட்படுத்தியபோது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

கடந்த ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி அனுராதபுரத்தில் வைத்து கார் ஒன்றுடன் காமினி லலித்(வயது40) என்ற 2 பிள்ளைகளின் தந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் வயல் உழுதபோது மனித எலும்புக்கூடுகள் மீட்பு!

கிளிநொச்சி,ஒக்.17

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி, ஞானிமடம் பகுதியில் நேற்று இரண்டு மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பெரும்போக நெல்விதைப்புக்காக அங்குள்ள வயல் ஒன்றை உழுதபோது இந்த எலும்புக்கூடுகள் வெளியே வந்தன. அவற்றின மண்டை ஓடுகள் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டன. இவற்றுடன் சிதைந்த நிலையில் தலைக்கவசம் போன்ற ஒரு பொருளும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1991ஆம் ஆண்டு 'வலம்புரி' நடவடிக்கையின் மூலம் இப்பகுதியைக் கைப்பற்றிய படையினர் அப்பகுதியில் பாரிய மண் அணைகளை ஏற்படுத்தி அதில் காவல் அரண்களையும் நிறுவி இருந்தனர். நேற்று அவ்விடத்தில் வயலை உழுதபோதே எழும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த 11ஆம் திகதி பூநகரி வில்லடிப் பகுதியில் வயல் ஒன்றை உழுதபோது அங்கும் ஒரு மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-ரி)

## அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.17

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு உட்பட 8 கோரிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ள ஜே.வி.பி. தொழிற்சங்கம், வரவு - செலவுத் திட்டத்தில் அவற்றுக்கு நிவாரணம் கிட்டாவிட்டால் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் கீழ் செயற்படும் 127 தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழுவின் தலைவரும் சிறு கைத்தொழில் மற்றும் கிராமியத்துறை அமைச்சருமான லால்கந்த இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய வகையில் சம்பள உயர்வை வரவு - செலவுத் திட்டம் மூலம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை உட்பட 8 கோரிக்கைகளை அரசுக்கு அத் தொழிற்சங்கம் விடுத்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

(ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சிறுமி மீது வல்லுறவு முயற்சி சமுர்த்தி அலுவலர் கைது!

ஒன்பது வயதான பாடசாலைச் சிறுமி ஒருத்தியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றார் எனச் சந்தேகிக்கப்படும் சமுர்த்தி அலுவலர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

தனித்திருந்த சிறுமியை வல்லுறவுக்குட்படுத்த முயன்றவேளை சிறுமியின் அவலக் குரல்கேட்டு உறவினர்கள் விரைந்து வந்து பிரஸ்தாப சமுர்த்தி அலுவலரை மடக்கிப்பிடித்தனர் எனக் கூறப்படுகிறது.

அச்சுவேலி மேற்கில் உள்ள ஒரு வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட நபரை கைதுசெய்த அச்சுவேலிப் பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அவரை இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ பண்டார தலைமையிலான பொலீஸ் குழு விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

(ஐ-11)

# ‘பொங்குதமிழே’ பாடல்கள் இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய அரிமா அழகனின் ‘பொங்குதமிழே’ பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு நேற்று வெளியிடப்பட்டது.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற வெளியீட்டு நிகழ்வில் பொது ஈகச் சுடரினை லெப். கேணல் தூயவனின் உறவினர் ஏற்றி வைத்தனர்.

இசைத்தட்டின் முதற்பிரதியை சிலம்பம் அமைப்பின் தாயகக் கிளைத் தலைவர் கி.நடராஜா வெளியிட்டு வைக்க, திருமதி இந்திரா தவநாயகம் பெற்றுக்கொண்டார்.

வரவேற்புரையை கலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தியும், சிறப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், வெளியீட்டுரையை தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும், இசைத்தட்டின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் நிகழ்த்தினர்.

சிறப்புப் பிரதிகளை மிருதங்க வித்துவான் மா.சிதம்பரநாதன் வழங்கினார். நிகழ்வின் நிறைவுரையை கலைபண்பாட்டுக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் மு.வளநாடன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி உட்பட யாழ். மாவட்டக் கலைஞர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-5)




கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய அரிமா அழகனின் ‘பொங்குதமிழே’ பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு நேற்று நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன், விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மற்றும் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# யாழ். வலயப் பாடசாலைகளுக்கு நூலக வாரம் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ். கல்விவலயப் பாடசாலைகளில் நூலக வாரத்தை எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை அனுஷ்டிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை யாழ்.வலய நூலக இணைப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் கேட்டுள்ளார்.

இந்த நூலக வாரத்தில் பாடசாலைகளிலுள்ள நூலகங்களைத் துப்புரவு செய்தல், காலைக் கூட்டங்களில் நூலகம் சம்பந்தமான கருத்துக்களை மாணவர்கள் மத்தியில் பரப்புதல், நூல்கள் சேகரிக்கும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்தல், நூலகக் கண்காட்சிகளை பாடசாலை மட்டத்தில் நடத்துதல், பாடசாலைகளின் முகப்புகளில் நூலகவாரம் சம்பந்தமாக வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தொங்கவிடுதல் ஆகிய நடவடிக்கைகளை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளுமாறும் அதிபர்களை நூலக இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(4-13)

# மானிப்பாயில் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

படித்த யுவதிகள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக மானிப்பாய் பிரதேச சபையின் அனுசரணையுடன் தொழில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இந்தப் பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகின.

முதல் கட்டமாக ‘ஆதிஷா ஆட் அன் டிசைன்ஸ்’ நிறுவனத்தின் தொழில் பயிற்சியாளர்களால் யுவதிகளுக்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆடைகளில் வர்ண அலங்காரம் செய்தல், சாறிகளில் கைவேலைப்பாடுகள், சிறு மட்பாண்ட வடிவங்களை அன்பளிப்புப் பொருள்களாக அலங்கரித்தல் மற்றும் சிறுகைப்பணிப் பொருள்கள் தயாரிப்பு, கேக் ஐசிங் மற்றும் அழகுக்கலைப் பயிற்சிகள் நேற்று சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்றும் பயிற்சிகள் இடம்பெறும். சனி, ஞாயிறு தினங்களில் யுவதிகள் இந்தப் பயிற்சிநெறிகளில் இணைந்து கொள்ளலாம். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். கண்காட்சி நிகழ்ச்சியும் நடத்தப்படவுள்ளது.

(ஐ-185)

# சிங்கர் நிறுவன ஏற்பாட்டில் சமையல் பயிற்சிப்பட்டறை

## யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ். குடாநாட்டு மக்கள் மின் உபகரணங்களில் இலகுவாகச் சமையல் செய்வது எப்படி என்பது தொடர்பான சமையல் பயிற்சிப்பட்டறை நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது. பட்டறை இன்றும் நடைபெறும்.

சிங்கர் நிறுவனத்தின் யாழ். கிளையினால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் குடாநாட்டைச் சேர்ந்த மனையியல் பாட ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அந்நிறுவனத்தின் சமையல் செய்முறைப் பயிற்சிப் பிரிவின் முகாமையாளர் சுஜீவ செய்விதான, தயான ஆகியோர் இந்தப் பயிற்சிகளை வழங்கினர்.

மின் உபகரணங்களைப் பயன்படுத்தி சிக்கனமாகச் சமையல் செய்வது எப்படி என்ற விளக்கங்கள் இதில் அளிக்கப்பட்டன.

மேற்படி பயிற்சிப் பட்டறையினை நடத்துவதன் நோக்கம் பற்றி சிங்கர் நிறுவனத்தின் யாழ். முகாமையாளரைக் கருத்துக் கேட்ட போது:-

சிங்கர் நிறுவனம் இத்தகைய பயிற்சிகளை கொழும்பில் நடத்தியுள்ளது. யாழ். மக்களுக்கு சிங்கர் நிறுவனத்தின் சேவை முழுமையாகச் சென்றடையும் நோக்குடன் இப்பயிற்சி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது மக்கள், இத்தகைய கண்காட்சிகள் மூலம் தரமான பொருள்களைத் தாமே இனங்கண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

சிங்கர் நிறுவனம் பல இலகு கடன் வசதியடிப்படையிலும் விசேட விலைக்கழிவுடனும் தீபாவளி வரையான காலத்துள் பொருள்களை வழங்கவுள்ளது. அத்துடன் விசேட சீட்டிழுப்பு மூலம் பரிசுகளும் வழங்கப்படும்.

எமது மக்கள் சரியான முறையில் மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு போதிய அறிவுரைகள் வழங்கப்படுவதில்லை. இந்நிலை, மின் உபகரணங்களின் தேக்க நிலைக்கு வழி வகுக்கின்றன.

சரியான முறையில், மின் உபகரணங்களைப் பயன்படுத்தி மிகக்குறுகிய நேரத்தில் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ள இப்பயிற்சி வழிகாட்டும் - என்றார்.

(எ-203-204)



சிங்கர் நிறுவனத்தின் யாழ். கிளையினால் நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட சமையல் பயிற்சிப்பட்டறையின் போது எடுக்கப்பட்ட படம்.

*(படம்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)*



# பல்துறையில் புகழ்பூத்த கலைஞன் பாவேந்தன் கண்ணதாசன்

தத்துவத்தை
முத்துமுத்தாய்
வித்துவத்தை
விதம்விதமாய்
சத்தியமாய்
சொத்தையெல்லாம்
வித்தையொன்றும்
நித்தம்நித்தம்
பக்குவமாய்
பாமரரும்
கண்ணனின்
காலமெலாம்
இந்துமதம்
இடித்துரைத்து
பந்தபாசம்
பாட்டிசைத்துத்
கர்த்தரவர்
காவியத்தைப்
சின்னச்சின்ன
சிறந்தசிகரம்
சிந்தையள்ளும்
சிறுகதைகள்
பல்துறையில்
பாவேந்தன்

இனியதமிழில்
படைத்த
இன்பத்
கொடுத்த
புலவர்கள்
பொதுச்சொத்தாய்
காட்டவில்லை
நிகழுகின்ற
படம்பிடித்த
அறியச்செய்த
புகழ்தனையே
பக்திகொண்ட
அர்த்தமுள்ள
அர்த்தம்சொன்ன
இப்படித்தான்
தந்தகவி
சரித்திரமே
பாடிவைத்த
சொல்லடுக்கி
அமைத்த
திரைவசனத்
நாவல்களும்
புகழ்பூத்த
கண்ணதாசன்

குழைத்து
பாவேந்தன்
தமிழாலே
கவியரசன்
மறைத்த
தந்தோன்
வாழ்வில்
காட்சி
கலைஞன்
புலவன்
பாடிக்
கலைஞன்
தென்று
அறிஞன்
என்று
வாணன்
சொல்லும்
கவிஞன்
வைத்து
சிற்பி
தோடு
தீட்டி
கலைஞன்
பாரீர்.

- வ.யோகானந்தசிவம்.

(கவியரசு கண்ணதாசனின் நினைவுதினம் இன்றாகும்)

உதயன்

# பிரகடனங்கள் அர்த்தமுள்ளவையா?

'இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சியோடு தொடர்புபடுத்தி தென்னிலங்கையிலும், சர்வதேச மட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்படும் பிரகடனங்கள் இரண்டு.

ஒன்று - ஒஸ்லோப் பிரகடனம்.

மற்றது - டோக்கியோப் பிரகடனம்.

தென்னிலங்கையும், சர்வதேச சமூகமும் இந்த இரண்டையும் பெரியளவில் தூக்கிப்பிடித்தாலும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை 'பிரகடனம்' என்ற பெயர் கொடுத்து முக்கியத்துவமளித்துக் கருதக்கூடிய அறிவிப்புகள் அல்ல இவை என்பதுதான் உண்மை.

விடுதலைப் புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கும் இடையில் ஆறு சுற்றுப்பேச்சுகள் நடந்தன. அதில் மூன்றாவது சுற்றுப்பேச்சு நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் 2002ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் வாரத்தில் இடம்பெற்றது. அந்தப் பேச்சின் பின்னர் நோர்வே அரசு வெளியிட்ட - பேச்சுப்பற்றிய - அறிக்கையையே இப்போது 'பிரகடனம்' என்று நிறம் பூசுகின்றனர் சில தரப்பினர்.

உண்மையிலேயே அது கூட்டறிக்கை கூட அல்ல. அந்த மூன்றாவது சுற்றுப்பேச்சுப் பற்றிய, அனுசரணையாளர்களான நோர்வேயின் அறிக்கை மட்டுமே.

"உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்துப் புலிகள் தரப்பு முன்வைத்த யோசனையின் அடிப்படையில் அதற்கான வாய்ப்புகள் பற்றிக் கண்டறிய பேச்சில் பங்குபற்றிய இரு தரப்பினரும் (புலிகளும், அரசும்) இணங்கினர்" - என்பதுதான் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சம்.

இதையே புலிகளும், அரசும் சேர்ந்து வெளியிட்ட பிரகடனம் என்று பெரிதாகப் பீற்றிக்கொள்கின்றார்கள்.

உண்மையில் இது இருதரப்பு - அல்லது அனுசரணையாளர்களையும் உள்ளடக்கிய முத்தரப்பு - பிரகடனம் அல்ல என்பதைப் புரிந்துகொள்வது நல்லது.

புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், தாம் தற்போது எழுதியிருக்கும் 'போரும் சமாதானமும்' என்ற ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றிய அரசியல் வரலாற்று ஆய்வு நூலில் இந்த விடயத்தை ஆதாரமாக முன்வைக்கின்றார்.

மற்றையது 'டோக்கியோப் பிரகடனம்' என்று கூறப்படுகின்றது. இது 2003 ஆம் ஆண்டு ஜூன் 9,10ஆம் திகதிகளில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற, இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட தீர்மான அறிவிப்பைக் குறிக்கின்றது. இந்த மாநாட்டில் பங்குபற்றிய 51 நாடுகளின் பிரதிநிதிகள் கையொப்பமிட்ட இந்தத் தீர்மானத்தை அந்த மாநாட்டுப் பிரகடனமாகக் கருதுவதில் தப்பில்லை.

ஆனால், இந்தப் பிரகடனம் ஈழத்தமிழரைக் கட்டுப்படுத்தும் தார்மீகப் பொறுப்புக்கொண்டதல்ல என்பதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புலிகளுக்கும் அப்போதைய அரசுக்கும் இடையிலான ஆறாவது சுற்றுப்பேச்சு 2003 மார்ச்சில் ஜப்பானில் நடைபெற்றது. அதுவரை நடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபல விடயங்களை இலங்கை அரசுத் தரப்பு நிறைவேற்றத் தவறிய நிலையில் 2003 ஏப்ரலிலேயே அமைதிப் பேச்சுக்களை இடைநிறுத்திவிட்டதாக அறிவித்துவிட்டனர் புலிகள்.

மேற்படி உதவும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னேற்பாட்டு - ஆயத்த - கூட்டமாக 2002 நவம்பர் கடைசியில் ஒஸ்லோவின் 'கொல்மன் ஹோலன்' குன்றில் உள்ள ஹோட்டலில் நடந்த கூட்டத்தில் புலிகளும் பங்குப்பற்றியிருந்தபோதிலும், அதற்குப் பின் ஜூனில் உதவும் நாடுகளின் மாநாட்டில் - கூட்டத்தில் - புலிகள் பங்குபற்றவில்லை.

புலிகளினதோ அல்லது ஈழத்தமிழர்களின் அதிகார பூர்வ பிரதிநிதிகளினதோ பிரசன்னமின்றி நடந்த அந்த மாநாட்டின் பிரகடனம் தமிழரைக் கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாகும்.

மேலும் அந்தப் பிரகடனத்தின் 18ஆவது சரத்து இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டதும் தமிழர் தரப்பு ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் எனத் திட்டவட்டமாக வலியுறுத்துகின்றது. அதாவது தீர்வு என்ற பெயரில் ஓர் இணக்கம் ஏற்பட்ட கையோடு அது நடைமுறைக்கு வரமுன்னரே, தமிழர் தரப்பு ஆயுதங்களை - அவர்களது ஒரே பாதுகாப்பு அரணை - பலத்தை - கைவிடவேண்டுமென்று ஒருதலைப்பட்சமாகக் கோருகிறது இந்தப் பிரகடனம்.

எனவே, தமிழர் தரப்புக்கு என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாத இந்தப் பிரகடனத்துக்கு தமிழர்கள் கட்டுப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

மொத்தத்தில் தமிழரைப் பொறுத்தவரை இவை பிரகடனமே இல்லை. வெறும் பிரசார வாசகங்களே.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை சுயநிர்ணய உரிமைக்கான - அவர்களது போராட்ட வழிக்கான - பாதை இன்னும் திறந்தே உள்ளது.

தனி வழியா, சமஷ்டி வழியா, அல்லது வேறு பாதையா என்பது இன்னும் முடிவாகவில்லை. அதுவே இன்றைய நிஜம்.

# 'ரெலிக்கொம்' பரிவர்த்தனை நிலையம் சுன்னாகத்தில் அமைக்க நடவடிக்கை

## வலிகாமம் பகுதிக்குப் புதிய இணைப்புகள் கிடைக்கும்

அச்சுவேலி,ஒக்.17

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம வலிகாமம் பகுதிக்குப் புதிய உப பரிவர்த்தனை நிலையம் ஊடாக மேலதிக தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

வலிகாமம் பகுதிக்கான தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் சுன்னாகத்தில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான கோபுர இணைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

உப பரிவர்த்தனை நிலையங்கள் தற்பொழுது வடமராட்சி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. வலிகாமம் பகுதிக்கான புதிய பரிவர்த்தனை நிலையம் செயற்படத் தொடங்கும்போது அந்தப் பகுதிக்கான தொலைபேசி முன் இலக்கங்கள் 222 என்பதில் மாற்றம் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ரெலிக்கொம் பிராந்திய உயர் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்:-

புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அடுத்தவருடம் முற்பகுதியில் செயற்படத் தொடங்கும் என்றும் அது செயற்படத் தொடங்கியதும் வலிகாமம் பகுதியிலுள்ள வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.மேற்கு பிரதேச செயலக பிரிவில் மேலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இணைப்புகள் புதிதாக வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். (4-11)

# தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.பாடசாலைகளுக்கு 16 இடங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

தேசிய மட்டத் தமிழ் மொழித்தினப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் 16 இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த யூனியன் கல்லூரி மூன்று இடங்களையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரண்டு இடங்களையும் பெற்றுள்ளன.

யாழ்.கல்வி வலயத்தில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியன தலா இரு இடங்களையும் பெற்றுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

தனி இசை: 5 ஆம் பிரிவு - முதலாமிடம் - செல்வி லி.ஜீவிகா (தெல்லிப்பழை, யூனியன் கல்லூரி).

தனி இசை: 4ஆம் பிரிவு - முதலாமிடம் - கு.ஜெகதீசன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

கட்டுரை: 4ஆம் பிரிவு - மூன்றாம் இடம் வா.தர்மிஷா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

தமிழறிவு வினாவிடை (திறந்தபோட்டி) முதலாம் இடம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

இலக்கணப் போட்டி - 5ஆம் பிரிவு இரண்டாம் இடம் செல்வி தி.காயத்திரி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

இசைக்குழு ஒன்று முதலாம் இடம் - (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

கட்டுரைவரைதல், கடிதம் வரைதல்: 3ஆம் பிரிவு - மூன்றாம் இடம், செல்வி பா.ஜசிந்தா. (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

நாட்டிய நாடகம்: குழு II - (முதலாம் இடம், (யாழ். இந்துமகளிர் கல்லூரி).

தனிநடனம்: முதலாம் பிரிவு - இரண்டாம் இடம், செல்வி த.சரவண்யா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

வில்லுப்பாட்டு (திறந்தபோட்டி) முதலாம் இடம் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

கவிதை ஆக்கம் 4 ஆம் பிரிவு - முதலாம் இடம், செல்வி அ.அனுஷானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

பேச்சு - 5ஆம் பிரிவு - இரண்டாம் இடம், செல்வன் தெ.ஹர்சன் (யாழ். மத்திய கல்லூரி).

தனிநடனம்: 4ஆம் பிரிவு - இரண்டாம் இடம், செல்வன் பா.அனுஜன் (யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்).

வாசிப்பு பிரிவு: முதலாம் இடம், செல்வன் த.கோகுலன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்).

குறுநாடகம்: 5ஆம் பிரிவு - மூன்றாம் இடம், செல்வன் கு.அறிவழகன் (மல்லாகம் மகாவித்தியாலயம்).

தனி இசை: 2ஆம் பிரிவு - மூன்றாம் இடம், இ.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி).

நாடகம் (திறந்தபோட்டி): முதலாம் இடம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (4-5)

## டோகாவில் இலங்கையர் பரிதாப மரணம்

பாரம் தூக்கியில் கட்டப்பட்டிருந்த சங்கிலி அறுந்து விழுந்ததில் அதில் ஏற்றப்பட்ட பொருள்களுள் நசியுண்டு இலங்கையர் ஒருவர் உட்பட நால்வர் டோகாவில் உயிரிழந்தனர்.

கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற இந்தப் பரிதாபச் சம்பவத்தில், நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் - சௌந்தரராசன் (வயது-43) என்பவரும், இவருடன் பணிபுரிந்த இந்தியர்கள் மூவரும் பலியாகினர்.

இதேவேளை - இச்சம்பவத்தில் பலியான சௌந்தரராசனின் மரணத்தைக் கேள்வியுற்ற மாமியாரான முத்துவேலு மனோன்மணி (வயது - 72) என்பவர் அதிர்ச்சியினால் உடனடியாக மரணமானார். இவர் ஏற்கனவே சுகவீனமடைந்திருந்தவர் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (எ-5-110)

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனை பரிசீலிக்கத் தக்கது அல்ல - ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்,ஒக்.17

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை பரிசீலிக்கத்தக்க யோசனை அல்லவென்றும், இந்திய அரசியல் யாப்பை முன்மாதிரியாகக் கொண்ட யோசனையைப் பரிசீலிக்குமாறும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

அவர் தமது நான்குபக்க கடிதம் ஒன்றில் அரசு பரிசீலிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை விடுதலைப் புலிகள் முன்வைக்கவில்லை என்றும் குறை கண்டிருக்கிறார்.

அவரது கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:-

உங்களுக்கும் உங்கள் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணாவிற்கும் என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனாலும், உங்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவு பற்றி அறிந்ததும் பல சிரமத்தின் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு எவ்விலை கொடுத்தேனும் காப்பாற்றப்படல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன். ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக அரசியலில் இருக்கும் மூத்த அரசியல்வாதி நான். பெரியார் அமரர் சா.ஜே.வே.செல்வநாயகம் கியு.சி.உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் உயர் மட்டத் தலைவர்களுடன் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்துள்ளேன்.

எமது மக்கள் சம்பந்தமாகவும் பொதுவாக நம்நாடு சம்பந்தமாகவும் உங்களுக்கு ஆலோசனை வழங்கும் உரிமையும் தகுதியும் எனக்கு உண்டு எனக் கருதுகிறேன்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையில் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை விடுதலைப் புலிகள் கோருவது இணைந்த வடக்கையும் கிழக்கையும் பிரிக்க எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாகும். கீழ் மாகாணத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஏறக்குறைய சம எண்ணிக்கையில் வாழும போது இத்தகையதொரு கோரிக்கை இணைந்த வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற வழிசெய்யும். இடைக்கால நிர்வாகத்தின் மூலம் விடுதலைப் புலிகள் வடகிழக்கினை நிர்வகிக்கும் முழு அதிகாரத்தையும் கோருகின்றனர்.

இத்தகையதொரு நிர்வாகத்தை மக்கள் ஏற்பார்களா என உங்களைக் கேட்க விரும்புகிறேன்? முஸ்லிம்களும் சிங்களவர்களும இந்த உடனபாட்டுக்கு சம்மதம் தருவார்களா? இதற்கு உடன்படும் அரசு தான் பின்னர் பதவியில் நிலைக்க முடியுமா?

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றி இன்னும் பல விடயங்களைக் கூறலாம். சுருக்கமாகக் கூறின் அரசு பரிசீலிக்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை விடுதலைப் புலிகள் முன்வைக்கவில்லை. சில பிரேரணைகள் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்களாலேயே ஏற்கமுடியாதவை. இதனை அரசு எவ்வாறு பரிசீலிக்கும்.

எமது அண்டைய நாடான இந்தியா உருவாக்கிய அரசியல் யாப்பு நீண்டகாலமாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. பல சோதனைகளைத் தாண்டி இன்னும் நடைமுறையிலிருக்கும் இந்திய அரசியல சாசனத்தின் அதிகாரப் பகிர்வை, அவசியம் ஏற்படின் தேவைக்கேற்ற மாற்றங்களுடன் முன்மாதிரியாகக் கொள்ளலாம். அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஓர் அரசியல் சாசனத்தை இலகுவாக எவராலும் நிராகரிக்க முடியாது. அது இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்குமெனவும் நான் நம்புகிறேன்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்போடு ஒரு தீர்வுக்கான உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். வடகிழக்கில் வாழுகின்ற சிறுபான்மை முஸ்லிம், சிங்கள மக்களின் உள்ளத்தை வென்று எடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உங்களுக்கு நிறைய உண்டு.

சுதந்திரத்திற்காகக் கடுமையாகப் போராடிய உங்கள் போராளிகளுக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம்களுடைய சுதந்திரத்தைப் பறிக்கவோ அவர்களை அடிமைப்படுத்தவோ உரிமை இல்லையென்பதை நம்பவையுங்கள் - என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உதயவாக்கு

அதிகாரம், தைரியம், உழைப்பு என்பவற்றின் சின்னம்தான் மனிதன்.

## நாளை

ஐப்பசி 02
திங்கட்கிழமை
(18.10.2004)
திதி: பஞ்சமி
நள்ளிரவு 12.01 வரை
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு 09.35 வரை
சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02
(பழைய நேரப்படி)

## நிதிமகளைச் சிந்தையில் இருத்துவோம்!

திருமகளாய்த் திருவளித்துப் பண்பளித்துக்
கீர்த்தியுடன் பெருமை நல்கி
திருமகளாய்த் திருமேனிப் பேரழகும்
செல்வாக்கும் பேராண்மை நிதியுமீந்து
திருமகளாய் உலகரெலாம் உய்வதற்கு
அருளளிக்கும் தேவியளாய்ச் சக்தியாகி
திருமகளாய்ச் செய்யதா மரையமர்ந்த
நிதிமகளைச் சிந்தையினில் போற்றிநிற்பாம்



நிதியளிக்கும் பெருமகளை நிலமளிக்கும் திருமகளை
நெறியளிக்கும் மலரின் மாதை
கதியளிக்கும் நாரணனின் மார்புற்ற தேவியளை
கீர்த்தியளி கானத் தாயை
விதிவகுக்கும் பிரமனையும் ஈன்றளித்த வித்தகியை
சிவபிரான் தங்கை யாளை
மதியுற்று மனம்பொருந்தி உணர்வுற்று மாண்புற்று
வாயார வாழ்த்தி நிற்பாம்.

(திருமகள் பூசை இன்று ஆரம்பம்)

அமரர் சி.கனகநாயகம்
ஆசிரியர், வட்டுக்கோட்டை.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் விரிவுரையாளரின் தனிப் பாவனையிலுள்ள எம்.டி. 90 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 49/4, மணற்தறை ஒழுங்கை, கந்தர்மடம். (37666)

3 மாத காலமே பாவித்த P IV (Black) 2.8 GZ 256 DDe 80 GB Asusmain Board 64 MBVGA 17"view sonic monito (flat) compodrive UPS கணனி warranty உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 6014427 அல்லது 0773037829. (37667)

SUZUKI 250 CC Racing Modal மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: No.1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 6413, 0777 763781. (37669)

மோட்டோ ரொலர் தொலைபேசி மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.சிறிமதி, அண்ணாசிலையடி, கரணவாய், கரவெட்டி. தொ.இல.: 021 226 3827. (37660)

2200 W Sony VCD set, 1500 Kw Honda ஜெனமரட்டா அயர்ன் சேவ் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜா, 021 226 3016. (C/38253)

## வான் விற்பனைக்கு

27ஸ்ரீ... தொடரிலக்கமுடைய ELF 25 மர பொடி வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோ. அன்பழகன், அம்பிகாவதி வீதி, சங்கானை. (C/38247)

HL தொடர் இலக்கமுடைய 250 மிற்சுபிசி வான் விற்பனைக்குண்டு. இருபக்கமும் நான்கு கதவுகளுடன். பேக்கரி பாண் விற்பனைக்கு ஏற்ற பொடியுடன் உள்ளது. தொடர்புகளுக்கு: 222 3785. (37307)

Mitsubishi டெலிக்கா (Four whell) வான விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 109003. (37607)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, கற்கோவளம் பாடசாலை ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பாலன், T.P.: 021 226 3016. (C/38248)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred Dobermann Pincher, Pure bred Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37512)

## காணி விற்பனைக்கு

சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியிலுள்ள 5 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 772253 (37528)

ஆனைக்கோட்டையில், யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை - கொக்குவில் வீதிச் சந்திக்கு அருகில் பதினெட்டரைப் (18½) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 2-726918 (கொழும்பு). (சி-37919)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்குண்டு. 1Kg-120/-, கல்பேட் 1Kg-130/-. சுத்தம் செய்துகொடுக்கப்படும். தொடாபு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (37646)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

நல்ல தரமான, வளர்ந்த Original Prima பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37511)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 190/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: ராஜீவ, கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி. T.P.: 0776090926. (37676)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/-. 25.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி38212)

## வீடு வாடகைக்கு

யாழ். நகர் இல. 14, மாட்டின் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய (முற்று முழுதாக மாபிள்) வீடு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும். நேரிலும் தொடர்புகொள்ளலாம். T.P.: 0777 - 733066. (37595)

## பெற்றுக்கொள்ளவும்

காவேரி பட்டுச்சோலை கடையின் முன்னால் பெண்கள் சைக்கிள் ஒன்று தவறவிடப்பட்டு எம்மிடம் உள்ளது. தவறவிட்டவர் உரிய அத்தாட்சி காட்டி சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும். (08.09.2004 இல் தவறவிடப்பட்டது). (C/38237)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும். 360/5, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 0777 738146. (37484)

## தவறிவிட்டது

சரவணை மேற்கு, வேலணையைச் சேர்நத செல்வி நிஷாந்தினி குணசீலன் என்பவருடைய தேசிய அ.அ.(இல.838390358V), விசேட அ.அ. இரண்டும் 14.10-2004 வியாழக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 021 222 3884 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (37677)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு இரண்டு தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

'சுத்த சன்மார்க்கமும் சைவசித்தாந்தமும்' என்ற தலைப்பில் முதலாவது சொற்பொழிவை தமிழகத்தைச் சேர்ந்த ஜோதிமுருகனும் - 'மரணமில்லாப் பெருவாழ்வு' என்ற தலைப்பில் இரண்டாவது சொற்பொழிவினைப் சிங்கப்பூரைச் சேர்ந்த பொறியியலாளர் சிவகுமாரனும் வழங்குவர். (4-7)


## காவலாள் தேவை (SECURITY)

**இரவு - பகல் சேவை.**

எமது நிறுவனத்துக்கு இரவு - பகல் சேவைசெய்யக் கூடிய காவலாள் (SECURITY) தேவைப்படுகின்றார்.

நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் 25 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவராகவும் க.பொ.த.சாதாரணதரம் கற்றவராகவும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஓரளவு உரையாடக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

தகைமையுடையோர் அண்மையில் பெற்ற நற்சான்றிதழுடன் 22.10.2004 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிமுதல் 12.30 மணிக்கிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு: **TILKO HOLIDAYS (PVT) LTD,** (சி-38254) (42-17-45-24)
305, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பெற்றோல் செற்றுக்கு அருகில்).


## முதலாவது பிறந்த தினம்



17 10 2004

நல் வாழ்த்து

செல்வி ஜெனுக்ஷி

யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த ஜெயக்குமார் – ஜொய்சி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனுக்ஷி தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

ஜெனுக்ஷியை அன்பு அப்பா-அம்மா, அப்பப்பா-அப்பம்மா, தாத்தா-அம்மம்மா, மாமா, சித்தப்பா-சித்தி, மாமாமார், மாமிமார், உஜித் சித்தப்பா, சித்தி, டிசிசித்தி, மேரின் சித்தி, அக்கா, அண்ணாமார், மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தையேசுவின் அருளுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக நலமுடன் வாழ்கவென வாழ்த்து கின்றார்கள்.

103, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தாத்தா (B.டொமினிக்)

(37640) UTHAYAN Graphics

## நவராத்திரி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடத்திவரும் நவராத்திரி விழாவின் நான்காம் நாள் நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் விஜத்த ஹேரத், தென்பிராந்திய கலாசார மையப் பணிப்பாளர் க.பணீந்திராரெட்டி ஆகியோர் உரையாற்றுவர். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4-203)


## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த நிவாரணியாகும். இதில் விற்றமின A.C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**
இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021-4590907

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்

Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails

ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## கோலாகலமான திறப்பு விழா

கவர்ச்சிகரமான, நீண்ட கால், நாளாந்தப் பாவனைக்கு





இவற்றின் பாவனை உங்களைப் பிரமிக்க வைக்கும்.


எமது புதிய நவீன காட்சியறை இம் மாதம் 20 ஆம் திகதி முதல் பரந்தன், கிளிநொச்சியில் எக்காலமும் தரச் சிறப்புமிக்க தயாரிப்புக்களையே உங்களுக்கு வழங்கும். நாம் பரந்தன், கிளிநொச்சி பிராந்தியத்தில் எமது சேவையை விஸ்தரித்துள்ளோம்.

UMAZAKI

**சிவகுரு மோட்டர்ஸ்**
ஏ 9 வீதி, பரந்தன், கிளிநொச்சி

சென் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
156, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10
தொ.பே: 2324261/5, 2337283 - 5. பக்ஸ்: 2446554

## Foundation Degree Programme for Higher Education / Career



உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for HigherEducation / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

- கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L
- பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணணி ஆகிய துறைகள்.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களின் உதவியோடு UK, Canada, Australia, Newzealand, போன்ற நாடுகளில் உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு விஷேட ஆலோசனைகளும் பூரண VISA ஒழுங்கு முறைகளும் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

LIFE LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
27, Hospital Road, Dehiwela.
Tel: 011 5518666, 0777 715788
E-mail: edulife@sltnet.lk


## விதை நெல் விநியோகம்

அச்சுவேலி,ஒக்.17

புத்தூர் கமநல சேவை நிலையத்தில் வெளிமாவட்டத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட நல்லின விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் தமது நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் புத்தூர் கமநல சேவை நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (எ-11)

# சமூக ஒடுக்குமுறையிலிருந்து பெண்களை முற்றாக விடுவிப்பதற்குப் புதிய பிரிவு




**அண்மையில் கிளிநொச்சி பொதுமைதானத்தில் நடைபெற்ற மகளிர் எழுச்சி தினக் கண்காட்சியில் தமிழீழக் காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

**இந்தப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக அதன் பொறுப்பதிகாரிகளான இமாகு லேற் செபஸ்தியாம்பிள்ளை உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியை இங்கு தருகிறோம்.**

○ *கேள்வி:* தமிழீழக் காவல்துறையில் மகளிர் விவகாரங்களைக் கையாள்வதற்கென தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருப்பதன் பிரதான நோக்கம் என்ன?

□ *பதில்:* எமது இனத்தினுடைய விடுதலைப் போராட்டத்தின் பரிமாண வளர்ச்சியில் தமிழீழக் காவல்துறையின் பங்களிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகின்றது.

தேச சுதந்திரத்துடன் கூடிய தேச விடுதலையும, பெண் விடுதலையுடன் கூடிய சமூக விடுதலையும் எமது இனத்தின் விடுதலைப் பாதையில் முக்கியமானவை.

அந்தவகையில் பெண்கள் மீதான சமூகத்தின் கொடுல சிந்தனைகளை இல்லாதொழிப்பதே முழுமையான பெண் விடுதலையாக அமையும்.

இத்தகைய விடுதலை என்பது இலகுவில் அடைந்துவிடக் கூடிய ஒன்றல்ல. மிகுந்த சிரமத்தின் மத்தியிலே அதனை நாம் அடைய வேண்டியிருக்கிறது.

எனவே, அத்தகைய ஒரு விடுதலையைப் பெண்களுக்குப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டே மகளிர் விவகாரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

○ *கேள்வி:* இதற்காக எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வீர்கள்?

□ *பதில்:* பொதுவாகக் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குவோம், காவல் நிலையங்களில் உள்ள பெண் காவல்துறையினர் பொதுவான நடவடிக்கைகளைப் பாதிக்கப்பட்டவருக்காக செய்கின்றபோதும், பெணகள் உரிமை அணுகுமுறை, பாதிப்பின் தன்மை ஆலோசனைகள் என்பவற்றை நிபுணத்துவம் பெற்றவர்களால்தான் சிறப்பாகச் செய்யமுடியும். இதனால், நாம் அதற்கென தனியான பிரிவை அமைத்து அதனை மேற்கொள்கின்றோம்.

○ *கேள்வி:* நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் எப்படியான பயிற்சியின் மூலம் அதை உருவாக்கியுள்ளார்கள்?

□ *பதில்:* வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள குறிப்பாக, உடல், உளத்தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் ஆவார். உடல் பாதிப்பைப் பௌதிக ரீதியாக அவதானிக்கலாம். ஆனால், உளப் பாதிப்பைத் தேர்ச்சிபெற்ற உளவள ஆலோசனையாளர்களால் மட்டுமே அறிந்து கொள்ளமுடியும தற்போது ஒவ்வொரு காரியாலயத்திலும் தேர்ச்சி பெற்ற ஒருவர் இருப்பினும் அவர்களுக்குச் சிறப்பான பயிற்சியை வழங்குவதன் மூலம் சிறந்த அதிகாரிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காகச் சிலரை உளவள ஆலோசனைக் கல்விக்காக அனுப்பியுள்ளோம்.

○ *கேள்வி:* இச்செயற்பாட்டின் அடுத்த கட்டம் என்ன?

□ *பதில்:* தற்போதைய அலுவலகம் நடுவப்பணியகத்தின் ஒரு பிரிவாக - மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளது. இது மிக விரைவில் விரிவடைந்து மாவட்ட அலுவலகமாகவும் காலப்போக்கில் சகல காவல்துறை அலுவலகங்களிலும் தனியான பிரிவாகவும் அமைக்க எண்ணியுள்ளோம்.

○ *கேள்வி:* தற்போது வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களை இனம் காணுவதால் வன்முறையை ஒழித்து விடமுடியாது. பாதிக்கப்படடவர்களுக்காக எப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றீர்?




□ *பதில்:* தமிழீழத்தின் எல்லாப் பாகத்திலும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி குற்றம் இழைத்தவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தி நீதியை வழங்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்ந்தும் தமது ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்புவதற்கேற்ற நடவடிககைகளை மேற்கொள்வோம். அதற்கென பெண்கள் அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பை மேற்கொணடுள்ளோம். எமது பிரிவினர் சமத்துவமான உரிமைகள் என்ன என்பதைக் கிராம ரீதியாகவும, தொழில் குழுக்களுக்கும் கருத்தூட்டல் மூலம் விழிப்படையச் செய்து வருகின்றனர்.

## காவல்துறை மகளிர் விவகாரப் பிரிவின் பொறுப்பதிகாரி உதயனுக்குச் செவ்வி

○ *கேளவி:* தற்போது தாங்கள் அடையாளபபடுத்தியுள்ள பெண்களுக்கெதிரான வன்முறை வடிவங்கள் எவை என்று கூறமுடியுமா....?

□ *பதில்:* பொதுவாக மதுபாவனையால் கணவன் - மனைவிக்கிடையேயான வாக்குவாதம், வன்முறைகளில் முடிகிறது. இதைக் குடும்ப வன்முறை என்று குறிப்பிடலாம். சமூக பண்பாடுகள், ஒரு வகையான வன்முறையை உருவாககுகிறது. அதாவது ஆண், பெண்களில் அதிகாரவெறியைப் பிரயோகித்தல் மற்றும் பொருளாதாரச் சிக்கலுக்கு முகங்கொடுக்கும் வகையில் துன்புறுத்தல் என்பன வற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம்.

○ *கேள்வி:* தற்போது தமிழீழப் பிரதேசத்தில் இயங்கும் நீதிமன்றங்களில் ஸ்ரீலங்கா சட்டக் கொலையிலும் மேன்மையாகப் பெண் களுக்கெதிரான வன்முறையைக் குறைக்கக் கூடிய விசேட சட்டங்கள உள்ளனவா?

□ *பதில்:* ஆம். சாதாரண ஸ்ரீலங்கா சட்டக் கோவையில 21 விடயங்கள் குற்றவியல பிரிவுக்குள் அடக்கப்படுகின்றன. எமது சட்டக்கோவை 22ஆவது விடயமாகப் பெண்களுக்கெதிரான பாரதூரமான வன்முறையை உள்வாங்கியுள்ளது. இதனால், வன்முறையாளர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

○ *கேள்வ:* பெண்களுடைய வன்முறைக்கெதிர்ாகக் குரல் கொடுக்கும் ஆண்கள் குழு ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படுகிறது. இதற்கு ஆதரவு கொடுப்பீர்களா?

□ *பதில்:* ஆம், எந்தவொரு சமூக அமைப்பினதும் செயற்பாடுகளுக்கும் நாம் தடையாக இருப்பதில்லை. அதனை ஊக்குவித்து அல்லது ஒருங்கிணைத்துச் செயலாற்றவே நாம் விரும்புகின்றோம்.

**செவ்வி: தி.செந்தில்குமரன்**

ஆண்கள் இப்படியான நடவடிக்கைகளைச் செயயும்போது வன்முறை பெரும்பாலும் குறையும். அத்துடன், வேறு அமைப்புகள் மேற்கொள்ளும் பிரசார விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும் நிச்சயமாக ஆதரவளிப்போம்.

---

### 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## யாழ்.மத்திய கல்லூரியுடனான ஆட்டத்தில் மொனறாகல மகாவித்தியாலயம் வெற்றி

வலிவடக்கு,ஒக்.17

14 வயதுப் பிரிவினருக்கு இடையே யாழ்.மத்தியகல்லூரியில் . இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் மொனறாகல நிசங்கா மத்திய மகாவித்தியாலயம் வெற்றிபெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் மொனறாகல நிசங்க மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடையே யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நிசங்கா மகாவித்தியாலயம் யாழ்.மத்திய கல்லூரி அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. யாழ்.மத்திய கல்லூரி 50 ஓவர்களில் விககெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்.மத்தியகல்லூரியின் அணித் தலைவர் எம்மயூரன் தனது அணிக்காக 93 ஓடடங்களைப் பெற்றார். மற்றும் சிவகரன் 22 ஓட்டங்களையும், என்.ரதீசன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிசங்க மகாவித்தியாலயத்தின டபிள்யூ ஏ.ரந்தனா 8 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைத் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், டி.எம்.தரங்கா 7ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டஙகளைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், டி.எம்.ரி.திசநாயக்க 8 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நிசங்கா மத்திய மகாவித்தியாலயம் 49 ஓவர்கள் முடிவில் 190 ஓட்டங்களைப்பெற்று தமது வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் எஸ்.எ.நிசாந்திலங்கா 70 ஓட்டங்களையும், டி.எம்.விச்கயா சாந் நவரத்னா 46 ஓட்டங்களையும், டி.எம்.பிரசாத்மது சங்கா 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான க.தனுஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், மயூரன் 9 ஓவர்கள் பந்துவீசி 48 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கோலிகன் மற்றும் ஜனோசன் ஆகியோர் முறையே 7 ஓவர்கள், 4 ஓவர்கள் பந்துவீசி தலா 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (8-86)

## வயது முதிர்ந்தவர்களுக்கான உடல் ஆரோக்கியப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.மத்திய கல்லூரி லியோ கழகம் நடத்தும் 55வயதிற்கும் 65வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கான உடல் ஆரோக்கியம் பெறும் பயிற்சி வகுப்பு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6மணி தொடக்கம் 6.30 மணி வரை நடத்தப்படவுள்ளது. பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளவிரும்புவோர் விண்ணப்படிவத்தினை யாழ்.மத்திய கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்பவளோருக்கு மருத்துவ பரிசோதனை நடைபெறும் எனவும் யாழ்.மத்திய கல்லூரி லியோ கழகப் பொறுப்பாசிரியர் எஸ்தவசேகரம் அறிவித்துள்ளார். (8-190)

### யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்திய

## கராத்தே சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

மேஜர் ஈழப்பிரியா நினைவு நாள் கராத்தே சுற்றுப் போட்டித் தெரிவுக்காக யாழ் மாவட்டக் கராத்தே சங்கத்தினால் நடத்தப்பட்ட கராத்தே தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் விவரம் வருமாறு:

**18 வயதிற்குட்பட்டோர் சண்டைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்கள்:**

☆ 34,35,36 கிலோ எடை
முதலாம் இடம் - ரி.சுகேந்திரன்.

☆ 37,38,39 கிலோ எடை
முதலாம இடம் - கே.டான்சன், இரண்டாம் இடம் - எம்.வினோத்.

☆ 40,41,42 கிலோ எடை
முதலாம் இடம் - என்.சுரேராஜ்.

☆ 43,44,45 கிலோ எடை
முதலாம் இடம் - வி.கமல்ராஜ், இரண்டாம் இடம் - ஏ.விஜிதாகரன், 3ஆம் இடம் - எஸ்.பகீதரன்.

☆ 46,47,48 கிலோ எடை
முதலாம இடம் - கே.அருந்தவராஜா 2ஆம் இடம் - என்.கார்முகிலன், வி.ஜோன்சன், 3ஆம் இடம் - ஆர்.ரகுலேந்தன்.

☆ 49,50,51 கிலோ எடை
முதலாம் இடம் - எம்.எம்.பொபிசனா, இரணடாம் இடம் - ஆர்.றோயல், 3ஆம் இடம் - ஏ.சரவணபவன்.

☆ 52,53,54 கிலோ எடை
முதலாம் இடம் - எஸ்.அன்ரனி ஜெயக்குமார், 2ஆம் இடம் - என்.ஜென்சன்ராஜ், 3ஆம் இடம் - ஏ.ரதீஸ்.

☆ 55,56,57 கிலோ எடை
முதலாம் இடம் - எஸ்.விஜிதன், 2ஆம் இடம் - எம்.தவராஜா, 3ஆம் இடம் - எஸ்.பிரபாகரன்.

☆ 58,59,60 கிலோ எடை
முதலாம் இடம் - கே.யோகேஸ்வரன், 2ஆம இடம் - ஏ.குகானந்தன், 3ஆம் இடம் - எஸ்.பிரியதர்ஷன்.

☆ 61-65 கிலோ எடை
முதலாம் இடம் - ஏ.விமல்ராஜ், 2ஆம் இடம் - ஏ.அன்ரனிகுயின், 3ஆம் இடம் - ஏ.எட்மன் றீகன்.

☆ 66-70 கிலோ எடை
முதலாம் இடம் - ஆர்.றொபேட் விமலராஜா, 2ஆம இடம் - பி.ஜெயதீஸ், 3ஆம் இடம் - எஸ்.கிசோக்குமார்.

☆ 71-75 கிலோ எடை
முதலாம் இடம் - ஜே.சுமந்திரன், 2ஆம் இடம் - எஸ்.பிரதீபன், 3ஆம் இடம் - எஸ்.சந்திரபாலன்.

☆ 76-80 கிலோ எடை
முதலாம் இடம் - பி.அன்ரன் ஞானதீசன், 2ஆம் இடம் - ஜே.றொபின்சன், 3ஆம் இடம - ஜே.அன்ரனி கனிராஜ்.

☆ 81 கிலோவிற்கு மேல்
முதலாம் இடம் - எம்.மக்ஸ்மிலன், 2ஆம் இடம் - கே.ஜெகதீஸ்வரன், 3ஆம் இடம் - கே.விஜயபாலா (8-5)



**வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் அண்மையில் நடத்தப்பட்ட 35 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள் பிரதேச சபை அலுவலகம் முன்பாகப் போட்டியை ஆரம்பிப்பதைப் படத்தில் காணலாம்.** *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியா திரு.க.கனகேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னையா கனகரத்தினம்**

அவர்கள் காலமானதையிட்டு இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-38249)(39-26-14-44)


## நுணாவில் குளம் புனரமைப்பு

நியாப் திட்டத்தின்கீழ் நுணாவில் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப் படாத இந்தக் குளம் எட்டு லட்சத்து நாற்பது ஆயிரம் ரூபா செலவில் தற்போது புனரமைக்கப் பட்டு வருகிறது. கோடைகாலங்களில் இப் பகுதி மக்கள் தமது விவசாய நடவடிக்கை களுக்கு இந்தக் குளத்திலிருந்து நீரைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எ)

## பூசகரின் சைக்கிள் திருட்டு

வலிகாமம்தெற்கு,ஒக்.17

உடுவில் கற்பொக்கணைப் பகுதியில் ஆலயப் பூசகர் ஒருவர் தமது வீட்டு முற்றத்தில் நிறுத்திவைத்திருந்த சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது.

ஆலயப் பூசகர், ஆலயப் பணிகளை முடித்து விட்டு வந்து முற்றத தில் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டினுள்ளே சென்று தேநீர் அருந்திக் கொண்டிருந்தவேளையில் முற்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)


### உழவு இயந்திரம் விற்பனைக்கு

37-XXXX இலக்கம் கொண்ட 240, கொம்பனியில் இருந்து கொண்டுவந்த நிலையில் உழவு இயந்திரம், பெட்டி, கலப்பை, தேங்காய் ஏற்றும் கிறாதியுடன் உள்ளது உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள:
நிர்வாகி, (37665)
அற்லஸ் கொமினிக்கேசன்,
77.கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

# தேவை

சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள அச்சகம் ஒன்றுக்குக் கீழ்வருவோர் உடன் தேவை.

- ✦ கணனி ரைப் செற்றிங் செய்பவர்கள் (ஆண்/பெண்) (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை)
- ✦ புத்தகம் கட்டுபவர்
- ✦ உதவியாளர்

விரும்புவோர் தங்களது சுயவிவரக் கோவையுடன் எதிர்வரும் 30-10-2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
**விளம்பர இல. 2409,**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**

(37670) (26-14-44)

### மலேசியாவில் உயர்கல்வி

தகைமை: **O/L**

தொடர்பு:
**திரு.வே.அம்பிகைபாகன்**
(B.A.Hons)
காங்கேயன் கலைக்கோட்டம்,
போக்காலை வீதி,
உடுப்பிட்டி.
T.P.: 077 6724350.

(37624)

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விவரங்களிற்கு:
**# TRRO, 106,** 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
**# TRRO,** மக்லொட் வைத்தியசாலை, இணுவில்.
**# TRRO,** கைதடிச் சந்தி
(சித்த மருத்துவத்துறைக்கு முன்பாக).

தலைவர் - TRRO. (சி-38221) (26-14-44)

### S.S.V.R. MULTI COMPLEX
ஓடியோ வீடியோ றெக்கோடிங் சேவை

PANASONIC, SKC, DVC, TDK கசெற்களையும் சப்புப் பலகை, ரீப்பே, பீலிங், மோலிவ் என்பவற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இத்துடன் சிறிது காலம் பாவித்த SONY, PANASONIC NATIONAL T.V. (Made in Japan) VCR (6Head/4Head) என்பனவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு:
**கொத்தங்காடு, நெடியகாடு, வல்வெட்டித்துறை.**
☎ 0712 - 373405. (37639) (26-14-44)



### 55,000 U.S.A.VISA
லொத்தர் - GREEN CARD

- ☆ குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய சந்தர்ப்பம்
- ☆ ஒரு குடும்பம் 2 விண்ணப்பங்களை அனுப்பலாம்.
- ☆ கடந்த காலங்களில் எமது சேவை மூலம் பலர் அமெரிக்கா சென்றுள்ளனர்.
- ☆ LATEST விண்ணப்ப விவரங்களை VPP மூலம் பெறத் தொடர்புகொள்க.

**PENGUIN**
B2, F23, BLOEMENDHAL FLATS,
COLOMBO - 13.
(C/38227)(42-14-44-26) T.P.:077 3081764, 2438367 (After 2.30p.m.)

| IELTS | Spoken English |
|---|---|
| (Reading, Listening, Writing, Speech)<br>New Batch Starts 20th Oct 04<br>5.00p.m. – 7.00p.m.<br>or<br>6.00p.m. – 8.00p.m.<br>(Wed. & Thu.)<br>10.00a.m. – 1.30p.m. &<br>9.30a.m. – 11.00a.m.<br>(Thu. & Fri.)<br>100% coaching for the exam. | New Batch Starts 21st Oct 04<br>8.30a.m. –10.00a.m.<br>(Thu. & Fri.)<br>*Conducted by British qualified lecturer*<br>UniVentures Institute,<br>55, Martyn Rd., Jaffna.<br>☎ 0777 918280. (C-38217) |

### Rent/Lease

- ☆ LOCATION: **312, Palaly Road, Kandarmadam, Jaffna.**
- ☆ Suitable for Residence or office: Close to schools and University
- ☆ 02 Storey house: **containing a total floor area of approx 2730 sq. feet (each floor approx 90sq)**

Ground floor - 2 Rooms Verandah - sitting area one bath-room, a toilat.
1st floor 4 Rooms - 2 bathrooms & toilat
2nd floor 2 Rooms - a big hall & toilat

- ☆ Monthly rent negotiable.

contact: **Mr.R.Chelvanayagam,**
Moothathamby lane,
Manipay.
(37645)(42-14-44-26) T.P.: 222 6111.

abe



**Diploma In Business Information Systems (PT/FT)**

Subjects:
1. Computer Fundamentals
2. Computer Applications in Business & Finance
3. Business Communication
4. Organisational Behaviour (Optional)
5. Accounting (Optional)

**Fastest route to a degree in computing or Management.**

Continue your Studies in 72 Universities in 13 countries including U.K., U.S.A., CANADA, AUSTRALIA
New Batch starts on 06th November 04
**UNIVENTURES INSTITUTE OF BUSINESS** Management,
55, Martyn Road, Jaffna.
☎ 0777 918280. (C/38216)



### இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

அழகுக் கலையில் பட்டம்பெற்று, 23வருட அனுபவம் பெற்றுள்ள **திருமதி தனா சிறீதரன்** அவர்களால் இருநாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மங்கு, பரு, முடி உதிர்தல், கழுத்துக் கறுப்பு, முகத்தில் குளி போன்றவற்றிற்கு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

திகதி: **23-10-2004 - 3வகை (F)பேசியல் - முகம், கை, முடி அகற்றல், கண்புருவம் சீரமைத்தல், மருதாணி போடும் முறை ஆகியன.**
**24-10-2004 - மணப்பெண் அலங்காரம், முடி அலங்காரங்கள் (கெயாஸ்ரையில்)**
இடம்: பிள்ளையார் இன்
**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
நேரம்: **காலை 9.00 மணி - மாலை 4.00 மணி**
26-10-2004, 27-10-2004 திகதிகளில்,
விலாசம்: **நெல்லியடி முருகமூர்த்தி ஆலயம், நெல்லை திருமண மண்டபம், மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி.**

*மேலதிக விவரங்களுக்கு:*
**SINDARLLA**
Beauty Fashion,
7-7/4A, Ground floor,
Orchard Building,
Galla Road,
Colombo - 06.
T.P.: 0777 - 316453.

(சி-38228) (26-14-44)

### கண்ணீர் அஞ்சலி

யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலய ஆசிரியை
திருமதி ஜெகதீஸ்வரன் ஞானாம்பிகை
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி புவனேஸ்வரி அருளம்பலம்**

அவர்கள் இயற்கை எய்தியமையை அறிந்து மிக்க அதிர்ச்சி அடைந்தோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/வண்ணை நாவலர் ம.வி.,**
**யாழ்ப்பாணம்.** (376560 (26-14-44) **அதிபர், ஆசிரியர்கள்.**




**FedEx** Express®

விசேட கழிவு 10%

மற்றும் விசேட சலுகைகளும் வழங்குகின்றார்கள்.

### திருமுருகன் கொம்நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310


## எழுவைதீவில் இன்று மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.பல்கலைக் கழக 4ஆம் வருட மருத்துவ மாணவர் களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை எழு வைதீவில் மருத்துவ முகாமும், சுகாதாரக் கருத்தரங்கும் நடை பெறவுள்ளன.

ரி.அச்சரேஸ்வரி தலைமையில் மருத் துவபீட மாணவர்கள் இந்த முகாமில் கலந்து கொள்வர். (எ-ரி)


### கண்ணீர் சொரிகின்றோம்



எமது உடன் பிறவாச் சகோதரனும்
எமது ஸ்தாபன முன்னாள் உறுப்பினருமான
டோகாவில் அகாலமரணமடைந்த
அமரர்
**இராமலிங்கம் சௌந்தரராஜன்**
(ராஜன்)

*பாசத்தால் கட்டி வைத்தாய்*
*பண்பினால் எமை ஆண்டாய்*
*கண்ணியம் காத்து நின்றாய்*
*கடமையால் உயர்ந்தே நின்றாய்*
*ஆசிரியராய் விளங்கி நின்று*
*இன்று தொழிலுக்கு அதிபனானாய்*
*தொலைபேசி செய்தியொன்று*
*நிலைகுலைய வைத்துவிட்டது என்னை!*
*உன்பிரிவு தாங்காதிங்கே*
*கண்ணீரைச் சொரிக்கின்றோமே*
*ஆன்ம சாந்திக்காய் குடும்ப உறவுகளுடன்*
*இறையருளை இறைஞ்சுகின்றோம்.*

செல்வம் தொழிலகம்,
குறுக்கு றோட், நீர்வேலி.

**க.வன்னியசிங்கம் குடும்பத்தினர்.**

(37673) (26-14-44)

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீடம்
30 ஆம் ஆண்டு நிறைவு



மாபெரும்
விஞ்ஞானக் கண்காட்சி

ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை

ஊடக அனுசரணை
உதயன்


அனுசரணை
SAAMSTECH

(சி-38238)

# தலிபான் அமைப்பின் அச்சுறுத்தலை அலட்சியப்படுத்திய ஆப்கான் மக்கள்


ஆப்கான் கந்தகார் நகரில் அதிபர் தேர்தலில் வாக்களிப்பதற்காக வரிசையில் நின்ற 37 வயதான எட்டுப் பிள்ளைகளின் தாய் கூறினார் 'நாங்கள் அமைதிக்கும் நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் பெண்களின் உரிமைக்குமாக வாக்களிக்க வந்துள்ளோம்' என்று.

தலிபான்களின் குறுகியகால ஆட்சியின் போது மிகக்கொடூரமான கெடுபிடிக்குள்ளானவர்கள் அங்குள்ள பெண்கள்.



'பர்தா' அணிவதைக் கட்டாயப்படுத்தினார்கள் என்பது சாதாரண விடயம். பெண்கள் வெளியில் உலாவலாகாது, தொழில் பார்க்கலாகாது என்புவை போன்ற சட்டங்கள் அங்கு பெண்களின் உரிமைகளை அதள பாதாளத்திற்குள் தள்ளிவிட்டன.

பெண்களின் உழைப்பில் மட்டுமே தங்கியிருந்த குடும்பங்கள் இதனால் நிர்க்கதிக்குள்ளாகின. எனவே, தலிபான்களின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, இந்தக் கெடுபிடிகள் ஒழிக்கப்பட்டமை அங்குள்ள பெண்களை உற்சாகம் கொள்ளச்



செய்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

றெய்ஹானா என்ற பெயர் கொண்ட இந்தப் பெண்மணி 14 ஆண்டுகள் தலிபான்களுக்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறி ஈரான் நாட்டில வாழ்ந்தவர்.

அவர் கூறினார்: நான் படிப்பறிவில்லாதவள். நான் படிக்க விரும்புகிறேன். தலிபான்கள் இங்கே இருப்பார்களானால் எங்கள் சீவியம் இன்னும் மோசமாகியிருக்கும்" என்று. இப்படி அங்கலாய்க்கும் பெண்கள் இவரைப்போல் எண்ணிறைந்தவாகள் இருக்கிறார்கள். அதனால், அதிபர் தேர்தலில் வாக்களிக்கப் பெண்கள் முண்டியடித்து வரிசையில் நின்றமை ஆச்சரியமல்ல.

ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் மும்முரமாக நடந்துகொண்டிருந்தவேளையில் 15 வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்கள். ஏற்கனவே இரண்டு வேட்பாளர்கள் விலகியிருந்த நிலையில் இவர்களும் விலகிக்கொண்டமை அதிபர் தேர்தலை முடங்கச் செய்துவிடும் என்ற அச்சம் தோன்றியது.

தேர்தல் ஊழல்களை தடுப்பதாகத் தற்காலிக அதிபர் ஹமித் கர்சாய் அளித்திருந்த வாக்குறுதியைக் காப்பாற்றத்தவறிவிட்டார் என்பது அவர்களின் குற்றச்சாட்டு. குறிப்பாக வாதகாளர்களின் விரல்களில் வாக்களிப்பின்போது பூசப்பட்ட அழிக்க முடியாத மை தேய்த்தவுடன அழிந்து போவதாய் இருந்தது என்பது இவர்களின் முக்கிய குற்றச்சாட்டு. இந்தத் தேர்தலுக்காகச் செலவிடப்பட்ட 55மில்லியன் பவுண் வீண்விரயம் என்று குற்றஞ்சாட்டிய அவர்கள் தேர்தலை நிறுத்தாவிடில் அரசியல் கொந்தளிப்பு ஏற்படும் என்றும் அச்சுறுத்தியிருந்தார்கள்.

இதேவேளை, நாட்டின் தெற்கு - தென்கிழக்குப் பிரதேசங்களில் கெரில்லாக்கள் அதிபர் தேர்தலைக் குழப்புவதற்காகப் பெரும் எடுப்பில் தாக்குதல்களை நடத்தியதுடன் பலபேரைக் கொன்றொழித்தும் விட்டார்கள்.

ஆப்கானில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையானது சரியானதுதான் என்றவகையில் உலகுக்கும் அமெரிக்க மக்களுக்கும் காட்டிக் கொள்வதன்மூலம் அதிபர் புஷ் ஈராக் மீதான தனது வெளிநாட்டுக் கொள்கையை நியாயப் படுத்துவதற்குத் துடித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் இத்தாக்குதல் சம்பவம் அவருக்குச் சரியானதொரு சோதனையாக அமையும் என்று நோக்கர்கள் கருதினார்கள்.

அதிபர் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாக எதிர்த தரப்பினர் அறிவித்திருந்த வேளையில் அத்தேர்தல் தங்குதடையின்றி நடந்தேறியுள்ளது என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதேசமயம் அதிபர் கர்சாயைக் கடுமையாக எதிர்த்தவரும், பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்தவர்களில் ஒருவருமான யூனூஸ் கனூனி மேற்குலக ராஜதந்திரிகளின் ஆலோசனையை அடுத்து, தேர்தல முடிவுகளை ஏற்பதற்குச் சம மதித்திருக்கிறார். தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட மோசடிகளை விசாரிக்க மூன்றுபேர் அடங்கிய குழுவொன்றை நியமிக்க ஐ.நா. - ஆப்கான் தேர்தல் முகாமைத்துவ சபை முன் வந்திருப்பது கனூனியின் இந்த மனமாற்றத்திற்குக் காரணம்.

அதிபர் கர்சாயை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் கனூனியைவிட எவருக்கும் வெற்றி பெறும் சாத்தியமில்லையென்று கருதப்படுகின்றது. கனூனிற்கு நாட்டின் வடபகுதியைச் சேர்ந்த பலம்வாய்ந்த கூட்டணிக்கட்சியினரின் ஆதரவு இருப்பதாகக் கருதப்படுகின்றது.

எதுவானாலும் அமெரிக்க ஆதரவுபெற்ற கர்சாய்தான் வெற்றிபெறுவார் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் கனூனியே அவரது நேரடி சவாலாக இருப்பார். கர்சாய் வெற்றிபெற்றாலும் 25 வருடங்களாக உள்நாட்டுக் குழப்பங்களால் சிதறிப் போய்க்கிடக்கும் பல்வேறு தரப்பினரையும் இணைத்துக்கொண்டு எவ்வாறு நாட்டை அவர் கட்டியெழுப்பப்போகிறார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தேர்தல் முடிவுகள் இறுதியாக வெளிவருவதற்குச் சில நாள்கள் பிடிக்கும் என்று கருதப்படுகின்றது.

எதுவானாலும், தலிபான்களின் வன்முறை அச்சுறுத்தல்களையும் புறக்கணித்துவிட்டு இலட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் அதிபர் தேர்தலில் கலந்துகொண்டு அமைதியாக வாக்களித்திருப்பது அங்கு ஜனநாயகம் தடையின்றி வளர்வதற்கான நல்ல அறிகுறி என்று கூறலாம்.

★ ★ ★

## கல்வீச்சு, குண்டுவீச்சுக்கு இடந்தராத அமெரிக்க அதிபர் தேர்தல்


### புஷ் - கெரி பதவிப்போட்டி

அமெரிக்க அதிபர் தேர்தல் நடப்பதற்கு இன்னும் சில தினங்களே உள்ளன. அதாவது நவம்பர் 2 ஆம் திகதி அமெரிக்காவை ஆள்பவர் யார் - குடியரசுக்கட்சியின் வேட்பாளரும் தற்போதைய அதிபருமான ஜோர்ஜ் புஷ்தானா அல்லது அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும் தற்போதைய மசசுசெட்ஸ் செனெட்டருமான ஜோன் கெரியா



என்பதை அமெரிக்க மக்கள் அன்றையதினம் முடிவு செய்யப்போகிறார்கள்.

அமெரிக்கர்கள் எதையுமே மிக நாசுக்காக - ஆனால் அவர்களுக்கே உரிய பெரும்போக்கில் நடத்திமுடித்துவிடுவார்கள். இப்போதும் அதுதான், விளையாட்டுப்போல அதிபர் தேர்தலுக்



கான பிரசாரங்கள் குதூகலமாக நடந்து கொண்டிருக்கின்றன.

வேட்பாளர்கள் இருவருமே பகிரங்கமாக மேடைகளில் தோன்றி விவாதிப்பதும் - ஒருவர் கருத்தை மற்றவர் வெட்டிப்பேசி மக்கள் கருத்தைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயல்வதும் அங்குள்ள நாகரிகம். இவ்வாறு இரு தலைவர்களும் மூன்று தடவைகள் நேருக்குநேர் தோன்றி மோதியிருக்கிறார்கள்.

இவர் என்ன? முன் எப்போதும் ஒரு தலைமைப்பதவியை வகிக்காதவர். அடிக்கடி அரசியல் நிலையை மாற்றிக்கொள்பவர். இவரால் இந்த நாட்டை முன்நடத்திச் செல்ல முடியுமா? என்று ஒரு சமயம் மேடையில் வைத்து கெரியை மடக்கினார் புஷ்.

கெரி அதற்குப் பதில் அளித்தார். யுத்தம் தொடர்பாகச் சில வார்த்தைப் பிரயோகங்களில் நான் தவறியிருக்கலாம். ஆனால் இந்த அதிபர், ஈராக்கின் மீது படையெடுத்ததின் மூலம் பெரும் தவறிழைத்துவிட்டார். அதைவிட இது மோசம் அல்லவா? என்று திருப்பிக்கொடுத்தார் கெரி. ஆப்கானிஸ்தானிலிருந்து கவனத்தை ஈராக் மீது திருப்பியதன் மூலம் புஷ் பெரும் தப்புச் செய்துவிட்டார். பின்லேடனைத் தேடிப் பிடிப்பதைவிடுத்து ஈராக்கிற்குக் கவனத்தைத் திருப்பிவிட்டார் என்று கெரி கூறினார்.

"நான் எங்கே நிற்கிறேன் என்பது மக்களுககுத் தெரியும். எம்மைக் கவனித்துக் கொண்டிருககும் மக்களுக்கு நான் என்ன நினைக்கிறேன்" என்பது தெரியும்" என்றார் புஷ் இவ்வாறு தமாஷாகவும் காரசாரமாகவும் சிலசமயம் ஆழமாகவும் இருவரும் பகிரங்கமாக விவாதித்திருக்கிறார்கள்.

இதில் ஒரு விடயம் ஜனநாயகம் பேசும் ஆசிய நாடுகள் கூர்ந்து கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்த விவாதங்களை நேரடியாகவும், தொலைக்காட்சிகளிலும் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதே.

கல்வீச்சில், குண்டுவீச்சுகளில் அவர்கள் இறங்காமல் இரு தரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களைக் கவனித்தார்கள். இப்பொழுது அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதன பிரதிபலிப்பை நவம்பர் 2 ஆம் திகதி வெளியிடுவார்கள்.

★ ★ ★

### முஷாரப்பின் தகிடுதத்தம்

சர்வாதிகாரிகள் ஒருபோதும் மக்கள் கருத்துக்கு தலைகுனியமாட்டார்கள் என்பதற்கு மீண்டும் ஓர் உதாரணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்.

இவ்வருட இறுதியில், இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாக வாக்குறுதியளித்திருந்த முஷாரப். இப்பொழுது அதற்குமாறாக அரசியல் சட்டத்திலேயே மாற்றம் செய்ய எத்தனித்துள்ளார்.

இது தொடர்பான நகல் தீர்மானம் ஒன்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்திலேயே பெரும்



எதிர்ப்புகளுக்கு இடையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிபராகவும் இராணுவத் தளபதியாகவும் ஏக காலத்தில் பதவியில் இருக்காதவிடத்து தமது எதிர்காலம் தனிப்பட்ட முறையிலும் அரசியல் மட்டத்திலும் பாதிக்கப்படும் என்று அவர் கருதுவதே இந்த ஏற்பாட்டுக்குக் காரணம் என்று கருதுவதில் தவறில்லை. ✷

# கல்வியைத் தொடரவேண்டிய சிறுவர்களையும் கல்லுடைக்க வைக்கும் வறுமையை விரட்டுவோம்!

இன்று உலக வறுமை ஒழிப்பு தினம்

மனிதன் மனிதனாக வாழ முற்படுகின்ற வேளையிலே அவனுக்கு பல்வேறுபட்ட தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன. அவற்றுள் தலையாயதும் அத்தியாவசியமானதுமான தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இவற்றைக்கூட சரிவர நிறைவுசெய்ய முடியாத நிலையே வறுமை என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. அத்தகைய வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி கோடிக்கணக்கான மக்கள் இன்று அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய உலகில் இத்தகைய வறுமை நிலவ பல காரணங்கள் காணப்படுகின்றன. உலகெங்கும் நடைபெறும் யுத்தம் காரணமாக பெருமளவிலான மக்கள் தமது இருப்பிடங்களையும், தொழில்வாய்ப்புக்களையும் இழக்க நேரிடுவதாலும் அகதிமுகாம்களில் அடைபட்டுக்கிடக்கவேண்டிய சூழ்நிலையாலும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இவற்றைவிட, கிராமப்புற பிரதேசங்களில் உள்ள மக்கள் தம்முடைய தொழில் முயற்சிகளான விவசாயம், மீன்பிடி ஏனைய கைத்தொழில் முயற்சிகளில் நவீன விஞ்ஞான சாதனங்களை உபயோகப்படுத்தப் போதிய உபகரண வசதியோ, போதிய தொழில்நுட்ப அறிவோ இல்லாது காணப்படுவதால் அவர்கள் கடுமையாக உழைத்தும்கூட வறுமை நிலை அவர்களை விட்டு அகலாது உள்ளது.

பாடசாலை சென்று கல்வியைத் தொடர வேண்டிய சிறுவர்கள் வறுமைநிலை காரணமாகக் கல்லுடைப்பதுமுதல் கடின வேலைகள் அனைத்தையும் செய்துகொண்டிருக்கின்ற நிலைமை இன்றைய உலகில் சர்வ சாதாரணமாகிவிட்டது.

எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் மூல காரணமாக விளங்குகின்ற வறுமையை ஒழிப்பதற்கு உரிய முயற்சிகளை எடுக்கவேண்டியது பண்பான சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும். வறுமை நிலைக்கு முதற்காரணமாக இருப்பது சனத்தொகைப் பெருக்கமாகும்.

இன்றைய உலகின் சனத்தொகை மிக விரைவாக அதிகரித்துச் செல்கின்றது. சனத்தொகைக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அரச ஊடகங்களும், ஏனைய ஊடகங்களும் பிரசாரப்படுத்துவதுடன், பல உள்ளூர் கிராமங்களிலுள்ள மக்கள் கருத்தடை முறைகளைச் சரிவர அறியாது இருப்பதுடன் அது தொடர்பாகப் பல்வேறுபட்ட மூடநம்பிக்கைகளையும் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு உரியமுறையில் விளக்கமளிக்கப்பட்டுப் போதிய அறிவை அவர்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அன்றாடம் கடினமாகக் கஷ்டப்பட்டு உழைக்கும் தொழிலாளி, தன்னுடைய நாள்கூலியைக் கொண்டு நேராக மதுபான நிலையத்திற்கோ, சினிமாவிற்கோ செல்ல அவர்களின் மனைவி, பிள்ளைகள் வறுமையில் சிக்கித்தவிக்க நேரிடுகிறது. இதை அவர்களாகச் சிந்தித்துச் செயற்படுவார்களானால் பெரும்பாலான குடும்பங்களின் வறுமையைப் போக்கமுடியும்.

தொழில்வாய்ப்பு இன்றி வறுமையில் வாடுபவர்களுக்கு உரிய தொழில் வழங்கி, அவர்களின் வறுமையைப் போக்குவதோடு நாட்டின் அபிவிருத்தியையும் ஏற்படுத்த உரிய செயற்றிட்டங்களை அரசுகள் முன்னெடுக்கவேண்டும்.

பரராஜசிங்கம் சந்திரகுமார்

எனவே, உலகிலுள்ள மக்களின் வறுமை நிலையைப் போக்க தொண்டர் நிறுவனங்களும், மனிதாபிமான அமைப்புகளும் எடுக்கும் முயற்சி மட்டுமல்லாமல், உயரிய விழுமிய பண்புகள் கொண்ட விலங்காக எம்மைக் கருதுகின்ற மனிதகுலத்தில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவரும் 'நான் உண்டு எனது குடும்பம் உண்டு' என சுயநலநோக்கில் வாழாது, பிறரையும் தம்மைப்போல் நினைத்து வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுள்ள மக்களை மீட்டெடுத்து புதியதோர் பூமியைக் கட்டியெழுப்ப இன்றைய வறுமை ஒழிப்புத் தினத்தில் உறுதியெடுப்போம். ★

சிக்கலினால் தலைமயிர் உதிர்கிறதா?



சிக்கல் படிந்த சிகையை உடனடியாக சீராக்கி தலைமயிர் உதிர்வைத் தடுக்கிறது. அத்துடன் விட்டமின் Eயும் அடங்கியிருப்பதால் தலைமயிர் வளர்ச்சிக்கும், உறுதிக்கும் உறுதுணையாகிறது.

LIVON™ HAIR FLUID WITH VITAMIN E

SILKY POTION

Imported & Marketed by: PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

Distributed by: JEGAN PHARMACY. No. 462 B, Hospital Road, Jaffna. Tel: 021 2222194

இலவசமாக கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும் உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டியஒரே ஸ்தாபனம்

எரிக்கனேஸ்



564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2486

கிளை நிறுவனங்கள்:
இல. 80, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

(C/38122)





# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 14.02.1934 உதிர்வு 17.09.2004

## அமரர்

# க.விஸ்வலிங்கம் குலரத்தினம் J.P.

(யாழ்.வணிகர் கழக முன்னாள் தலைவரும், யாழ்.செஞ்சிலுவைச் சங்க உபதலைவரும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்க உபதலைவரும், பாலாவோடை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், யாழ்.பொது நூலக புனரமைப்பு ஆலோசனைக் குழுவின் நிர்வாக உறுப்பினரும், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமாஜ முன்னாள் நிர்வாக உறுப்பினரும், யாழ். லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்)

எமது குடும்பத்தின் குல விளக்காகத் திகழ்ந்து எல்லோர் வாழ்விலும் ஒளி விளக்கை ஏற்றிவைத்து அனைவரது வாழ்வையும் பிரகாசிக்கச் செய்து சமூகத்தில் நன் மதிப்பைப் பெற்று, சிறந்த சமூக சேவையாளனாக விளங்கிய எங்கள் குடும்பத் தலைவனே! அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவனின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் குடும்பத்தினர், யாழ்.வணிகர் கழகக் குடும்பத்தினர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், சமூகசேவை சங்கங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பொது அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், மனிதநேய அமைப்புக்கள், கிறிஸ்தவமதத் தலைவர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் தொலைபேசி, தந்தி, தபால், துண்டுப்பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகைகள் மூலம் அனுதாபச் செய்திகள் வெளியிட்டு அனுப்பியோருக்கும் மலர்வளையம் சாத்தி நினைவஞ்சலி செலுத்தியோருக்கும் இன்னும் அமரர் திடீரென சுகவீனம் உற்றவேளை அவருக்கு வேண்டிய சகல வைத்திய உதவிகளை வழங்கியவர்களுக்கும் பக்கதுணையாக நின்ற அனைவருக்கும் மற்றும் கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் பங்கு கொண்டோருக்கும் அமரரின் இல்லத்தில் இடம்பெற்ற இறுதிக்கிரியைகளிலும் பங்குகொண்டோருக்கும் இன்னும் எமக்குத் தேவையான சகல உதவிகளையும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு அமரரின் லிங்கம் வாசல் தலத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

☛ தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*லிங்கவாசம்,*
*532, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
K.K.V.குடும்பம்.

(37590) (32)

# தேவைகளை அவாவி நிற்கும் வடபகுதி புற்றுநோயாளர்கள்

குடாநாட்டில் ஆள்களைக் கொல்லும் நோய்களில் புற்றுநோய் முன்னணியில் இருந்து வருகிறது. பலரும் பல்வேறு வகையான புற்றுநோய்களாலும் பிடிக்கப்பட்டு வருகின்றனர். சிகிச்சைக்கான வசதிகள் இன்றி பலர் உயிரிழக்கின்றனர். சிகிச்சைக்குப் பின்னரும் உயிரிழப்பு நிகழ்கின்றது.

வடபகுதி புற்றுநோயாளர்களின் நிலைமை மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய புற்றுநோய் மருத்துவமனை ஒன்றின் அவசியம் என்பன குறித்து விவரிக்கின்றது இந்தக் கட்டுரை.

புற்றுநோய் வாழ்நாளின் சந்தோஷக் கனவுகளைத் தெரியாமல் எடுத்துச்செல்வதுடன், தாங்கமுடியாத துன்பத்தையும் உருவாக்குகின்றது. புற்றுநோயால் ஏற்படும் வேதனையும், மரண வேதனையும் நோயாளியை மட்டுமன்றி, அவரின் சிநேகிதர்களையும் உறவுகளையுமே துன்பத்தை உணரவைக்கின்றன. இந்நோயின் கொடூரம் உலக மக்களின் கவனத்தையே ஈர்த்து இருக்கிறது என்று கூறலாம். இலங்கையில் இயங்கிவருகின்ற ஒரே தேசிய புற்றுநோய் வைத்தியசாலை போதுமானதன்று. இலங்கையில் புற்றுநோயால் மரணிப்பவர்களின் விகிதாசாரம் 1:10 அத்தியாவசிய மருந்து வகைகள் குறித்த நேரத்தில் இல்லாமையும் மற்றும் ஏனைய வசதிக் குறைவுகளும் அறிகுறிகளைக் கொண்டு புற்றுநோய் வியாதியை உரிய நேரத்தில் கண்டுபிடிக்க இயலாமல் இருக்கின்றது. இக்காலதாமதம் புற்று நோயாளியை மிகவும் பாதிக்கின்றது.

### வடமாகாணம் - புற்றுநோயாளர் எண்ணிக்கை

இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை புள்ளிவிவரப்படி வடமாகாணத்திலேதான் கூடுதலாக இருக்கின்றது. யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளிவிவரப்படி 2001ஆம் ஆண்டு 902 புற்றுநோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கிறார்கள். வாய்ப் புற்றுநோய், மார்புப் புற்றுநோய்ப் பரிசோதனை, வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையாலும் ஏனைய வசதியின்மையாலும் உரிய கால நேரத்தில் நடைபெறுவதில்லை. இப்பரிசோதனைகள் தாமதமின்றி நடைபெற்றால் தற்பொழுது இருக்கும் புற்றுநோயாளிகளின் தொகை இருமடங்காகலாம்.

### தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம்

1964ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வடமாகாண புற்றுநோய் சிகிச்சைச் சங்கம், இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தர்ம ஸ்தாபனமாகும். இதன் ஆரம்பகால அங்கத்தவர்களாகக் காலஞ்சென்ற கொழும்பு மருத்துவமனை முன்னாள் வைத்திய மேலதிகாரி வைத்திய கலாநிதி கெ.கனகரத்தினம், காலஞ்சென்ற வைத்திய நிபுணர் வி.கிருஷ்ணராசா, முன்னாள் வடமாகாண மருத்துவ சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.ஜெகநாதன் போன்றவர்களின் அயராத பிரயத்தனத்தால் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 300,000/= உடன் அமரர் G.G. பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினர் வழங்கிய நன்கொடை ரூபா 1,200,000/= உம் ஒன்றுசேர்த்து கட்டடங்கள் கட்டி முடிக்கப்பெற்றன.

கனேடிய சமஷ்டி அரசு இந்நிலையத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட "கோபால்ட் யுனிட்டை"(Cobalt Unit) நன்கொடையாக வழங்கியது. வைத்திய நிபுணர் இல்லாத காரணத்தால் இந்நிலையம் ஆரம்பமாவதற்குத் தடையாக இருந்தது. 1983ஆம் ஆண்டு இந்நிலையத்தை இயங்கவைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் முடிவடைந்த நிலையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானது.

### அதி உயர் பாதுகாப்பு வலயம்

அரசு தங்கள் பாதுகாப்புப் படையினரின் தற்பாதுகாப்பிற்காகத் தெல்லிப்பழை புற்றுநோய சிகிச்சை நிலையம் அமைந்திருந்த பிரதேசத்தையும் உள்ளடக்கி உயர் பாதுகாப்புப் பிரதேசமெனப் பிரகடனம் செய்தது. இதன் காரணத்தால் இந்நிலையம் இயங்கமுடியாத நிலைமை ஏற்பட்டது. பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி 'கோபால்ட் யுனிட்டும்' (Cobalt Unit) தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### வடபகுதி புற்றுநோயாளருக்கு ஏற்பட்ட அபாய நிலை

போரின் காரணத்தால் யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் போக்குவரத்து வசதிகள் ஸ்தம்பிதமடைந்தன. தரைவழிப்பாதை முற்றாக மூடப்பட்டமையால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அவர்களுடைய கப்பலில் மிகக் குறைவான புற்றுநோயாளர்களே, கொழும்பிற்கு பாதுகாப்புப் படையினரின் அனுமதியைப் பெற்று மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நோயாளிகள் போக்குவரத்து வசதிகள் மட்டுமன்றி தங்குமிட வசதி, பராமரிப்பு உதவியாளர் இன்மை, மொழிப்பிரச்சினை, மஹரகம வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு மட்டுமல்லாது அவர்களின் உதவியாளர்களுக்கும் கிடைக்கப்பெற்ற மாற்றாந்தாய் உபகாரம், மண்டும் சிகிச்சை பெறச் செல்வதற்கு நோயாளிகளுக்குப் பின்னடைவாக இருந்தன.

இதன் காரணத்தால் அநேக நோயாளிகள் தொடர்ந்து மஹரகம வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்வதைத் தவிர்த்தனர். பண வசதியற்ற நோயாளிகளும் இதிலடங்குவர். இதன் காரணமாக அநேக நோயாளிகள் எதுவித சிகிச்சையுமின்றி உடல் வேதனையைத் தாங்க முடியாமல், தம் விதியை நொந்து அவல நிலையில் வாழ்ந்தனர்; வாழ்கின்றார்கள். சில நோயாளிகள் உடல் வேதனையைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### 1996ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த பின்னர்

குடாநாட்டு மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்வதற்கு உயர் பாதுகாப்பு வலயம் ஒரு தடைக்கல்லாக இருந்தது. தொடர்ச்சியான போர் காரணமாக அநேக புற்றுநோயாளர்களின் பரிதாப நிலை இதற்கு மேல் மக்கள் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இக்கட்டான இந்நிலைமையை விருத்தி செய்யும் நோக்குடன் பல சமயத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் அடங்கிய சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஸ்தாபிக்கப்பட்டது.

### தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீள இயங்கவைக்க எடுத்த முயற்சி

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு, அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீள இயங்கச் செய்வதற்குப் பலாலியில் அமைந்திருக்கும் பாதுகாப்புத் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளுடன் நடத்திய பலதரச் சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் மனிதநேய அடிப்படையில் 1998ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது.

பலதரப்பட்ட 'சிவப்பு நாடா'வுக்கு மத்தியில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் உதவியுடன் போரினால் சேதமுற்ற கட்டடங்கள் 3.6 பில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டன. சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்பட்ட கோபால்ட் யுனிட் (Cobalt Unit), எக்ஸ்ரே பிரிவு, ஆய்வுகூட வசதி இல்லாமையால் தடங்கல் ஏற்பட்டது. சுகாதார அமைச்சில் நிதிப் பற்றாக்குறை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு, ஜப்பானிற்கான இலங்கை உயர் ஸ்தானிகரிடம் ஜப்பான் அரசிடமிருந்து மனிதநேய அடிப்படையில் உதவி பெற்றுத்தருமாறு வேண்டியது. போர்நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது தற்காலிகமாக மஹரகமவில் இருந்து வைத்திய நிபுணர் மாதமொருமுறை தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நோயாளிகளைப் பார்வையிடுகின்றார்.

தற்பொழுது உலக வங்கியின் ரூபா 12 கோடி நிதியுதவியுடன் இந்த சிகிச்சை நிலையத்தைத் துரிதமாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வருட இறுதிக்குள் புற்றுநோய் சிகிச்சை நிலையம் மீள இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பொது அமைப்புக்களின் சேவை வடமாகாண புற்றுநோய் சிகிச்சைச் சங்கம்

தற்பொழுது மேற்குறிப்பிட்ட சங்கம் வடமாகாணப் புற்றுநோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம் என்ற பெயரில் இயங்கிவருகின்றது. பொதுமக்களிடையே இந்நோய்கள் சார்பான விழிப்புணர்ச்சியை சுகாதாரக் கல்விச் செயற்பாடுகள் மூலம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

சு. பரமநாதன்
தலைவர், யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம்.

பாடசாலைகள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், சிகிச்சை நிலையங்கள், மாதர் சங்கங்கள் போன்ற பொது இடங்களில் கருத்தரங்குகள், வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் அவர்களின் தலைமையில் வாய்ப்புற்று நோய், மார்புப் புற்றுநோய் பரிசோதனைகளையும் நடத்தி வந்தார்கள். தொடர்ந்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 50 புற்றுநோயாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 500/= வீதம் உதவிப் பணமாக வழங்குகிறார்கள். மேலும், இவ்வரிசையிலிருக்கும் 50 நோயாளிகளுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஊரெழு சுன்னாகத்தை வதிவிடமாகக் கொண்ட தம்பிமுத்து தம்பிராசாவும், அவரது மனைவி பரிபூரணமும் நன்கொடையாக வழங்கிய 15 பரப்புக் காணியில் குணப்படுத்தப்படாத புற்றுநோயாளிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள 'புற்றுநோயாளர் விடுதியை' மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் சமய சொற்பொழிவுகளை நடத்தி வரும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் உதவியுடன் பண வசதியற்ற புற்றுநோயாளிகளின் அவசர சிகிச்சைக்கு நிதி உதவி வழங்குவதற்கு லண்டன் சிவயோகம் அறக்கட்டளை கடந்த சில வருடங்களாக உதவி வருகின்றது.

புற்றுநோயால் பாதிப்புற்றிருக்கும் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று நடமாடும் சிகிச்சைச் சேவையை நடத்தி வருகின்றார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் புற்றுநோயாளிகளுக்கு மேற்படி இரு கழகங்களும் சேவையாற்றிவருகின்றன.

### வடகிழக்கு புற்றுநோய் சங்கம்(CANE)

வசதியற்ற புற்று நோயாளிகளின் நலன் கருதி இச்சங்கம் அண்மையில் நடமாடும் சேவையை நடத்தி வருகின்றது. இச்சேவை தொடர்ந்து நிரந்தரமாக நடைபெறும் பொழுது அடிப்படை வசதியில்லாமல் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்து வருகின்ற புற்றுநோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பொது அமைப்புக்கள் மற்றும் புற்று நோயாளர்களுக்கு உதவி வழங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து ஒன்றியமாகச் செயற்படும் பொழுது வாத, விவாதம் மூலம் புற்று நோயாளிகளின் முன்னுரிமைத் தேவைகளைத் தீர்மானிக்கலாம்; இரட்டிப்புக்களைத் தவிர்க்கலாம்; அனுபவமுடையவர்களின் அறிவுரையைப் பெறலாம்.

### புற்று நோயாளிகளுக்குப் பயன்தரு சேவையாற்றுவதற்கு

★ நோய்தவிர்த்தல் கண்காணிப்பு முறை,

★ நோய் குணப்படுத்தல் சிகிச்சை முறை

என 2 பிரிவுகளாக இனம் காணும் பொழுது பொது அமைப்புக்கள் அவர்களின் ஆற்றலுக்கேற்ப சேவையாற்றலாம்.

### வடமாகாணத்தில் புற்றுநோயைக் கட்டுப்படுத்துதல்

மக்கள் நாளாந்தம் சாப்பிடுகின்ற உணவு குடிதண்ணீரூடாக புற்றுநோய் பரவுவதாகப் பல ஆய்வுகள் உலக ரீதியாக வெளியிடப்பட்டிருக்கின்றன. வடமாகாணத்தில் 60 சதவீதத்தினர் விவசாயிகள். இவர்கள் பயிர் அறுவடையை அதிகரித்து, கூடிய இலாபத்தைப் பெறும் நோக்குடன் இயற்கைப் பசளைக்குப் பதிலாக இரசாயன உரங்களையும் கிருமிநாசினிகளையும் உபயோகிக்கின்றார்கள். இதன் காரணமாகவே நாம் உண்ணும் மரக்கறிகள், பழவகைகளில் நச்சுத்தன்மை அதிகளவில் உள்ளதாக ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன.

மேலும் விவசாயிகள் கட்டுப்பாடற்ற முறையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதால் மண்ணினூடாக உட்செல்லும் நச்சுப் பொருள்கள் நன்னீரை மாசுபடுத்துகின்றன. மேலும் தொழிற்சாலைகளூடாக வெளியேற்றப்படும் கழிவு நீர் குளங்கள், ஏரிகள் சுற்றாடல்களையும் மாசுபடுத்துகின்றது. இந்நிலைமை மேலும் விரிவடையாமல் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடமும், விவசாயத் திணைக்களமும் முன்னேற்றகரமான பல நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

முதற்கட்டமாக விவசாய பீடத்தின் சகல வசதிகளும் அடங்கிய ஆய்வுகூடம் அமைக்கப் பெற்று, இந்நிலையத்திற்கு நிரந்தர நிபுணத்துவ உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்று விவசாயிகளுக்கு அறிவுரைகளையும் செய்முறைகளையும் வழங்கி, விவசாய செய்முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

மக்களையும் கால்நடைகளையும் புற்றுநோய்ப் பீடையிலிருந்து விடுவிப்பதற்கும் சுற்றாடலை மாசுபடாமல் பேணிக் காப்பதற்கும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடமும் விவசாயத் திணைக்களமும் முன்னோடிகளாக திகழவேண்டுமென்பதே மக்களின் அபிலாசை.

# சமூக நியமங்கள் சீர்குலைந்து போகுமாயின் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும்

வீடு, குடும்பம் என்பவற்றின் இழப்பினால் ஏற்படும் துயரம் இயற்கையாக எதிர்பார்க்கக் கூடியதாகும். பிள்ளைகள் அந்த இழப்பைப் பற்றிக் கதைப்பதற்கும் அல்லது அந்த இழப்புக்களுடன் தொடர்பான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

துணையற்ற சிறுவர்கள் தெருவில் அலையும் சிறுவர்களாக வாழும் பயங்கரநிலை சில நகரங்களிலுண்டு. எமது நிலைமையில், இவ்வாறான பிள்ளைகள் வேறு நடவடிக்கைகளில் (உதாரணமாக போரில்) ஈடுபடுத்தப்படும் அபாயம் இருக்கின்றது.

சில குடும்பங்கள் தமது பிள்ளைகளைத் தாமே கைவிடும் நிலையும் காணப்படலாம். இத்தகைய குடும்பங்களில் -

★ அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகள் பூர்த்திசெய்யப்படமுடியாத நிலை காணப்படும். அந்நிலையை மாற்றுவதற்கு, சமூகத்திலிருந்து எந்தவோர் உதவியும் கிடைக்காமலிருக்கும்.

★ பிள்ளைகளைப் பற்றியும் தம்மைப்பற்றியும் தமது எதிர்காலம் பற்றியும் நம்பிக்கையின்மை, நிச்சயமற்ற தன்மை என்பன காணப்படலாம்.

★ சுகவீனம், மிகுந்த வறுமை போன்றவை பெற்றோரை உடல், உள ரீதியாகத் தாக்குவதால் பிள்ளைகளைக் கவனிக்க முடியாமல் போகின்றது.

★ ஒரு பிள்ளை உடலாரோக்கியம் நலிவுற்று, அதிலிருந்து மீள முடியாதிருக்கலாம்.

எமது சமுதாயத்தில், பொதுவாக பிள்ளைகளை அநாதை இல்லங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் போன்றவற்றில் விடப்படும் நிலைமை சமீபகாலத்தில் அதிகரித்துச் செல்கிறது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், அவர்களை உடல், உளரீதியாகப் பாதிப்பிற்குட்படுத்தல் போன்றவற்றை சிறுவர் துஷ்பிரயோகம் என்று அழைக்கலாம். இதனால், அவர்களது உடல், உள விருத்தி பாதிக்கப்படும்.

### சிறுவர் துஷ்பிரயோகம் பின்வரும் வகைகளை உள்ளடக்கும்.

- உடல் ரீதியாகக் காயப்படுத்தல்.
- விபத்து அல்லாத அனைத்துக் காயங்களையும் ஏற்படுத்தும் செயற்பாடுகள்.
- தகுந்த முறையில் உணவு அளிக்கத் தவறுதல்.
- அரவணைப்பு மற்றும் தகுந்த மருத்துவ சிகிச்சை அளித்தல் என்பவற்றில் இருந்து தவறுதல்.
- கைவிடுதல்.
- தொழில் செய்வோர் அடக்குதல்.
- பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுதல்.
- போரில் ஈடுபடுத்துதல்.

பெற்றோர்கள், பாதுகாவலர்கள் குழந்தைகளுக்கான உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு மற்றும் மருத்துவக் கவனிப்பு என்பவற்றைக் கவனிக்கவேண்டிய கடப்பாடு உடையவர்கள். இவ்வாறு செயற்படத்தவறின் அவர்கள் தமது பிள்ளைகளைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதுடன், வேறு நபர்களும் அப் பிள்ளைகளை, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுப்பவர்கள் ஆகின்றனர்.

நாம் அன்றாடம் சந்திக்கும் சிறுவர்களில் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம். எனவே, நாம் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அறிந்திருப்பதன மூலமும், இவ்வாறான பிள்ளைகளை அடையாளங்கண்டு உதவுவதன் மூலமும் வளமான சந்ததியை உருவாக்க முடியும்.

இளம் சிறார்கள், ஆண், பெண் இருபாலாரும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகலாம். நெருக்கடியான சூழல், சமூக நியமங்களை சீர்குலைப்பதனால், குடும்ப மட்டத்திலேயே பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு வழி வகுக்கிறது.

இத்தகைய நிகழ்வுகள் அச்சம், அவமானம் பற்றிய பயம் போன்ற பல காரணங்களால் மறைக்கப்படுகின்றன. உல்லாசப் பயணத்துறையின் தாக்கத்தினால், பாரிய அளவில் நிகழும் வர்த்தக நோக்கிலான சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் கவலைக்குரியது.

வெளியீடு:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு (DCPC)
அறை எண் 30
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-2225657
மின்னஞ்சல் :dcpc - jaffna@yahoo.com
இணையம் : www.pillaii.com

"லயம்" நுண்கலை பயிலகம்
(வண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

**மிருதங்க வகுப்புகள்**

புதிய மிருதங்க வகுப்புகள் 23.10.2004 சனிக்கிழமை விஜயதசமி அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
620, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(37615)(42-11-19-24)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

துரிதமாகவும் துல்லியமாகவும் ஆங்கிலத்தைக் கற்க ஓர் அரிய வாய்ப்பு.
மாணவர்கள், அலுவலர்கள், வேலையை எதிர்பார்த்திருப்போர், வெளிநாடு செல்ல விரும்புவோர் அனைவருக்கும் உங்களுக்கேற்ற நேரங்களில் உங்கள் வீடுகளில் வந்து கற்றுத்தரப்படும்.
உடன் தொடர்பு:- G.கரன்
(37549) **T.P.: 077 6258344** (24-11-19)

# கேள்வி அறிவித்தல்
## வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை நூலக புனரமைப்பு வேலை | 500.00 | 5000.00 | எம் 8 |

01) அ. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08உம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
ஆ. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ)இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02) கேள்விப் பத்திரங்களில் பெறுமதிசேர் வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை பெறுமதி சேர் வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03) மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரன் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 18.10.2004 ஆம் திகதியிலிருந்து 22.10.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப் பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு, கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு, ஒட்டப்பட்டு ஒப்பந்ததாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார் மடத்திலுள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05) தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி றெஜினா இருதயநாதன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.
(சி-38242) (24-11-19)




**வான் விற்பனைக்கு**

**TOYOTA HIACE**
(Full SEAT, Full A/C)
மிக நல்லநிலையில், சொந்தப் பாவனையில் உள்ள வான் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 09, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
(37610)(42-11-19-24) **T.P.: 0776354237**

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY :
ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/36810)




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

**வாடகைக்கு / குத்தகைக்கு**

இல.312, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகள், பல்கலைக்கழகத்துக்கு அண்மையாக உள்ள நல்ல வீடு வாடகைக்கு / குத்தகைக்கு விடப்படும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

இரண்டு அறைகள், விறாந்தை, ஹோல், குளியலறைகள் என்பனவற்றுடன் முதலாவது மாடியில் 4 அறைகள், 2 குளியலறைகள், மலசலகூட வசதிகளுடன் -


இரண்டாவது மாடியில் 2 அறைகள், பெரிய ஹோல், மலசலகூட வசதிகளுடன் கூடியது.

☞ வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

விவரங்களுக்கு:
R.செல்வநாயகம்,
மூத்ததம்பி லேன், மானிப்பாய்.
(37644)(42) **T.P.: 6111**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
11 - 01 - 1963



இறைவன் அடியில்
13 - 10 - 1999

### அமரர் கந்தையா சிவகுமார் (சிவா)

ஈரவிழி காயவில்லை ஆனதோ ஆண்டுகள் ஐந்து!
ஆறாது எம்துயர் காலங்கள் சென்றாலும்,
ஓயாது உன் நினைவு என்றென்றும் எமைவிட்டு!
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*268/5, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37659)(42-11-19-24)

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 - 02 - 1915



உதிர்வு
18 - 10 - 2003

### திருமதி செல்லம்மா சிற்சபேசபிள்ளை
கனடா (சுதுமலை).

இத்தனை முதுமையிலும் இன்பமுடன்
இதழ் விரித்த உன் வதனத்தை
இனி எப்போ நாம் காண்போம்?

உன் நினை உயிரில் கலந்த உறவுகள்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

தகவல்: றதிஷா கருணாகரன்
(சுவிஸ் - பேரப்பிள்ளை). (C/38239)(42-11-19-24)

# பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்திய தமிழ் இலக்கிய விழா

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், கடந்த

பண்பாட்டுப் பேரணியில் கலந்து கொண்ட ஊர்திகளில் ஒன்று.




9 ஆம் , 10 ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தமிழ் இலக்கியப் பெருவிழா நிகழ்வுகள் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்றன.

மூன்று நாள்களும் நிகழ்வுகள் நேரம் தவறாது ஆரம்பித்து நடைபெற்றமை நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமையை எடுத்துக்காட்டியது.

காலை நிகழ்வு, மாலை நிகழ்வு என வகுத்து நிகழ்வுகள் நடத்தப்பட்ட இந்த விழாவில், காலையில் கற்றுத்தேர்ந்த அறிஞர்களின் ஆய்வரங்குகள் நடைபெற்றன. மாலை நிகழ்வுகளாகக் கலைகளின் மூலம் தமிழை



ஆய்வரங்கில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

உணர்த்தும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விசேடமாக இறுதிநாள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பண்பாட்டு ஊர்வலம் பார்ப்போரை வியக்கவைக்கும் - சிந்திக்க வைக்கும் - நிகழ்வாக அமைந்திருந்தது.

### ஆய்வரங்கு

தமிழின் வளர்ச்சி, பெருமை, தமிழ்க்கல்வி என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் 'ஈழத்தின் கல்வி அறிவியல்சார் எழுத்துக்கள் வரலாற்று விமர்சன நோக்கு' என்ற தலைப்பில் ஆய்வரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் இடம்பெற்ற முதலாம் நாள் ஆய்வரங்கில், கலாநிதி க.ரகுவரன், 'மேல் நாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவிலக்கியப் பாரம்பரியம்' என்னும் தலைப்பிலும் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் 'போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் கல்விசார், அறிவியல்சார் நூல்கள்' என்னும் தலைப்பிலும் தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இதில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனின் 'பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் மிசனறிகளின் செயற்பாடு' என்னும் தலைப்பிலான ஆய்வறிக்கையும் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் ஆய்வரங்கில், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 'நாவலர் கல்வி முறை' என்னும் தலைப்பிலும் கலாநிதி செ.யோகராசா, '1900 - 1950 காலப் பகுதியில் பாடப்புத்தகங்கள், துணைப்பாடப் புத்தகங்கள்' என்னும் தலைப்பிலும் பேராசிரியர் சபா.ஜெயராசா 'தமிழ் மொழிக் கல்வி - மொழிபெயர்ப்புக்கள் கலைச் சொல்லாக்கம்' என்ற தலைப்பிலும் தமது ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இதில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுருவின் 'பாடநூல்களில் பெண்கள்' என்ற ஆய்வுக்கட்டுரையும் வாசிக்கப்பட்டது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் இடம்பெற்ற மூன்றாவது நாள் ஆய்வரங்கில் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் 'தமிழ் மொழிக் கல்வியியல் எழுத்துக்கள்' என்ற தலைப்பிலும் செம்பியன் செல்வன் 'கல்வியியல் நோக்கு - நவீன போக்குகள்' என்னும் தலைப்பிலும் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இதில் ஜனாப் ரமீஸ் அப்துல்லாவின் 'கல்விசார் இஸ்லாமிய -அரபுப் பாட நூல்கள் சில அவதானங்கள்' என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையும் வாசிக்கப்பட்டது.

பல அறிவியல் கருத்துக்களையும் தெளிவுகளையும் வெளிப்படுத்திய இவ்வாய்வரங்கில் தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து பயன்பெற்றனர்.

### நூல் கண்காட்சி

தமிழ் இலக்கிய விழாவில் குறிப்பிடக்கூடிய ஓர் அம்சம் நூல் கண்காட்சி. தமிழ் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் அறிவியல் அம்சங்களையும் வெளிப்படுத்தும் நூல்களின் தொகுப்பாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. ஈழத்தின் மூத்த இளைய தலைமுறை அறிஞர்களின் ஆக்கங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

### கலை நிகழ்வுகள்

தமிழ் இலக்கிய விழாவின் சிறப்பு அம்சமாகக் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. சங்கீத பூசணம் தமிழிசை நமசிவாயம் அரங்கில் இடம்பெற்ற முதலாம் நாள் கலை நிகழ்வுகளில் 'சுழலும் சொற்போர்', யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் நடனம் 'இசைக் கோலம்', முள்ளியவளை தமிழ் வித்தியாலய மாணவர்களின் 'பண்டாரவன்னியன்' நாடகம், யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் 'சத்திய வேள்வி' என்பன நடைபெற்றன.

கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அரங்கில் இரண்டாம் நாள் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. ஆரம்பத்தில் 'ஈழத்து மரபு வழித் தமிழ் புலமையாளர்கள்', 'புதுத்துளி நூறு ' ஆகிய நூல்களின் வெளியீடுகள் நடைபெற்றன. தொடர்ந்து 'வாலாயமான கவிதை வழக்கு' என்னும் கவியரங்கும், சங்கீதபூசணம் செ.குமாரசாமியின் இசையரங்கும் கொக்குவில் கலாபவனம் மாணவர்கள் - திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாழ்கையில் வழங்கிய நாட்டிய நிகழ்வு, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர்களின் கூத்துலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் 'குருபக்தி' தாளலயக்கதை, வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினரின் 'அடல செறிவீமனும் விராட நாட்டுக் கமுகனும்' என்னும் நாட்டுக்கூத்து என்பன நடைபெற்றன.

### பண்பாட்டு வெளிப்பாடுகள்

தமிழினத்தின் பெருமை, மேன்மை என்பனவற்றை உலகுக்குணர்த்தும் வகையில் இறுதிநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

தமிழரின் கலை, கலாசாரங்களை வெளிப்படுத்தும் வகையில் பண்பாட்டுப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் பிற்பகல 3 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பித்த இந்தப் பண்பாட்டுப் பேரணி, தமிழ்ப் பாரம்பரியங்களை உணர்த்தும் வகையிலான வடிவங்களைத் தாங்கியவாறு அரசடி வீதி வழியாகக் கந்தர்மடச் சந்தியை அடைந்து, அங்கிருந்து இந்து மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

இந்தப் பண்பாட்டு ஊர்வலத்தில், முதலில் தமிழ் இலக்கியங்களை வெளிப்படுத்தும் இலக்கியக் காட்சிகளைத் தாங்கிய ஊர்திகள் உலா வந்தன. பாரம்பரிய ஆட்டங்களான கோலாட்டம் , கரகம், சிலம்படி, காவடி, கும்மி என்பனவற்றை வயது வேறுபாடின்றி சிறியவர், பெரியவர்கள் என நிகழ்த்தியமை கண்கொள்ளாக்காட்சியாக அமைந்திருந்தது.

தமிழர்களின் பண்பாட்டு வாத்தியங்களான பறை, உடுக்கு, மத்தளம், மேளம், நாதஸ்வரம் மற்றும் புல்லாங்குழல் என்பனவற்றின் இசைகளும் காதுக்கினியனவாக அமைந்திருந்தன.

தமிழ்த்தாயின் உருவப்படம் இந்தப் பேரணியில் நடுநயமாக வலம் வந்தது. அத்துடன், வீதியின் இருமருங்கிலும் மகர தோரணங்களும், அலங்கார வளைவுகளும், வீடுகள் தோறும் கும்பங்கள் வைத்துப் பேரணியை வரவேற்றதும் மக்களின் தமிழ் உணர்வை - பண்பாட்டின் செழுமையை - வெளிப்படுத்துவனவாய் அமைந்திருந்தன.

இறுதிநாள் நிகழ்வுகள் கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து அரங்கில் நடைபெற்றன.

### விருதுகள்

இலக்கிய விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வில் 2004ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருதுகளும் 2003ஆம் ஆண்டுக்கான நூல் பரிசுகளும் வழங்கப்பட்டன. விருதுபெறுவோர் பொன்னாடை போர்த்து, விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோர் இந்த விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.

ஆளுநர் விருதை மு.கனகசபை, பி.ஸ்ரனிஸலாஸ், அரியான் பொய்கை செல்லத்துரை,



கொக்குவில் இந்து மாணவிகள் நிகழ்த்தும் தமிழ்த்தாய் வாழ்த்து.

கே.எஸ்.சிவகுமாரன், இரா.சடாட்சரதேவி (குந்தவை), எஸ்.எஸ்.எம்.ஹனிபா ஆகியோரும் -

நூலுக்கான விருதுகளை ஜெயரஞ்சினி ஞானதாஸ் (பல்துறை), பத்மா சோமகாந்தன் (பல்துறை), அன்ரனி நோபேட் (உயர்கல்வி), ஓ.கே.குணநாதன் (சிறுவர் இலக்கியம்), க.சபாரெத்தினம் (பல்துறை), அருணா செல்லத்துரை (நாடகம்), வி.கௌரிபாலன் (சிறுகதை), முல்லை முஸ்ரிமா (கவிதை), சபா.ஜெயராஜா (உயர் கல்வி), முருகேசு பாக்கியநாதன் (பல்துறை), மலரவன் (உயர்கல்வி), தே.தேவானந்த் (நாடகம்), தாமரைச் செல்வி (நாவல்), சோ.பத்மநாதன் (கவிதை மொழிபெயர்ப்பு), வாசுகி



நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வுகளில் ஒன்று.

நடேசன் (பல்துறை) ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 'ஆவண ஒளிப்பேழை' வெளியீடு செய்யப்பட்டது. கண்ணன் குழுவினரின் 'கிழக்கும் மேற்கும் இசைச் சங்கமம்' இசை நிகழ்வு, பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்தினரின் நாடக மேடைப் பாடல்கள், உரும்பிராய் கலைக் கோயில் கலாலயத்தின் 'சீதா அபகரணம்' என்னும் நாட்டிய நிகழ்வு என்பன நடைபெற்றன.

தமிழ் இனத்தின் பாம்பரியங்களையும், தொன்மையையும் வெளிப்படுத்திப் பெருமை பேசிய ஒரு நிகழ்வாக இந்த இலக்கியவிழா அமைந்தது.

தொகுப்பு : தீபா
படங்கள் : தீபன்

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல்முறையாக இந்த இலக்கியவிழா யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பாடசாலைச் சமூகம், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

இறுதியாக இந்த இலக்கிய விழா தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்ததோடு, இலக்கியவாதிகளின் உயர்ச்சிக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் உரம் சேர்த்தது என்றால் மிகையில்லை. ★

# சமாதானம் குறித்த தமிழர்களின் நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்

## யாழ்.வந்த சௌமிய இளைஞர்மன்றத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் கொண்டிருக்கின்ற உண்மையான நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டோம். இந்த நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களின் சந்தேகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் எஸ்.பி அந்தோனிமுத்து.

இடைக்கால நிர்வாகசபை தமக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் மிகுந்த உறுதியுடன் இருக்கின்றனர் என்பதை தாம் தெளிவாக விளங்கிக்கொண்டிருப்பதாகவும் இதனைத் தென்னிலங்கை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதே தமது அமைப்பின் அடுத்த கட்டச் செயற்பாடாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிரந்தர சமாதானத்துக்கான 113 ஆவது சர்வமத தியானப் பிரார்த்தனைக்காகச் சௌமிய இளைஞர் நிதியம் மற்றும் வடக்கு - தெற்கு சமாதான நிதியத்தின் உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியைச் சந்தித்தபின் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அவர்கள் மரம் ஒன்றையும் நட்டுவைத்தனர்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அதன் தலைவர் எஸ்.பி.அந்தோனிமுத்து, மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - தெற்கு மக்களிடம் தற்போதைய சமாதானத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பதனை அறிவதே எமது பயணத்தின் பிரதான நோக்கமாக இருக்கின்றது.

இந்தப் பயணத்தின் மூலம் வடக்கிலுள்ள மக்கள் இடைக்கால நிர்வாகசபை ஒன்று கிடைக்கவேண்டும் என்பதில் அவர்கள் எவ்வளவு உறுதிப்பாட்டுடன் உள்ளனர் என்பதனை நான் இந்த மக்களுடன் உரையாடியதன் மூலம் அறிய முடிந்தது.

இந்த நிலையானது தென்பகுதியிலுள்ள அரசியல்வாதிகளுக்கோ அல்லது தென்பகுதி மக்களுக்கோ தெரியக்கூடிய வாய்ப்பு முழுமையாக ஏற்படவில்லை.

இந்தத் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை நாம் தென்பகுதியிலுள்ள சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்தும் வகையில் அதற்கான வழிவகைகளை மேற்கொள்வோம் - என்றார் அவர்.

'யாழ்தேவி' எனப் பெயரிட்டு இங்கு வந்துள்ள இவர்கள், மீண்டும் யாழ்.மண்ணில் 'யாழ்தேவி' ஓடவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு பெயர் சூட்டியிருப்பதாகக் கூறினர்.

(4-6-5)

# அறிவுறுத்தல் கூட்டம்

'மாணவர்களின் பாடசாலை வரவை மேம்படுத்தலும், கல்வியில் அக்கறை கொள்ளச் செய்தலும்' என்பவை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்குப் பொம்மைவெளி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஜே/88 பிரிவின் கிராம சேவையாளர் எஸ். சகுந்தலாதேவி தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினரும் இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் மு.செல்லையா, ஆசிரியர்களான சி. உமாச்சந்திரன், திருமதி தி.கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டு அறிவுறுத்தல்களை வழங்குவர்.பொம்மைவெளி, ஓட்டுமடம், ஆறுகால் மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர் இக்கூட்டத்தில் கலந்து பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-202)

# அநுராதபுர தமிழ் வித்தியாலய வைரவிழாவுக்கு ஏற்பாடுகள்

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தின் வைரவிழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

வைரவிழாவை முன்னிட்டு மலர் வெளியிடவும் பாடசாலை வாசலில் தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் அலங்கார வளைவு ஒன்றை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும் இப்பாடசாலையை முன்னேற்றவும் தமிழர்களின் இருப்பை பறைசாற்றவும் இந்த விழாவைக் கொண்டாடப் பழைய மாணவர்கள்,அநுராதபுர வாழ் மக்கள் நலன்விரும்பிகள் தமது ஆதரவு வழங்க வேண்டுமென அநுராதபுரம் விவேகானந்த சபையினர் கேட்டுள்ளனர்.

(எ-204)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வப் புதல்வன் ஆகாஷ்




அரச வீதி, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த
சிவக்குமாரன் - ஜெயசுதா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**ஆகாஷ்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (17-10-2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் (10Barker close New Malden 473, 37B U.K.) உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

ஆகாஷ் குட்டியை, வதிரியில் வசிக்கும் அம்மம்மா, விஜி அன்ரா, நகுலன் மாமா, பபி அன்ரா (லண்டன்) மற்றும் சித்தங்கேணியைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, அத்தைமார், மாமாமார், மச்சாள்மார் மற்றும் லண்டனைச் சேர்ந்த அம்மப்பா, பாட்டா, பெரியம்மாமார், சகோதரங்கள் மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த அம்மம்மா, சித்தி, மாமா, அப்பப்பா அனைவரும் வதிரி உல்லிய நெல்லை அம்பாள் ஆலய அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

அரசடி வீதி,
வதிரி, கரவெட்டி. (37672) (24-26-14-44)

- அன்பு மாமா
நகுலன்.

## குருக்கள் தேவை

கொழும்புத்துறை ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயிலில் மூன்றுகால நித்தியபூசை மற்றும் நைமித்திய பூசைகள் செய்வதற்கு உத்தம, சற்குண சிவாச்சாரியார் தேவை.

☆ இருப்பிட வசதியுண்டு, சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு: (37674)(39-14-44-26)
த.தியாகராசா, தலைவர் நிர்வாகசபை,
22, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்துமகளிர் ஆரம்பப்
பாடசாலை மாணவியும்
கோண்டாவில்
மிசன் பாடசாலை வீதி,
ஞானவைரவர் ஆலய
நித்திய பூசகரான
சிவஸ்ரீ த.ரவீந்திரராசா ஐயா - மதிதேவி
அவர்களின்
செல்வப் புதல்வியுமான

**செல்வி துளசிகா**

அவர்கள் 2004ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 129புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், நெறிப்படுத்தி, அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

ஞானவைரவர் ஆலய
வழிபடுவோர் சமூகம்.
(37687) (26-14-44)

## முதலாம் வருட இதய அஞ்சலி



அமரர்

**இராசதுரை றயந்தன்**

(உரிமையாளர், நியூ ஆனந்தா நகைமாடம், யாழ்.)

தோற்றம் 15-02-1973 மறைவு 29-10-2003

*ஓராண்டும் ஆயிற்றோ ஒளிவிளக்கு அணைந்து!*
*தீராத வேதனையால் தினமும் தவிக்கின்றோம்*
*வேராக நீரிருந்தீர் குடும்பத்தின் வளர்ச்சிக்காய்*
*ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.*

52/2, வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.
(37679) (26-14-44)

அன்பு மனைவி, மக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்.

## புனர்வாழ்வு நிறுவன தொண்டர் சங்கமம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தொண்டர்களுக்கான சங்கம நிகழ்வு நேற்று சனிக்கிழமை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

எயிட்ஸ் விழிப்புணர்வுக் குழுவினரால் பயிற்சிகள் வழங்கப்பட்ட தொண்டர்களுக்கு சங்கம நிகழ்வின் இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(4-7)

## பருத்தித்துறையில் சிறந்த பண்ணையாளர் கௌரவிப்பு

வடமராட்சி,ஒக்.17

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியசாலை பிரிவில் நடத்தப்பட்ட சிறந்த பண்ணையாளர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசளிப்பு விழா புலோலி கமநல சேவை நிலையத்தில் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசிகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைகள பதில் உதவிப்பணிப்பாளர் ஆர்.உருத்திரேஸ்வரன், கரவெட்டி அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சரோஜினி, சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 15 குடும்பத் தலைவர்களுக்கு பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி ஊழியர் நலன்புரிச்சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

(எ-173)

## வீடு வாடகைக்கு

நல்லூர் குறுக்குவீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு, அரச/அரசசார்பற்ற (N.G.O.) நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 0777 325545, 021 222 7237.

(சி-38256)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், முதலியார் கனகசபை வீதியில் அமைந்துள்ள வீடும் ஆதனமும் சேர்ந்து நில.பர. நான்கு (4) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

அற்றோனி தத்துவகாரர்,
சுப்பிரமணியம் லீலாக்கிருஷ்ணன்
முதலியார் கனகசபை வீதி, மானிப்பாய்
அல்லது "விமாகி" மேதர்ஸ் ஒழுங்கை,
(37685) மானிப்பாய்.

## பெண் பொறுப்பதிகாரி தேவை

பருத்தித்துறையில் இயங்கவிருக்கும் மகளிருக்கு மட்டுமான வாசிகசாலை, நூல்நிலையம் மற்றும் சேவைகள் நிலையத்திற்கு தகுதிவாய்ந்த பெண் பொறுப்பதிகாரிகள் தேவை. கணனி உபயோகிக்கக்கூடிய (Ms Office) மற்றும் ஆங்கிலம் தெரிந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்கள் சுயவிவரக் கொத்தை ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பரதாரர்
ஆனந்த இல்லம்,
(ANANDA COT)
சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி.
(37683) தம்பசெட்டி. பருத்தித்துறை.

## SRI LANKA RED CROSS SOCIETY

## VACANCIES

**School based Helth and Psychosocial Program for Children in Jaffna District**

1. PROJECT COORDINATOR
1.1. Qualifications:-
He/She should have a Degree Sociology or in the relevant field.
and/or
Diploma in Social work with woking experience in the relevant field.
or
10 Years working experience in the relevant field.
Fluency in written and spoken English and Computer Literacy is essentis!
Age below 55 Years.

2. ACCOUNTANT - 02 Positions:
2.1. Qualifications:-
He/She should be partly qualified in either CIMA or Chartered Accountancy or AAT stage III with full membership
or
Higher National Diploma in Accountancy (HNDA) from a recognized Institution .
or
10 Years working experience as an Accountant in a Public/Private or NGO sector organization.
Relevant working experience preferred
Competency in Accountancy software will be an added qualification.
Computer Literacy and English knowledge is essential.
Age Below 55 Years.

Job Specifications are available at the following office.
Send in your applications on or before 25th of October 2004 with complete CV along with copies of relevant certificates to:

**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna.

Only short listed candidates will be called for an interview.

(C/38257)(42-14-44-26)

## கண்ணீர் அஞ்சலி

புதிய உயர்கல்லூரியின் வெளிவாரிப் பட்டப்படிப்பு
மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர்
கு.ரஜீவன் அவர்களின் மாமனாரும்
தற்போதைய இந்த ஒன்றியத்தின் செயலாளர் R.தர்மினி
அவர்களின் தந்தையாருமான

**அமரர் கந்தையா கருணானந்தம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவ ஒன்றியம்,
புதிய உயர்கல்லூரி, ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(37690) (26-14-44)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து சுந்தரலிங்கம்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (16.10.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து - அன்னம்மாவின் மகனும் நல்லதம்பி - ஆச்சிமுத்துவின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தங்கேஸ்வரன் (சுவிஸ்), தயாநிதி (பிரான்ஸ்), சிவநிதி (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுமதி (சுவிஸ்), மனோஜெயந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், சுதர்சன், கிஷாந, கிருஷ்ணி, கிதுஷன், அபிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தி ஓடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை வடக்கு VC அடி.*
(37687) (24-14-44-26)

தகவல்:
திருமதி சந்திராதேவி சுந்தரலிங்கம்
(மனைவி).

### சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை

*(கிளாக்கர்)*

(ரொரன்ரோ - கனடா)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, மானிப்பாய் ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது ரொரன்ரோ, கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை (கிளாக்கர்) அவர்கள் 09-10-2004 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகரெத்தினத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - கனகம்மாவின் அன்பு மருமகனும் இராசலெட்சுமியின் பாசமிகு கணவரும் கவிதா (கனடா), அமுதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காசிதரனின் மாமனாரும் ராஜவதி (கனடா), காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் சோமசுந்தரம், தியாகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலெட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம் மற்றும் நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் மோகன் (கனடா), ராஜன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-10-2004 கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

116/1, ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.
(37675) (26-14-44)

*தகவல்:*
S.சிங்கராசா - *மருமகன்,*
S.வவி - *பெறாமகள்.*

# ஆனந்தசங்கரிக்கு தன்மானத் தமிழனின் பகிரங்கக் கடிதம்

ஆனந்தசங்கரி அவர்களுக்கு!

தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு நீங்கள் கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகப் பத்திரிகைகளில் வாசித்து அறிந்தேன்.

பொதுத்தேர்தல் படுதோல்வியோடு, வெளிநாட்டுச் சுற்றுலா என்ற பெயரில் இங்கில்லாது போன நீங்கள், மீண்டும் 'தமிழர் விடுதலைக் கூட்டணி' பெயரிலான கடிதத் தலைப்போடு உங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டீர்கள்.

வெளிநாட்டில் ஏந்திய கைகளுக்குக் கிடைத்த சன்மானத்துக்கு கைமாற்றாக அங்கு ஏவப்பட்ட பணியை நீங்கள் ஆற்றுகின்றீர்கள் என்பது எங்களுக்குப் புரிகின்றது.

தலைவர் பிரபாகரனுக்கு அரசியல் விவகாரங்களில் ஆலோசனைக் கடிதம் வரையும் தகுதியும், தைரியமும் உங்களுக்கு உள்ளதாக நீங்கள் கருதும்நிலை இருப்பது ஈழத்தமிழர்களின் துரதிர்ஷ்டமேயன்றி வேறில்லை.

கருணா என்ற தனிமனிதப் பிறழ்வுடன் - நம்பிக்கைத் துரோகியுடன் - ஒரு விடுதலைப் போராட்டத் தலைவரை இணங்கிப்போக ஆலோசனை கூறுகின்றீர்கள்.

கருணாவின் தூத்தில் இருக்கும் உங்களுக்கு 'ஜாரியான' கருணாவுடன் நீங்கள் இணங்கிப் போவதன் வெளிப்பாடே இக்கோரிக்கையன்றி வேறில்லை.

கருணாவின் கழுத்தில் விழக்கூடிய யமனின் பாசக் கயிற்றிலிருந்து கருணாவை விடுவித்தால், உங்கள் பக்கமும் யமனின் வருகை இருக்கும் என்ற பயத்திலிருந்து நீங்கி விடலாம் என நப்பாசை கொள்கின்றீர்கள் போலும்.

ஐயா சங்கரியாரே! இப்போது நீங்கள் அரசியலில் போக்கிடமற்ற அநாதை, வெறும் துரும்பு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடிதத் தலைப்புத் தவிர, உங்களுக்குத் தடுப்புச்சுவர் வேறேதுமில்லை. எனவே, உங்களுடன் மினக்கெடுவதற்கு புலிகளுக்கு தேவையோ, அர்த்தமோ, நேரமோ இருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

எனவே, பயமின்றி உங்கள் பித்தலாட்டத்தை நீங்கள் தொடருங்கள், 'என்ன வேடிக்கை மனிதர் இவர்!' என்று ஒரு விதூஷகனைப் பார்த்து, அனுபவிக்கும் வாய்ப்பு தமிழருக்குத் தொடரட்டும்.

கருணாவைப் போன்று பல துரோகங்களைத தமது விடுதலைப் போராட்டத்தில் கண்டவர் தலைவர் பிரபாகரன், அந்தத் துரோகத் தூசுகளின் பட்டியலில் மற்றொரு தூசாக வலம் வரும் தாங்கள், விடுதலை வேள்வியின் தாற்பரியம் புரியாமல் உங்களின் குள்ளநரித்தனமான அரசியலின் அங்கமாக அதைக் கருதி 'தத்துவம்' பேச முனைகின்றீர்கள்.

"நீங்கள் கேட்பதை சிங்களவர்களும், முஸ்லிம்களும் தருவார்களா?" - என்று தலைவர் பிரபாவிடம் நீங்கள் உங்கள் கடிதத்தில் கேட்பதில் விந்தையில்லை.

ஏனென்றால் கேட்டும், இரந்தும் பெறும் பிச்சைதான் உரிமை என நினைப்பவர் - கருதிச் செயற்படுபவர் - நீங்கள்.

இந்தியாவிடமும், பிற ஈழத்தமிழர் விரோத சக்திகளிடமும் ஏந்திப்பெற்ற பிச்சைக்காக நீங்கள் அப்படித்தான் கேட்க வேண்டும். வேறு வழியில்லை.

"நீங்கள் கேட்பதற்கு உடன்படும் ஏதேனும் அரசு, அதன்பின் பதவியில் நிலைக்கமுடியுமா?" - என்று தலைவரைப் பார்த்து வினாவுவதன் மூலம் அவர்கள் தரக்கூடியதை மட்டும் கேளுங்கள் என்கிறீர்கள்.

நல்லது. சங்கரி ஐயோவே!

கடந்த ஐம்பது ஆண்டு காலம் ஈழத்தமிழரை ஏமாற்றி, நீங்களும் உங்களைச் சார்ந்தோரும் நாடாளுமன்றை அலங்கரிப்பதற்காக காலத்துக்குக்காலம் முன்வைத்த கோரிக்கைகள் எவையேனும் அவ்வப்போது இருந்த அரசுகளால் நிறைவேற்றப்பட்டனவா? தரப்பட்டனவா? அவை தரமாட்டா என்பதற்காக நீங்கள் கேட்காமல் விட்டீர்களா? இடைக்கால நிர்வாகமே இன்று எட்டமுடியாது என்று இப்போது கூறும் நீங்கள் தானே சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்னர் 'தனித் தமிழீழம்' என்று பெரும்கதை அளந்தீர்கள். [illegible]01 தேர்தல் வரை அதே கயிற்றை அ[illegible]த்து விட்டீர்கள்.

தலைவர் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை ஈழத்தமிழர்களுக்கு நியாயமானதை அவர்கள் கேட்கிறார்கள். கொடுக்க வேண்டியது அரசின் கடமை. தவறினால் பிடுங்கி எடுக்கவும் முடியும்; எடுக்கவும் அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அதை அவர்கள் கேட்கின்றார்கள்.

இப்போது உயிரிழப்புப் பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கும் நீங்கள், "அடுத்த மேதினம் தமிழீழத்தில்!" என்ற நிறைவேற்ற முடியாத விவகாரத்தை உங்களின் அந்நேரத் தலைவருடன் சேர்ந்து தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றலாகச் சுற்றிப் பேய்க்காட்டிய போது ஒரு தடவை சிந்தித்திருக்கலாம்.

உங்களைப்போன்று வாக்குகளுக்காக மணலைக் கயிறாகத் திரிக்கும் வாக்குறுதிகளை அவிழ்த்து விடுபவர்களல்லர் புலிகள்.

சொன்னதைச் செய்யவும், செய்வதைச் சொல்லவும் திராணியும், வீரமும், வலுவும் பொருந்திய விடுதலைப் போராளிகள் அவர்கள்.

அவர்கள் வெற்றுவேட்டு அரசியல்வாதிகளாக நினைத்து நீங்கள் பிரபலாபிப்பது உங்களின் அறியாத்தனத்தைக் காட்டுகிறதே அன்றி வேறில்லை.

உங்கள் கடிதத்தில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமாக நீங்கள் முதலைக் கண்ணீர் வடிப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிய புலிகளின் திட்டம், இலங்கை அரசு பரிசீலிக்கக்கூடிய ஒன்றல்ல என்றும் நீங்கள் கூறியிருக்கின்றீர்கள்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னரே இந்த யோசனையைப் புலிகள் முன்வைத்து விட்டனர். அதுமட்டுமல்ல, அந்த யோசனையை தேர்தலில ஒரு பிரேரணையாக முன்வைத்தே ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகள் போட்டியிட்டு தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவோடு தெரிவானார்கள். இந்தத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை ஈழத் தமிழர்களால் - வாக்கெடுப்பு மூலம் - அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்பதை மறந்துவிடாதீர்கள்.

இன்று, அதற்கு நீங்கள் கொடுக்கும் பொருத்தமற்ற வியாக்கியானத்தை - தேர்தலுக்கு முன்னர் நீங்கள் கொடுத்திருப்பீர்களேயாயின், கடந்த பொதுத்தேர்தலில் உங்களுக்கு கிடைத்த ஐயாயிரம் வாக்குகளும் ஐநூறாகியிருக்கும். தப்பிவிட்டீர்கள் போங்கள்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்திய அரசமைப்பு மாதிரியில் தீர்வு என்பது பற்றியும் உங்கள் கடிதத்தில் கூறியிருக்கிறீர்கள். இந்தியத்தரப்பு வீசிய எலும்புக்கு நன்றியாக இதையாவது நீங்கள் கூறாவிட்டால் உங்களுக்காகத் தொடர்ந்து வேறு யார்தான் இருப்பார்கள்? எனவே, இனத்தை விற்றாவது உண்ட வீட்டுக்கு நன்றி செய்ய முயல்கிறீர்கள். வாழ்க உங்கள் நன்றிமறவாப் பண்பு!

வீரர்களோடுதான் எட்டப்பர்களும் வளர்ந்தார்கள். அதுதான் சரித்திரம் நமக்குத் தரும் கடந்தகால அனுபவம்.

தந்தை செல்வாவுடனும், ஜீஜீபொன்னம்பலத்தோடும் உறவாடிப் பழகியதை நீங்கள் உங்களுக்குச் சான்றிதழாகப் பட்டியலிடும்போது எட்டப்பர் கதைகள்தான் நினைவுக்கு வருகின்றன.

"இறுதியாக, நாம் பழைய விடயங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதை நிறுத்த வேண்டும்" எனத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கின்றீர்கள்.

அப்படிப் பேசுவதை நிறுத்தினால், உங்கள துரோகச் செயல்களும் மறக்கடிக்கப்பட்டுவிடும் என்று எண்ணுகிறீர்கள் போலும்.

எத்தனை தடவை நீங்கள் மண்டியிட்டாலும் நீங்கள் புரிந்தசெயல்கள் - அதுவும் நீங்கள் அலங்கரித்த பதவி, உங்களுக்குத் தமிழினம் தந்த மரியாதை மற்றும் பொறுப்பு - ஆகியவற்றுக்கு மத்தியில் நீங்கள் செய்த வேலைகள், வரலாற்றில் என்றும் உங்களுக்கு மன்னிப்புத் தர இடமளிக்கா என்பதே உண்மை. பிராயச்சித்தமே செய்யமுடியாத வகையில் பிழைமேல் பிழை - தவறு மேல் தவறு - புரிந்துவரும் நீங்கள், உங்களைப் பொறுத்தவரை ஆனந்தசங்கரியாக இருக்கலாம். ஆனால், ஈழத்தமிழருக்கு துக்க சங்கடமே!

அன்புடன்
தன்மானத் தமிழன்.

## ஆன்மீக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையினரின் ஏற்பாட்டில் ஆன்மீக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தியானம் செய்யும்முறை, அகத்தில் ஆனந்தத்தை ஏற்படுத்தல், தனிமனித சமாதானத்தை உருவாக்கல் போன்ற விடயங்களில் பிரமகுமாரிகள் ராஜயோக நிலையங்களின் ஆஸ்திரேலியா இயக்குநரும் மனோத்தத்துவ நிபுணருமாகிய சாள்ஸ்கொக் இதில் கருத்துரை வழங்குவார். (4-7)

# இந்த வார இராசி பலன்

## 17-10-2004 - 23-10-2004

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வெ. |
| | சந். | சூ. ▲ புத. கே. | செ. வி. |

17.10.2004
அனுஷம் - நட்ஷத்திரம் - விருச்சிக இராசியாகும்.

### மேடம்

புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தவர்களின் நன்மைக்காகப் பெரியவர்களைச் சந்தித்துச் செல்வாக்குத் தேடுவீர்கள். முதுகுநோ, சளித்தொல்லை கொடுக்கும். வெளிநாட்டுச் செய்திகள் தென்புகொடுக்கும். காணி, பூமி சம்பந்தமான யோசனை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### இடபம்

பணவரவு ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவிசெய்து தருவார்கள். பிரயாணமொன்று தடைப்படும். புதிய முயற்சிகளால் நன்மைகள் ஏற்படும். குறைந்த முயற்சி, மிகுந்த இலாபம். வைத்தியத்துறை, குருத்துறையினருக்கு நற்பலன்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### மிதுனம்

குடும்பததில் பிரசசினைகள் வரும். சகோதரங்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும். போட்டி போட்டுச் சிலர் தூற்றித் திரிவர். வீட்டுச் செலவுகளால் மனப்பயம் வரும். தலைவலி, மலச்சிக்கல், களைப்பு, விபத்து ஏற்படச் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், அச்சியந்திர வியாபாரிகள், சிறப்பு அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### கடகம்

நிதானமான போக்கு நன்று. இனஜனமோ, நண்பர்களோ வீண்பழி சுமத்தலாம். பொருள் வரவு உண்டு. இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். சளித்தொல்லை, நெஞ்சுநோ, கண் உஷ்ணபீடைகள், இரத்தக்கொதிப்பு என்பனவரும். அரசியல் வாதிகள், சட்டத்தரணிகள் குருமாருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், சனி.*

### சிங்கம்

தொழில் ஸ்தானத்தில் சில விஷயங்களில் ஏனோதானோ என இருப்பார்கள். குடும்பத்தில் மனக்கருத்தொன்று தோன்றும். வீடு அல்லது வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் பிறருக்கு நன்மையைச் செய்தாலோ, சொன்னாலோ பிறர் உதவுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆசிரியர்கள், வியாபாரிகள், அரசியல்வாதிகள் நன்மை அடைவர். தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். சளித்தொல்லை தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### கன்னி

பிறருக்கு உதவுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஒரு மந்தப்போக்கு இருக்கும். குடும்பத்தினருக்கு நன்மைகளைக் கொடுத்தாலும் குறைகேட்க நேரிடும். பிரயாண யோசனை உண்டு. ஆயினும், நன்மை இல்லை. சளித்தொல்லை, தலைப்பாரம், கால்உழைவு கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில், பத்திரிகைத் தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### துலாம்

இவ்வாரம் துடிதுடிப்பான காலமாகும். இடமாற்றங்கள் சகஜமாகும். இராகு, கேது தாக்கத்தால் எடுத்தகாரியங்களில் தடைவரலாம். எதிர்ப்பாலாரால் இலாபங்கள் வரும். உங்கள் கண்டிப்பான சொல்லால் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். நாரி உளைவு, சலவருத்தம், சளித்தொல்லைகள் கொடுக்கும். குரு, சட்டத்தரணிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### விருச்சிகம்

திட்டமிட்டு, நேரத்திற்குத் தகுந்தமாதிரி செயற்பட்டு நன்மை அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். களவு போகலாம். வாகனம், வீடு வாசல்களில் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும். நாரி, தொண்டை, மூக்கு, கண் வருத்தங்கள் வரலாம். அரசியல்வாதிகள், வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### தனுசு

தொழில் ஸ்தானத்தில் உதவிகள், நன்மைகள் வந்தாலும் போட்டி, பொறாமைப்பட்டு உங்களைச் சிலர் தூற்றுவர். புத்திரரிடமிருந்து நற்செய்திகள் வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். நண்பர்களின் உதவிகளால் ஓரளவு மன ஆறுதல் அடைவீர்கள். பணச்சிக்கலொன்று வரும் குருத்துறையினர் மருந்து, இரும்பு, சட்டத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், சனி.*

### மகரம்

பணவரவு கொடுக்கும். புதியதிட்டம் வெற்றிபெறும். வெளிநாட்டுப் பிரயாணம் தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள் உதவுவார்கள். குருத்தொழில், கடல் தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். கால்வருத்தம், சளித் தொல்லை, தலையிடி வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### கும்பம்

பொதுத்தொண்டு செய்து ஓடியாடித் திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் குறைகேட்பீர்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும். இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். பொருள்வரவு தாமதமாகும். குருத்தொழில் செய்வோர், அரசியல் வாதிகள் நன்மை அடைவார்கள். கால்நோ, சலத்தொல்லை, சளித் தொல்லை என்பனவரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### மீனம்

புதிய தொழில் சிறக்கும். காணி, பூமி சம்பந்தமான பிரச்சினையொன்று விஷ்வருபமாகும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். அரசியல் வாதிகளின் உதவிகள் கிடைக்கும். நண்பர்களின் உதவிகளைப் பிரயோசனப்படுத்திக் கொள்ளவும். சளித்தொல்லை, கால் உளைவு கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி R.தர்மினி அவர்களின் அன்புத் தந்தை
**க.கருணானந்தம்** அவர்களின்
இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி
B.A.Final, Jaffna.
(37689)(33-29-16-45)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 03 - 1932



மறைவு 17 - 09 - 2004

**திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி (இரத்தினம்)**

குலவிளக்கின் சுடரணைந்து
திங்களொன்று ஆகியும் - எம்
துயர் துடைக்க வழியின்றி
கண்கள் கண்ணீர் மல்குதம்மா

எம் தாயின் மறைவை அறிந்து, இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டோர்க்கும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு அனுதாபச் செய்தி அறிவித்து எம் துக்கத்தில் பங்குகொண்டோர்க்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(37692)(33-29-16-45)
வேலுப்பிள்ளை
(குடும்பத்தினர்)


## சாவகச்சேரியில் மனைப்பொருளியல் கண்காட்சி

தென்மராட்சி,ஒக்.17

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் அனுசரணையுடன் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட மனைப் பொருளியல் கண்காட்சி நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமானது.

இக்கண்காட்சி இன்றும் தொடர்ந்து நடைபெறுமெனச் சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ-117)

## நவராத்திரி தின கலைவிழா

அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் நடத்தும் நவராத்திரி தின கலைவிழா இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கலைஞர் வட்டத்தின் தலைவர் வை.விஜயபாஸ்கரன் தலைமையில் சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பட்டிமன்றம்,நாடகம் உட்பட பல்வேறு கலைநிகழ்வுகள் இந்நிகழ்வின்போது இடம் பெறவுள்ளன. (4-7)

## ஓய்வுபெற்ற தபாலதிபருக்கு நெடுந்தீவில் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.17

நெடுந்தீவு தபாலதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற நா.தங்கராஜா அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நெடுந்தீவில் உள்ள திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பொதுமக்கள், அரச அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இதுதொடர்பான விழாவில் தபாலதிபரின் சேவையைப் பலரும் புகழ்ந்து பேசினர்.

தென்னிந்தியத் திருச்சபையின் நெடுந்தீவுப் பிரிவினராலும் தபாலதிபரின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக விழா ஒன்று நடத்தப்பட்டது. இதில் போதகர் ஜோன் செல்வம், தபாலதிபா தங்கராஜாவுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (எ)

## தேசிய பாடசாலைகளுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு!

அச்சுவேலி,ஒக்.17

தேசியப் பாடசாலைகளில் "கற்றலுக்கான கவர்ச்சிகரச் சூழலை உருவாக்குவதற்கு" மேலதிக நிதியுதவியாக தலா ஒருலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலைகளின் உள்ளகக் கட்டமைப்பைக் கவர்ச்சிகரமானதாக மாற்றி கற்றலுக்கான அழகுமிகு சூழலை உருவாக்குவதற்கு இந்த மேலதிக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தமாத முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற தேசியப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் தேசிய பாடசாலை கல்விப்பணிப்பாளர் லியனகே அதற்கான காசோலைகளை அதிபர்களிடம் வழங்கியுள்ளார்.

ஒரு மாதத்துக்குள் இந்த நிதியைப் பயன்படுத்தி பாடசாலைகளின் உள்ளக கட்டமைப்பை கவர்ச்சிகரமானதாக மாற்றியமைப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (4-11)

## வெள்ளைப் பிரம்பு தினம்

தென்மராட்சி,ஒக்.17

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தைச் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நேற்றுமுன்தினம் கைதடி நவீல்ட் பாடசாலையிலும் கைதடி முதியோர் இல்லத்திலும் அனுஷ்டித்தனர். (எ-117)


# பழைய பத்திரிகை விற்பனைக்கு

எம்மிடம் பழைய பத்திரிகை
விற்பனைக்கு உண்டு.
மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இல. 2405
C/o உதயன்
யாழ்ப்பாணம். (சி38261)(33-29-16-45)



# சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்!
கடந்த 18-09-2004 அன்று சிவபதமடைந்த எமது இல்லத்தரசி

**திருமதி குமரவேல் திலகவதி**

அவர்களின் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (18.10.2004) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'திருவேரகம்'
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
(37694)(38)(29-16-45)
சி.குமரவேல்,
இ.சுரேஸ்குமார்,
கு.ஜெயப்பிரணவன்.


## அரசறிவியல் கற்கைநெறி ஆரம்பம்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் அரசறிவியல் கல்வி டிப்ளோமாட் பயிற்சிநெறி நேற்று ஆரம்பமானது.

மேற்படி பயிற்சிநெறியில் இணைந்து கற்கையினை மேற்கொள்ளப் பதிவுகளை மேற்கொண்டுள்ள மாணவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு வகுப்புகளில் கலந்துகொள்ளலாம் எனக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் அறிவித்துள்ளார். (எ-6)


# கொல்சிம் சிமெந்து (புத்தளம் சிமெந்து)

## அறிமுகவிழாவும் சந்தைப்படுத்தல் கருத்தமர்வும்




இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 2004.10.19
நேரம்: பி.ப. 1.00 மணி

### நிகழ்வுகள்

- ★ சுடரேற்றல்
- ★ அகவணக்கம்
- ★ தலைமையுரை
- ★ அறிமுகவுரை
  திரு.இரத்தினராஜா விஜயகுமார்
  (விற்பனை அதிகாரி கொல்சிம் சிமெந்து)
- ★ சிறப்புரை
- ★ முதன்மைவிருந்தினர் உரை
  திரு.ஜெனில்ஸ் தயானந்தன்
  (பொறியியலாளர் கொல்சிம் சிமெந்து நிறுவனம்)
- ★ நன்றியுரை

உருக்குலைந்த வாழ்வை மீட்க! உறுதியான கட்டடங்கள் தேவை.
உறுதிமிகு கட்டடத்திற்கு வலுவுள்ள அத்திவாரம்

கொல்சிம் சிமெந்து

இலங்கைத் தயாரிப்பில் உறுதிக்கு உரிமை கொண்டாடும் ஒரே நிறுவனம்
கொல்சிம் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்.

விழாவில் கலந்து மகிழ்வில் திளைப்பீர்!
கருத்துக்கள் பெற்று கலக்கம் தீர்ப்பீர்!

**உறுதியின் உண்மையை ஊரறிய வாருங்கள்**

விழா ஏற்பாட்டாளர்கள்: யாழ்.முகவர்களான முருகன் களஞ்சியம் 167,ஸ்ரான்லி வீதி. T.P: 222 6968

(37686)(29-16-45)



# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கருணானந்தம்



யாழ்.கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணானந்தம் (பெரியதம்பி) நேற்று (16.10.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் பரஞ்சோதி, ரங்கநாதன் (கச்சேரி, புனர்வாழ்வுப் புகுதி), ரவீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), தர்மினி ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்ற தியாகராசா, செல்வரத்தினம், படிகலிங்கம் - சொர்ணகாந்தி, பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் தனேஸ்வரி, மாலினி, சஜந்தினி (பிரான்ஸ்), சிவலோகநாதன், (கனடா), ரஜீபன் ஆகியோரின் மாமனாரும் பிருந்தினி, நிருஜன், நிருஜா, நிஷாந்தன், நிதர்ஷன், கௌதம், அபிஷான், சுவேத்தா, திரிஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38, கச்சேரி, நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(37688)(29-16-45)
தகவல்:
பிள்ளைகள்.

## பொன்னுத்துரை சிவலிங்கம் (மனேச்சர்)

(உரிமையாளர், சிவன் கொம்மினிக்கேசன்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை சிவலிங்கம் 15.10.2004 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - கனகம்மாவின் சிரேஷ்ட புத்திரனும் லோகாம்பிகை (இந்திரா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் சுந்தரலிங்கம் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினசிங்கம் (ஆஸ்திரேலியா) அவர்களின் மைத்துனரும் காலஞ்சென்ற சத்தியகுமார் மற்றும் சதீஸ்குமார் (லண்டன்), தனேஸ்குமார் (கனடா), கிசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் உசாநந்தினி (கனடா), கவுசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.No: 3303
G.P.S. *வீதி,*
*கல்வியங்காடு.* (37693)(29-16-45)
தகவல்:
சி.லோகாம்பிகை
(இந்திரா-மனைவி)

## திருவாட்டி சௌந்தரநாயகி (இராசமணி)

வேலணை 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருவாட்டி சௌந்தரநாயகி (இராசமணி) நேற்றுமுன்தினம் (15.10.2004) வெள்ளிக்கிழமை கொக்காவில் என்னுமிடத்தில் முதிராச்சாவு அடைந்தார்.




அன்னார் இயற்கை எய்திய வேலணையூர் முதன்மை வணிகர் நாகராசாவின் அன்புத் துணைவியும் பேரின்பராணி (ராணி), லோகராணி, சரவணபவன் (நோர்வே), இலட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), கிருஷ்ணகாந்தன் (பிரான்ஸ்), இயற்கை எய்திய ஜெயகாந்தன் மற்றும் ஜெயராணி, இராசகாந்தன் (பிரான்ஸ்), ஜெயவாணி ஆகியோரின் அன்பு அன்னையும் பாலேந்திரன் (டோகா), ஆனந்தசிவராசா, கந்தசோதி (நோர்வே), சிவயோகநாயகி (பிரான்ஸ்), புஷ்பமாலா (பிரான்ஸ்), செல்வராணி, இளந்திரையன், கஜந்தினி (பிரான்ஸ்), ஞானகுமார் (சுதன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2 ஆம் வட்டாரம்,*
*வேலணை.*
(37691)(29-16-45)
தகவல்:
மக்களும்
மருமக்களும்.



இவ் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று தமிழ் மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் மாணவருக்குப் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சிறப்பாகச் சித்தியடைந்த மாணவர்கள் தமிழ் மாணவர் ஒன்றியத்தால் கௌரவிப்பு

இவ்வருடம் நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி யாழ். மாவட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்கள் தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் தமிழ் மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ச.குணேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணனும், ஒன்றியக் கொடியை ஒன்றியத் தலைவர் ச.குணேந்திரனும் ஏற்றினர். இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவு கல்விப்பணிப்பாளர் திருமதி ஆ.சுப்பிரமணியம், வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்படப் பலர் உரையாற்றினர்.

சித்திபெற்ற மாணவர்களான இ.பிரணவன், று.அனட்றூபிஷா, வி.றமணன், இ.கஸ்தூரிராஜன், ப.திருமகள், இ.ஜதுஷன், சி.சிவநீதன், க.துவாரகன், ந.லவலோஜன், வி.நிருகன் ஆகியோருக்கு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, ஆரம்பக் கல்விப்பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியம், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.எழிலன்பன் ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (4-5-202-203)

# ஆலயத்திலிருந்து குத்து விளக்கை திருடி விற்கமுயன்றவர் கைது!

யாழ்ப்பாணம்,ஒக்.17

திருடிய குத்துவிளக்குகளை விற்க முற்பட்ட ஒருவரை யாழ். பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைக்குதது விளக்குகள் இரண்டினை நாவாந்துறைப் பகுதியில் உள்ள வார்ப்புத் தொழிலகம் ஒன்றில் 500 ரூபாவுக்கு விற்பதற்கு இவர் விலை பேசினார் என்றும் -

இது தொடர்பான இரகசியத் தகவல் பொலீஸாருக்குச் கிடைத்ததும் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற பொலீஸார் சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்ததுடன் அவர் வைத்திருந்த குத்து விளக்குகள் இரண்டையும் பறிமுதல் செய்து யாழ். பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் சம்பந்தப்பட்ட நபரை யாழ். பொலீஸார் விசாரணை செய்தபோது குத்துவிளக்குகளைத் திருடியதை அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குத்துவிளக்குகள் இரண்டும் ஆலயத்தில் இருந்து திருடப்பட்டவை என்றும் குறிப்பிட்ட நபர் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் யாழ். பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-7)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**புவிராசா விசாலாட்சி**

எமது நிறுவன இயக்குநர் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி புவிராசா விசாலாட்சி அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
சுந்தர் வெளியீடு.

*844, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (37704)(30)

## கண்ணீர் அஞ்சலி

கரணவாயைப் பிறப்பிடமாகவும்,
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட
**ஐயாத்துரை சிவப்பிரகாசம்**
(பழைய மாணவனும் நலன்விரும்பியும்,
இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர் - அரச மருந்தகம்)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டனில் நடைபெறும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/கரணவாய் பொன்னம்பல
வித்தியாலயம், கரவெட்டி.

(சி-38263)(30)

## நன்றி நவில்கின்றோம்

**நாகமுத்து மார்க்கண்டு**

எமது குடும்ப அணையாத ஒளித்தீபமாகிய அன்புத் தந்தையார் அமரர் **நாகமுத்து மார்க்கண்டு** அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருந்த எமக்கு நேரிலும், தொலைபேசியிலும், அஞ்சலிலும், பத்திரிகை மூலமும் அனுதாபச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டவர்களுக்கும் மற்றும் யா/உயரப்புலம் மெ.மி.த.க. வித்தியாலயம், யா/நவாலி மகாவித்தியாலயம், யா/நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் தாளையடி, முள்ளியான் உப அஞ்சல் அலுவலகத்தைச் சேர்ந்த அஞ்சலதிபர், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் வீட்டில் நடந்த ஆத்மசாந்திக்கிரியைகளிலும் சமயாசாரக் கிரியைகளிலும் முன்னின்று பங்குபற்றி உதவிய அனைத்து அன்பு நெஞ்சங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஸ்கந்தபுஷ்கரணி,*
*முருகமூர்த்தி கோயில் வீதி,*
*நவாலி கிழக்கு, மானிப்பாய்.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
(37702)(30)


## ஆள்கள் தேவை

சுன்னாகம் நகரில் அமைந்துள்ள எலக்ரோனிக் & பான்சிப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
கா.கேசவன்,
மஞ்சத்தடி, இணுவில்.
(37699)

ராஜா யாழ்ப்பாணம்
இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
G/7 றெயின்போ காலனி (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்

போஸ் (ரீலஸ்) காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(C-37740)

நிரஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் மற்றும் பலர் நடித்த
மதுர (ரீலஸ்)
நாளை முதல் அர்ஜுன் நடித்த
அரசாட்சி (ரீலஸ்)
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(புதியநேரம்)

சித்தி சினிமா பண்டத்தரிப்பு
விஜய், ஜோதிகா, கிரண் நடிப்பில்
திருமலை (ரீலஸ்)

காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

லக்ஷ்மி சினிமா இணுவில்
சரத்குமார், ஆனந்தபாபு, விஜயகுமார், கவுண்டமணி, செந்தில் நடிப்பில்
காட்சிகள் தினசரி
11.00, 3.00, 7.00
சேரன்பாண்டியன் (ரீலஸ்)
அடுத்த வெளியீடு
எம்.ஜீ.ஆர் நடித்த ரிக்ஷாக்காரன்
(37698)


## மரண அறிவித்தல்கள்

(நேர மாற்றம்)

### நாகமுத்து சுந்தரலிங்கம்

இன்றைய உதயனில் 12ஆம் பக்கத்தில் வெளியான, ஏழாலை வடக்கைச் சேர்ந்த நாகமுத்து சுந்தரலிங்கம் என்பவருடைய மரண அறிவித்தலில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறமாட்டாது.

அவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிககப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை (வீசியடி).* (37700)

தகவல்:
சந்திராதேவி (மனைவி).

### திருமதி புவிராசா விசாலாட்சி

(சரஸ்வதி)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வளலாயை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது இல. 844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி புவிராசா விசாலாட்சி காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் புவிராசாவின் அன்பு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற ஸ்ரீசந்திரராசா (ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), ஸ்ரீசுந்தரராஜா (மருந்தாளர், மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிக்கா (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சந்திரகுமாரி (ஆசிரியர், யா.சென் தோமஸ் றோ.க.த.க.வித். பருத்தித்துறை), சுமதி (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் சமித்யா, அருண்யா, ஸ்ரீவரன், பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கந்தசாமி, செல்வராஜா, செல்வபாக்கியம், தெய்வநாயகி, யோகம்மா, காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பண்டாரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு பிற்பகல் 1.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*844, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 222 7086 (37703)(30)

தகவல்:
ப.புவிராசா (கணவர்)
குடும்பத்தினர்.

### செல்வி பிரியவலன்ரினா வலைண்டன் சுரேஸ்குமார்



சற்கோட்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி பிரியவலன்ரினா அவர்கள் நேற்று (16.10.2004) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வலைண்டன் சுரேஸ்குமார் (குமார் - லண்டன்) - யோய்ஸ் ஜெனிக்கா (நந்தா) ஆகியோரின் அன்பு மகளும் பிரியந்தினி, பிரியதர்சிஹா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பழைய கோவிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*சேச்சடி, சற்கோட்டை.* (37706)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கிருஸ்ணபிள்ளை சிவபாக்கியம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் குஞ்சுப்பரந்தன், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை சிவபாக்கியம் அவர்கள் நேற்று (16.10.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் சிவலோகநாதன் (ஆசிரியர், கோணாவில், அ.த.க.பாடசாலை), லோகநாதன் (குஞ்சுப்பரந்தன்), கோமளாதேவி (ஜேர்மனி), கௌசலா ஆகியோரின் தாயாரும் சசிகலாதேவி, சரோஜினி, விஜயரட்ணம் (ஜேர்மனி) காலஞ்சென்ற சரவணபவான் ஆகியோரின் மாமியாரும் மாதங்கி, மாதுங்கன், மாதுளன், நந்தரூபி, விமலரூபன், விஜித்தா, டானியல், டெவோரா, நிலானி, வாசுகன், சேயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2004) திங்கட்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் - கல்வயல் வீதி,*
*கல்வயல். சாவகச்சேரி,*
*(சங்கக்கடையடி).*

தகவல்:
S.கௌசலா
(வவா - மகள்)
(37707)(30)

# ஊர்காவலர்கள் இருவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதானவர்களின் வறுமை நிலையைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் பிணைப்பணத்தை தாங்கள் செலுத்துவதாக விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். அதனையடுத்து அவர் சரீரப் பிணைகளுக்காக ஒப்பமிட்டு ஊர்காவலர் இருவரையும் அவர்களது மனைவிமாரிடம் ஒப்படைத்தார்.

ஊர்காவலர் இருவருக்குமான பிணைப் பணத்தை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் திருகோணமலைக் கிளை வழங்கியது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள், கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் ஊர்காவலர்கள் இருவரும் உறவினர்களும் நேற்று மாலையே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சந்தன பண்டார, சமிந்த பியசிறி ஆகிய இந்த இரு ஊர்காவல் படையினரும் கடந்த ஓகஸ்ட் 10ஆம் திகதி பதவியா கல்லம்பத்தை என்னும் பகுதிக்குள் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் பிரவேசித்தவேளை விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுவிக்குமாறு உறவினர்கள் மற்றும் சிங்கள அமைப்புகள் தரப்பில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தமை தெரிந்ததே.

திருகோணமலையில் கடந்த மூன்று வார காலமாக சிங்கள அமைப்புகள் உண்ணாவிரதப் போராட்டங்களையும், ஹர்த்தால் மற்றும் மறியல் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தன. இதனால், அங்கு ஒருவித பதற்ற நிலைமை உருவாகியிருந்தது.

தங்கள் வசம் உள்ள ஊர்காவலர்களை விடுவிப்பதாயின் அரசுப் படைகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போராளிகள் பத்துப் பேரை விடுவிக்கவேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

புலிகளின் கோரிக்கையை ஏற்று, மட்டக்களப்புச் சிறையில் கடந்த ஒரு வருடகாலத்துக்கும் மேலாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 10 பேர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த வியாழனன்று மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தங்கள் போராளிகள் விடுவிக்கப்பட்டதை அடுத்தே புலிகளும் பதிலுக்கு இந்த இரு ஊர்காவலர்களையும் பிணையில் விடுவிக்க அனுமதித்தனர்.

நேற்றுமாலை விடுவிக்கப்பட்ட இரு ஊர்காவலர்களும் திருமலை நகரில் அவர்களது உறவினர்கள் உண்ணாவிரம் மேற்கொண்டிருந்த இடத்துக்குக் கூட்டிவரப்பட்டனர். அங்கு அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ ஜே.எச்.கருணாரட்ண, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவீர ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

கைதிகள் விடுவிக்கப்பட்டதை அடுத்து உறவினர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். திருமலையில் பதற்றம் தணிந்தது.

(ஐ-3-13-ரி)


## பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு:- மூர்த்தி கலர்லாப், மானிப்பாய்.

T.P.: 21 222 2884 (C-38241)(38-18-45)


## தொலைக்காட்சி நாடகம்

யாழ். பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் அசோகாஹந்தகம இன் நெறியாள்கையில் உருவான "இந்த வழியால் வாருங்கள்" என்ற தொலைக் காட்சி நாடகத்தின் முதலாம் பகுதி வீடியோ காட்சியாகக் காண்பிக்கப்படும். காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த தொலைக்காட்சி நாடகம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும். இந்த நிகழ்வில் ஆவலர்கள் எவரும் கலந்து பயன் பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோம். இதனை ஒரு பாரதூரமான விடயமாக புலிகள் கருதியதில் தவறில்லை. எம்மைக் குறைந்த பிணைத் தொகையுடன் விடுவிக்க அனுமதித்தமைக்காக விடுதலைப் புலிகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அவர்கள் நல்ல முறையில், கௌரவமாக எம்மை வைத்திருந்தார்கள். சிறைச்சாலையில் இருக்கின்றோம் என்ற உணர்வே எமக்கு ஏற்படவில்லை. பத்திரிகைகள் வாசிக்கத் தந்தார்கள். வானொலி கேட்க வசதி செய்தார்கள்.

வெளியாள்களின் தூண்டுதல் காரணமாகவே எமது விவகாரம் பெரும் பூதாகரமாகியது.

- இப்படி அவர்கள் கூறினர். (ஐ-3)

## கண்காணிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். கண்காணிப்புக் குழுவின் இந்தச் செயற்பாட்டுக்கு எமது நல்லெண்ண வெளிப்பாடாகவும் சமாதான செயற்பாடுகளின் சமிக்ஞையாகவும் இரு ஊர்காவலர்களையும் விடுவித்துள்ளோம். அவர்களுக்கான பிணைப்பணத்தைக் கூட எமது சமாதானச் செயலகமே வழங்கியுள்ளது - என்றார் எழிலன். (ஐ-3)

## கடத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையை பிரஸ்தாப மேஜர் கடத்தி வந்திருப்பது தெரியவந்தது.

கடத்தி வந்த நபரை தமது அறையில் தங்கவைத்து அவருக்கு நித்திரைக் குளிகைகளைக் கொடுத்து மயக்கமடையச் செய்தபின் அவரை துண்டுதுண்டாக வெட்டினார் என்று கூறப்படுகிறது. பின்னர் உடல் பாகங்களை ஒரு பரலுக்குள் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியுள்ளார். எஞ்சிய எலும்புகளைக் குழி ஒன்றுக்குள் போட்டு மூடிவிட்டார்.

இந்த விவரங்களை விசாரணை மூலம் அறிந்து மன்னார் பொலீஸார் மன்னார் நீதிவான் எம்.எச்.எம்.அப்துல்லா முன்னிலையில் அந்தக் குழியை நேற்றுமுன்தினம் தோண்டினர். அங்கிருந்து உயிரிழந்தவருடையது எனக் கருதப்படும் எலும்புகள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன.

நீதிவானுடன் மன்னார் பிரதிப் பொலீஸ்மா அதிபர், பொலீஸ் அத்தியட்சகர், மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மட்கப்பட்ட எலும்புகளை பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையில் பணிபுரியும் உடற் கூற்றியல் நிபுணர் நீரியெல்லவுக்கு அனுப்பும் படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் மக்களும் உள்வாங்கப்படுகின்றனர். இரு இன மக்களும் இணைந்து தமிழ்த்தேசியத்தை கட்டியெழுப்ப பங்களிப்புச் செய்யவேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்பில் வலியுறுத்தினர். அதனை முஸ்லிம் பிரமுகர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இரு இனங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்த்து கருத்துக்களைப் பரிமாறிச் செயற்படுவது என்றும் இரு தரப்புகளும் முடிவுசெய்தன.

இச்சந்திப்பை அடுத்து நேற்றுமாலை நகரசபை மண்டபத்தில் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் பொதுமக்களையும் சந்தித்தனர். அவர்களின் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து அதற்கான ஆலோசனைகளையும் வழங்கினர்.

சுமார் 500 பொதுமக்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். கூட்டமைப்பினர் இன்று நிலாவெளிக்குச் செல்கின்றனர். (ஐ-3)


COMPUTER SALES, SERVICE MAINTENANCE, & REPAIRS

ON CALL WITHIN 1 HOUR 24x7

Call : 077 748 9361

Global Informatics (Pte) Ltd.
#379, Kasthuriyar Road, Jaffna.
Tel : 077 736 4247, 077 748 9361. e-mail : gijaf@dialogsl.net

அழையுங்கள் உங்களின் இடங்களுக்கே எமது தொழில் நுட்பவியளாளர்களை. முன் பதிவு செய்யும் வாடிக்கையாளருக்கு விசேட கட்டணம்.

HO : #401-2/1, Galle Road, Colombo-04. Tel: 077 736 4246-7, 011 551 0805. Fax: 011 551 7626. e-mail : gi@dialogsl.net http://www.globalinformatics.net

CHEMISTRY
By: Vakeesan
திருநெல்வேலி
(பல்கலைக்கழகம் முன்பாக)
2006 A/L
வெப்ப இரசாயனம்
ஆரம்பம் : 18.10.2004 - 6.00 a.m.
Mon., Fri., Sun. :- 6.00 a.m.
Tue. :- 6.00 p.m. Wed. :- 3.30 p.m.
Note :- யாவும் புதிய நேரப்படி
(37657)(38-18-45)

## வீடு தேவை

கைத்தொழில் நிறுவனம் ஒன்றுக்கு மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடத்தில் வீடு தேவை.

குறிப்பு: விலையாகவோ அன்றி வாடகைக்கோ குத்தகைக்கோ எடுக்கப்படும்.

தொடர்பு:- 0777 586108 (சி-38262)(38-18-45)


## மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் பாலசோமசுந்தரம்**

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலசோமசுந்தரம் நேற்றிரவு காலமானார்.

அவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் காடாகரம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
குப்பிளான். தவராசா (மகன்).


இதோ! மீண்டும் தீபாவளிப் பண்டிகைக்காக
எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்

கொழும்பு - மலேசியா - கொழும்பு ரூபா 28,000/= + வரி 4,600/=
கொழும்பு - மலேசியா - பாங்கொக் - மலேசியா - கொழும்பு ரூபா 36,000/= +7,800/= வரி
கொழும்பு - மலேசியா - சிங்கப்பூர் - மலேசியா - கொழும்பு ரூபா 28,500/= +வரி 6,700/=

மலேசியாவில் 4 நாள்களுக்கு அதாவது 3 இரவு தங்குமிட வசதி (காலை உணவுடன்) இலவசம்.

❋ VISA நாங்களே பெற்று வழங்குவோம் ❋

பயணத்திகதி December 12 முன்னர்

இல: 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3771, 0777 915824, 0777 270452
(C/38258)

ஸ்டெபர்ட் மோட்டார் கம்பனி லிமிட்டட் வழங்கும்
HERO HONDA
VASI SAVARI வாசி சவாரி
2 Year warranty
நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்
2004 செப்ரெம்பர் 20 முதல் ஒக்ரோபர் 20வரை மட்டுமே இவ்வாய்ப்பு.

- 9 வெற்றியாளர்களும் எவ்வித செலவுகளும் இல்லாமல் இந்தியா அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- புதுடெல்லியிலுள்ள ஹீரோ ஹொண்டா தொழிற்சாலையை பார்வையிடவும் வாய்ப்பு.
- உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலுக்கும் சென்று வரலாம்.
- 27 ஆறுதல் பரிசுகள்.
- போட்டிக்கான கூப்பன்களை ஸ்டெபர்ட் மோட்டர் கம்பனி லிமிட்ட் இற்கு அனுப்ப வேண்டும்.
- அனைவருக்கும் ஏற்ற வகையில் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் தற்பொழுது விசேட விலைகளில்

HERO HONDA World No. 1 Two-Wheeler Company

RG இரத்தினகோபால்ஸ்
65,63 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 6185 0777-340056

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2005 மாதிரி வினாத்தாள்கள்

திரு. வே. அன்பழகன் ஆசிரியர் அவர்களின் மாதிரி வினாத் தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனிப்பட்டோர் உங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுப் பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்.

முதலாவது மாதிரிப் பரீட்சை – இன்று (17. 10. 2004) ஞாயிற்றுக்கிழமை.

பதிவுகளுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

யாழில் தயா அச்சகம், நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தென்மராட்சியில் வளர்மதி கல்வி நிலையம், பொலிஸ் நிலையம் அருகில் கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-38230)

மேலதிக தொடர்புகளுக்கு: 077 3068999

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது றோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: Tel: 011 2372952/3, Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்
17-10-2004

# புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலா...

விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய நாடுகளுக்கான இராஜதந்திரச் சுற்றுலா. எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் இந்தியாவுக்கான விஜயம். நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளின் இந்தியத் தலைநகர் - புதுடில்லிக்கான வருகை ஆகிய மூன்றும் தனித்தனியே நன்கு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரற்பட்ட விடயங்களே. எனினும் இம்மூன்று விடயங்களுக்குமிடையில் 'தொட்டும் - விலத்தியும் - வெட்டியும் - சேர்த்தும்' ஆடும் தொடர்பாடல் உள்ளது.



### இராஜதந்திரச் சுற்றுலாக் காணும் புலிகள்!

ஒரு விடுதலை இயக்கம் என்றவகையில் புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலாவுக்கு பல்வேறுபட்ட பரிமாணங்கள் நிச்சயம் இருக்கும். ஆனால், குறிப்பாகச் சொல்லப்பட்ட காரணம் இடைநிறுத்தம் கண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (ISGA) யோசனைகளின் அடிப்படையில் ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை சர்வதேச ரீதியாகப் பரந்துபட்டு வாழும் ஈழத்தமிழர்களுள் நிபுணர்களாக உள்ளோரிடம் ஆராய்ந்து கலந்தாலோசித்தல் என்பதாகும். ISGA உருவாக்கத்தில் இதே நிபுணர்களே பங்காற்றினர். உயர்மட்ட அரசியல்குழு என்று வர்ணிக்கப்படும் விடுதலைப்புலிகளின் மூத்த பிரமுகர்கள் அடங்கிய அக்குழு முதலில் சுவிற்ஸர்லாந்திலிருந்து ஒஸ்ரியா, நெதர்லாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் இவ்வாரம் (19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை) நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவிற்கு ஓர் இராஜதந்திரச் சுற்றுலாவாகச் செல்லுமளவுக்கு மிகவும் நீள அகலமாகத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் கொண்டதாக அது அமைந்திருக்கிறது.

சர்வதேச ரீதியாக வாழும் ஈழத்தமிழ் நிபுணர்களுடன் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் போன்ற மிக மூத்தவர்களும் அக்குழுவுடன் சுவிற்ஸர்லாந்தில் ஜெனிவாவில் இணைந்து ஆராய்வுகளையும், ஆலோசனைகளையும் விரிவாக மேற்கொண்டிருந்தனர். நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கூட விடுதலைப் புலிகளின் குழுவை ஓடிச்சென்று சந்தித்தார். அதைவிட மனிதஉரிமைகள் பற்றிய அக்கறைகள் கொண்ட சர்வதேச பிரமுகர்களும் விடுதலைப் புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலா அணியினரைச் சந்தித்தனர். நெதர்லாந்தில் அந்நாட்டின் கனிஷ்ட நிலையிலுள்ள ஒரு சில பிரமுகர்களும் அவர்களைச் சந்தித்திருக்கக் கூடும்.

### புலிகள் ஐரோப்பாவில் சுற்றுலாத்துவது ஏன்?

விடுதலைப் புலிகளின் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா எனப்படும் பரராஜசிங்கம்.

துறைகளுக்கு ஊடாகவும் இராஜதந்திரச் செயற்பாட்டாளர்களுக்கு ஊடாகவும் ஏற்படத் தொடங்கிவிட்டன. புலிகளின் ஐரோப்பிய நாடுகளுக்கான இராஜதந்திரச் சுற்றுலா நோர்வேப் பிரதிநிதிகளுக்கு ஊடாகக் கருத்துப்பரிமாற்றத் தொடர்பாடல் ஒன்று விளைந்துவிட்டதனால் புலிகளின் ஐரோப்பியச் சுற்றுலாவுக்கும் ரணிலின் இந்திய விஜயத்துக்கும் இடம்பெறும் விடுதலைப் புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலாவினுடைய முக்கியத்துவம் மிகப் பிரதானமான பரிமாணத்தை அடைந்துள்ளது என்பது தெளிவாகிறது. கொழும்பின் அரசியல் பாஷை. புதுடில்லியின் அரசியல் பாஷை. விடுதலைப் புலிகளின் அரசியல் பாஷை இவையனைத்தும். நோர்வே ஒஸ்லோவில் நோர்வே அனுசரணையினர்களால் ஒருங்கிணைத்துப் பார்க்கப்படும். இராஜரீக உந்தம் (Diplomatic Momentum) ஒன்று உருவாகும் தருணம் ஒன்று கூடிவந்துள்ளது. ஆகவே. விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய நாடுகளுக்கான இராஜதந்திரச் சுற்றுலா மிகவும் சர்ச்சிக்கப்படுவதற்கும் முக்கியத்துவப்படுத்துவதற்கும் உரியதாகிறது. இந்தச் சுற்றுலா

# ரணிலின் இந்திய விஜயம்...

விடுதலைப் புலிகளின் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் போன்ற பிரதான பொறுப்புத்துறைகளில் உள்ளவர்கள். விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உள்ளிட்ட இந்த அணிக்குத் தலைமை வகிக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட அனைவரும் ஈழத்தமிழர்கள் வாழும் ஐரோப்பிய நகரங்களில் அரசியல் இராஜதந்திர ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் விடுதலைப் புலிகளின் அமைப்புக்குப் பலம்சேர்க்கும் முயற்சியொன்றை முடுக்கி விடுவதுடன். இனப்பிரச்சினையின் தற்போதைய

பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். விடுதலைப் புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலாவுக்கும் ரணிலின் இந்தியாவுக்கான அரசியல் விஜயத்துக்குமிடையில் நிகழ்ச்சி நிரற்பட்ட எந்தத் தொடர்புகளும் நேரடியாக இல்லையெனினும் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த நோர்வேயின் வெளிவிவகாரத் துணை அமைச்சர் விடர் ஹெல்கிசன். ரணில் விக்கிமசிங்க அவர்களைப் புதுடில்லியில் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார். சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாக

நோர்வே பிரதிநிதியான விடர் ஹெல்கிசனின் புதுடெல்லி வருகைக்கும் ஒரு கட்டத்தில் பல்லினத்தன்மைவாய்ந்த தொடர்பாடல் ஒருங்கிணைவு ஒன்று ஏற்பட்டுள்ளதை எவரும் மறுக்கமுடியாது. இந்தியாவில் ரணிலைச் சந்தித்துள்ள விடர் . ஹெல்கிசன். இந்தியாவின் முக்கிய அதிகாரிகள். அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் கொண்டும் கொடுத்தும் விட்டு. நோர்வே திரும்பியதும் இவ்வாரம் ஒஸ்லோவில் விடுதலைப் புலிகளின் இராஜதந்திரச் சுற்றுலா அணியைச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

**நோர்வே உருவாக்கும் இராஜரீக உந்தம்**

இக்கட்டத்தில் ஐரோப்பாவில் மூலம் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் அந்த அமைப்பும் ஈட்டிக்கொள்ளும் சர்வதேச வியாபகம் சார்ந்த அனுபவமும் பிரபல்யப்படுத்தலும் ஆங்காங்கு மனித உரிமை விவகாரங்கள் சாந்த வார்த்தைகள் வழியாக அவர்கள் மீது வந்துவிழும் அழுத்தங்களும்

டன்ஸ்ரன் லூயிஸ்

இனப்பிரச்சினையுடன் கூடிய வடக்கு - கிழக்குத் தமிழர்களின் வரலாற்றுக்குப் பாதக சாதகங்கள் நிறைந்த திரும்புகை ஒன்றை நிச்சயம் ஏற்படுத்தப்போகிறது. இதில் இந்தியா.அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் இணைவும் பிணைவும் எதிரும் புதிருமான இன்னமும் தெளிவில்லாத விடயங்களும்

(VIII ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்தது என்ன?


சிக்கல்மிகுந்த பரிமாணங்களையும் விளக்க முற்படுவதாகவே தெரிகிறது. ஆங்காங்கு அவர்கள் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது முக்கியத்துவம் கூடியதும் முக்கியத்துவம் குறைந்ததுமான கலந்துரையாடல்களும் இடம்பெற்றபடியுள்ளதாகவே தெரிகிறது. அத்துடன். வன்னியில் கடமைப் பொறுப்புக்களின் அழுத்தங்களால் தமது உடல் ஆரோக்கியத்தைப் பெரிதும் பொருட்படுத்தாமல் இயங்கிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்களான இவர்கள் ஐரோப்பாவின் ஒரு சில சிறந்த மருத்துவ நிபுணர்களிடம் சென்று தமது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெறவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவர் எனவும் தெரிகிறது.

### புலிகளின் சுற்றுலாவைத் தொட்டு - விலத்தி - வெட்டிச்செல்லும் ரணிலின் விஜயம்

விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய நாடுகளுக்கான இராஜதந்திரச் சுற்றுலா நடைபெறும் இத்தருணத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள்

இருவரும் மிகுந்த கரிசனையுடன் ஆராய்ந்துள்ளனர். புதுடில்லியில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தங்கியுள்ள இம்பீரியல் ஹோட்டலில் ஹெல்கிசனுடனான பேச்சுகள் இடம்பெற்றன. நோர்வே நாட்டின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் இதில் கலந்துகொண்டமை முக்கியத்துவம் வாய்ந்தது. நோர்வேப் பிரதிநிதிகள் புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுடன் ஐரோப்பாவில் புலிகள் மேற்கொண்டுள்ள இராஜதந்திரச் சுற்றுலாவில் நோர்வேக்கு வழங்கியுள்ள செய்திகளுடன் இலங்கை இனப்பிரச்சினையின் பிந்திய சிக்கல்கள் தொடர்பாகவும் ஆலோசித்தவண்ணம் இருந்தனர். அவ்வேளையில். ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றமை முற்றுமுழுதான அரசியல் சாணக்கியங்கள் சார்ந்த விஜயமாகவே சித்திரிக்கப்படுவதற்கு வகைசெய்துள்ளது. ஐரோப்பாவிற்கும். புதுடில்லிக்கும். கொழும்புக்குமென ஒரு பரபரப்பான செய்திப் பரிமாற்றங்கள் ஊடகத்

## சமாதானம் நிலைத்திடச் செய்வாய் தாயே!



அன்னையே! நாட்டையாளும் அம்மையே! இதனைக் கேளும்
அறிவினில் ஆற்றல் தன்னில் அஞ்சிடா வீரம் தன்னில்
பண்பினில், பண்பாடு தன்னில் பார்புகழ் நீதி தன்னில்
எண்ணிடில் எமது இனத்திற்கு ஈடுண்டோ இவ்வுலகு தன்னில்
தன்மகன் தேர்க்கால்சிக்கி தவித்தொரு பசுக்கன்று மாள
மன்னவன் தேரில் ஏறி மாய்த்தனன் தன்மகன் உயிரை யன்றோ!
முல்லைக்கொடி படர முட்டொன்று இல்லையென்று எல்லையில்
புகழ்சேர் மன்னன் ஈய்ந்தனன் தன் தேரையன்றோ!
குளிர்தரு மழையும் கொட்ட கூனிய மயிலைக் கண்டு
அளித்தனன் தனது பட்டை ஆண்மைசேர் பேகன் அன்றோ!
இத்தனை புகழ் படைத்த ஈரம் சேர் மனதுடைய
அத்தனை தமிழர் வாழ்வும் அழிவதும் நீதியாமோ?
எமது மண் எமதேயாகும் இதில் அச்சம் உமக்கு வேண்டாம்
எம்மைநாம் ஆளவேண்டும் இதுவெம் பிறப்புரிமையன்றோ!
அன்னையே! (ஐ.நா.) மன்றில் ஆற்றினீர் பேருரையொன்று
எண்ணிடும் உம் கருத்தை ஏன் இங்கு நீர் நிலைநாட்டவில்லை?
உறையினில் எடுத்த வாளை உட்புறம் செருகிவிட்டு
மறைக்குல மாவீரர்கள் மனமுவந்து பேசலுற்றார்
அன்போடு பேசிப்பேசி ஆண்டிரண்டு ஆகிப்போச்சு
எண்ணத்தில் இடிவீழவே ஏங்குகிறார் தமிழர் எல்லாம்
அந்நியநாட்டார் இங்கு ஆதாயம் தேடி வாறார்
எண்ணியே இவரை நம்பில் ஏமாந்து போவாய் அம்மா
மண்ணில் இரு இனங்களும் மானத்தோடு
வாழவேண்டில்
கண்ணியத்தோடு பேச்சைக் கடிதினில் துவக்கு தாயே!
பேரினம் செய்துவிட்ட பெரும்பழி அனைத்தும் போக்கி
நேரிய சமாதானத்தை நிலைநிறுத்திட வருக தாயே!
அரியதோர் வாய்ப்பு அம்மா! அதனையும் நழுவவிட்டால்
பெரிய பேய் உறையும் காடாய்ப் போய்விடும் இந்த நாடு!
ஆசிய நாட்டிற்கெல்லாம் அரும்பெரும் உவமையாக
பேசியே பிணக்கைத் தீர்க்க பெருமனது கொண்டுவாரும்
புனிதனாம் புத்தன் சொன்ன பொன் மொழி தன்னை ஏற்பின்
இனியிங்கு யுத்தம் இல்லை - இன்பமே மலர்ந்து பொங்கும்.!

- விகடகவி

# இந்தியப் படைகளின் பிரம்படிப் படுகொலைகள்...



இந்திய அமைதிகாக்கும் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான குளிர்காலப் படைநடவடிக்கையை ஆரம்பித்தபோது, யாழ்ப்பாணம், கொக்குவில், பிரம்படி, தலையாளிப் பகுதிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். எதுவும் அறியாத இந்தச் சிவிலியன்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அட்டூழியத்தின் நினைவுதினம் கடந்தவாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அராஜகம் நடந்தது 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களை இலக்குவைத்து இந்திய ஜவான்கள் அடங்கிய விசேட கொமாண்டோ அணி ஒன்று யாழ். பல்கலைக்கழகப் பிரதேசத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்து தரையிறக்கப்பட்டது.



ஒக்ரோபர் 11 ஆம் திகதி இரவோடு இரவாக மருத்துவபீட மைதானத்தில் தரையிறங்கிய இந்தியப் படைகளில் ஒரு பகுதியினர் இருளோடு இருளாக மைதானத்தில் இருந்து மேற்குப் புறமாக நகர்ந்து வேலிகள், மதில்களைத் தாண்டி பிரம்படிப் பகுதிக்குள் நுழைந்து சில வீடுகளுக்குள் மறைந்து கொண்டனர்.

ஒக்ரோபர் 10ஆம்திகதி தெல்லிப்பழையில் இந்தியப் படைகளைப் பொதுமக்கள் வழிமறித்து போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவம் ஏற்படுத்திய உணர்வலைகள் கொக்குவில், பிரம்படி, தலையாளிப் பகுதி மக்கள் மத்தியிலும் காணப்பட்டன.

ஒரு பதற்றத்துடன் கூடிய பொழுதுகளை குடாநாட்டு மக்களுடன் சேர்ந்து அவர்களும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். என்றாலும் அடுத்தடுத்த நாள்களில் தங்கள் கிராமங்களில் இப்படி ஓர் அனர்த்தம் நடக்கும் என்று அவர்களில் எவருமே நம்பியிருக்கவில்லை.

11ஆம் திகதி இரவு ஹெலிகொப்டர்களின் இரைச்சல்களும், துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்கத் தொடங்கின. மக்கள் என்ன நடக்கிறது என்பதை அறியாமல் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர்.

இந்தியப் படைகளின் பல்கலைக்கழகத் தரையிறக்கத்தின் உள் நோக்கத்தைப் புரிந்துகொண்ட விடுதலைப் புலிகள் ஏற்கனவே தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தனர். கொக்குவில், தலையாளி, பிரம்படி பகுதிகளில் விடுதலைப் புலிகளின் மூத்த போராளிகள், தலைவர்களின் முகாம்கள் இருந்தன. அவற்றை ஒரே சமயத்தில் சுற்றிவளைப்பதே இந்தியக் கொமாண்டோக்களின் நோக்கமாக இருந்தது என்று இராணுவ ஆய்வாளர்கள் பின்னாளில் தெரி வித்திருந்தனர். ஆனால், புலிகள் முந்திக்கொண்டனர். புலிகளிடம் இருந்து ஒரு வலுவான எதிர்ப்பை இந்தியப் படைத் தளபதிகள் எதிர்பார்த்திருக்க வில்லை. அதேபோல இந்திய அமைதிப் படைகள் இப்படி ஓர் அட்டகாசத்தைப் புரியும் என்று அந்தப் பிரதேச வாசிகள் சிறிதும் எதிர்பார்த்திருக்கவும் இல்லை.

11ஆம் திகதி இரவு பிரம்படி வீதியால் சுமார் 12 வீடுகளின் கதவுகள் தட்டப்பட்டன. பீதியுடன் கதவுகளைத் திறந்த குடியிருப்பாளர்கள் நீளத்தாடி, தலைப்பாகையுடன் இந்தியப் படைகளைக் கண்டு திகைத்தனர். வீடுகளுக்குள் புகுந்த ஜவான்கள் அங்கிருந்தோரை ஆயுத முனையில் பிடித்து வைத்துக்கொண்டனர்.

புரியாத மொழியில், கடுமையான தொனியில் பேசிய ஜவான்கள் மக்களை மிரட்டிப் பணயக் கைதிகள் போல வைத்துக் கொண்டனர். என்றாலும் 'அமைதிப் படை' என்ற எண்ணம் மக்கள் மனங்களில் கடைசி நிமிடம் வரை இருந்தது.

மறுநாள் 12 ஆம் திகதி அந்தப் பிரதேசத்தில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும், காலையில் வீதிகளில் இறங்கிய பலரும் இந்திய ஜவான்களிடம் சிக்கினர். ஏராளமானோர் மனிதகவசங்களாகப் பிடிக்கப்பட்டனர். மருத்துவபீட மைதானத்தில் இறங்கிய இந்தியக் கொமாண்டோக்களில் ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளின் 'தாக்குதலில்' கொல்லப்பட்டனர் என்ற செய்தி குடாநாடெங்கும் பரவியது. பீதியும், பதற்றமும் அதிகரித்தன.

பிரம்படி வீதியில் துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்கின. வீதிகளில் காணப்பட்ட பலர் இந்தியப் படைகளால் சுடப்பட்டனர்.

வெளியே சென்றவர்களைக் காணாது திகைத்தவர்கள் வீதிகளுக்கு ஓடினர். கணவனைத் தேடி மனைவியும், மகனைத் தேடி தாய் தந்தையரும், அப்பாவைத் தேடி மகனும் ஓடியபோது அனைவருமே பதுங்கியிருந்த இந்திய ஜவான்களிடம் சிக்கினர்.

பிடித்து வைத்திருந்தவர்களை சுட்டுத் தள்ளியது இந்தியப்படை வீதிகள் எங்கும் முனகல். சடலங்கள் அங்கும் இங்குமாகக் கிடந்தன.

உரும்பிராய்ப் பகுதியில் இருந்து இந்திய இராணுவத்தின் கவச வாகனப் பிரிவு ஒன்று கொக்குவிலுக்குள் நகர்ந்தது.

தலையாளி, பிரம்படி பகுதிக்குள் நுழைந்த கவச வாகனங்கள் அங்கு கொல்லப்பட்ட பொதுமக்களின் சடலங்களை அடையாளம் தெரியாதவாறு சிதைத்தன. படுகாயங்களுடன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த சிலரும் கூட கவசவாகனங்களில் சிக்கி மாண்டனர்.

வயோதிபர்கள், இளைஞர்கள், குடும்பஸ்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று சகலருமே இந்தியப் படைகளின் கோரத் தாண்டவத்தில் பலியாகினர்.

அந்தப் பகுதியில் இந்தியப்படைகளிடம் சிக்கி உயிர்பிழைத்த ஒரு சிலர் பின்னர் தெரிவித்த விடயங்கள் திகிலூட்டுவனவாக இருந்தன. சுமார் 50 பேர் கொலை செய்யப்பட்டனர். வெளியிடங்களைச் சேர்ந்த சிலரும் அப்பகுதியில் வந்து சிக்கிக்கொண்டதால் உயிரிழப்புக்களின் சரியான எண்ணிக்கை தெரியவரவில்லை.

17 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்தக் கொடுமையை இந்தப் பிரதேசத்தில் தற்போது வசிக்கும் பலரும் மறந்து விட்டிருக்கலாம். ஆனால், ஈழத்தமிழர்களின் இன்னல் மிகு போராட்டப்பாதையில் இந்தச் சம்பவமும் ஒரு மாறாத வடுவாக இருக்கிறது.

- நவம

## காலங்களை வெல்லும் தலைவன்...


**தே**சிய தலைமை என்பது விடுதலைக்காகப் போராடும் மக்களின் வெற்றிக்கான முக்கிய தேவைகளில் ஒன்றாகும். மிகத் திட்டமிடப்பட்ட எதிரியின் அரச இராணுவ இயந்திரம் மற்றும் எதிரியின் பின்னணியாக உள்ள பிராந்திய சர்வதேச நலன்கள் என வெளிப்படையான மற்றும் மறைமுகமான போரை வெற்றி கொள்வதற்கான மிக முக்கிய தேவை ஒரு தேசியத் தலைமையாகும்.

இவ்வாறான தேசியத் தலைமையானது அந்தத் தேசத்தினதும் மக்களினதும் குறியீடாக வியாபித்து நின்று பன்முக நோக்குகளையும் தேவைகளையும் வெற்றிகொள்ளும். இந்த வரலாற்று நியதியின் பாதையில் இன்று போராடும் தமிழ் மக்களின் மூச்சாகவும், முகமாகவும் திகழ்ந்து வருபவர் தமிழினத்தின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஆவார்.

சிங்களம் ஏற்படுத்திய பாரிய இராணுவ நெருக்கடிகள். இந்தியா ஏற்படுத்திய சிக்கல். சர்வதேச வலைவிரிப்புகள் என தமிழீழ விடுதலைப்போர் சந்தித்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கொள்ளும் ஆற்றலின் வியாபிப்பு பிரபாகரன் என்பதில் எதிரிகளுக்குக் கூட மாற்றுக் கருத்துக் கிடையாது.

இத்தகைய வரலாற்றுப் பொறுப்பினைச் சுமக்கும் பிரபாகரன் அவர்கள் எதிர்வரும் நவம்பர் 26 இல் தனது ஐம்பதாவது அகவையை எட்டுகின்றார். இந்த வரலாற்றுக் காலகட்டத்தில் நின்றவாறு எமதுதேசிய தலைமை நடந்துவந்த நெருப்பாற்றையும். வாழ்வனுபவங்களையும் புகைப்படங்கள் ஊடாக விவரிக்கும் முக்கிய முயற்சியாக காலங்களை வெல்லும் தலைவன் **'A leader for all seasons"** - எனும் ஆவணம் அனைத்துலக தமிழர் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆவணமானது தேசியத் தலைவரின் ஆளுமையை. மனிதத்தை பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் வெளிவந்துள்ளது இத்தொகுப்பில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் சிறிய வயதுப் புகைப்படங்கள். அவரது திருமண மற்றும் குடும்பத்தலைவன் பாங்கை வெளிப்படுத்தும் பதிவுகள் தொடக்கம் அவரது மனிதாபிமானப் பங்கை விவரிக்கும், பதிவுகள் என ஆவணம் பரந்துபட்ட புகைப்படங்களின் தொகுப்பாக வெளிவந்துள்ளது.




தலைவன் உருவாக்கிய வீரமரபை விவரிக்கும் பதிவுகளும். தமிழீழ அரசின் ஆட்சிக் கட்டுமானங்களையும் உள்ளடக்கியுள்ள இந்த ஆவணமானது தமிழீழ மக்களிற்கு தாம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையை விவரிப்பதோடு தமது அடுத்த தலைமுறைக்குத் தேசியத் தலைமையை விவரிக்க உதவக்கூடியதாக அமைவது பாராட்டத்தக்கது.

இத்தொகுப்பு கடந்த 2ஆம் திகதி தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அவர்களால் முதல்பிரதிகள் சுவிஸ் பேர்ன் நகரில் வெளியிடப்பட்டன. இதன் மீள் வெளியீடுகள் தொடர்ச்சியாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெறவுள்ளன.

இந்தவகையில் பிரான்ஸில் இம் மாதம் 17ஆம் திகதியும் அமெரிக்காவில் நவம்பர் மாதம் 6 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

## கட்டுரையும் அதற்கான படமும்

கடந்தவாரம் சூரியகாந்தியில் 'சென்றிகள் மீண்டும் வேண்டுமா?' என்னும் தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையோடு சேர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருந்த படம் எவரையும் குறித்தோ அல்லது கட்டுரையில் கூறப்பட்ட விடயங்களோடு எவரையும் சம்பந்தப்படுத்தும் நோக்குடனோ வெளியிடப்படவில்லை என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். நகரின் தெரு ஒன்றைச் சித்திரிக்கும் அந்தப் படத்தில், சைக்கிளில் செல்கின்ற இளைஞர்கள் மூவரின் பின்புறத் தோற்றமே காணப்படுகிறது. எவரையும் அடையாளம்காட்டும் விதத்தில் அந்தப்படம் அமையவில்லை என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

எனினும், படத்தில் உள்ள தோற்றங்களுக்கு உரியவர்கள் தாங்களே எனக் கூறிக்கொண்டு யாழ். நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் மூவர் 'உதயன்' பணிமனைக்கு வருகைதந்தனர். பெரும் எண்ணிக்கையிலான சக மாணவர்கள் (எல்லோரும் பாடசாலைச் சீருடையில் காணப்பட்டனர்) சகிதம் வந்த அவர்கள் கட்டுரையில் தங்களது படம் பிரசுரமாகியிருப்பதாகத் தெரிவித்ததுடன், அதுதொடர்பான தங்கள் கவலையையும் ஆட்சேபத்தையும் வெளியிட்டனர்.

அந்தப் படத்தில் தோன்றும் மூவருக்கும் கட்டுரையில் கூறப்பட்ட விடயங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அத்தகைய கருத்துடன் அன்றி, வழமையான பத்திரிகை நடைமுறைக்கு ஒப்பவே அந்தப் படம் பிரசுரிக்கப்பட்டது என்று அந்த மூவருக்கும் தெரிவாகப் புரியவைக்கப்பட்டது. (ஆ-ர்)

## சத்தமும் — சந்தடியும்

# கலிபோர்னியாவில் இந்துக் கோயில் கட்டுவதில் பிரச்சினை!

கலிபோர்னியாவில் இந்துக் கோயில் ஒன்றைக் கட்டுவதற்கு அங்குள்ள இந்து சமூகத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. சமய, சமூக, இனப்பாகுபாடுகள் அற்ற ஜனநாயக நாடு என்று கூறப்படும் அமெரிக்காவின் ஒரு பகுதியில்தான் இந்த எதிர்ப்பு.

## மேலதிகமான வருமானத்தை மக்கள்நலன்களுக்கு உதவலாமே!

இந்துக் கோயில் என்பதற்காகவல்ல, இக் கோயிலினால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் என்பதனால்தான் இந்த எதிர்ப்பாம். கோயிலின் கோபுரத்தை உயர்த்திக் கட்டுவதற்கு நீதிமன்றம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இந்துமதத்தினர் தமது இறைபக்தியைப் பெரியகோயில்களைக் கட்டுவதன் மூலம்தான் வெளிப்படுத்தவேண்டும் என்பதில்லை. வெளித்தேசங்களில் வாழ்பவர்கள் தமது பொதுப் பிரார்த்தனைகள், சமயச் சடங்குகளுக்கென அளவான மண்டபங்களைக் கட்டிக்கொள்வதுடன் திருப்தியடையலாம். இந்த மண்டபங்களால் சமயப் பெரியார்களைக் கொண்டு பயனுள்ள பிரசங்கங்களுக்கும் ஏற்பாடு செய்துகொள்ளலாம். சிறுவர்களுக்குச் சமயக் கல்வியைப் புகட்ட ஏற்பாடு செய்யலாம்.

உள்நாட்டில் மிதமிஞ்சிய அளவில் பணம் சேரும்போது என்ன செய்வதென்று தெரியாமல் கோயில்களின் கோபுரங்களையும், மண்டபங்களையும் சுவர்களையும உடைத்து உடைத்துக் கட்டுவதென்பது பழக்கமாகிவிட்டது. இவ்வாறு உடைத்து உடைத்துக் கட்டுவதனால் பழம் பெரும் கோயில் சுவர் ஓவியங்கள், கட்டடக் கலை அம்சங்கள் அழிந்துபோகவும் இடம் ஏற்படுகின்றது. கோயில்களின் தேவைகளுக்கு ஏற்ப புதிய மண்டபங்கள், கூடங்கள், கோபுரங்கள் அமைக்கப்படுவது அவசியந்தான். ஆனால், அதனையே வருடாவருடம் மீண்டும் மீண்டும் நிறைவேற்றுவதென்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

இவ்வாறு சேருகின்ற மிதமிஞ்சிய வருமானங்களைக் கொண்டு எத்தனையோ பொதுக்காரியங்களுக்கு உதவமுடியும்.

போரினால் இருப்பிடமின்றி முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்குக் கோயில்களின் மேலதிக வருமானத்தைக் கொண்டு உதவினால் கடவுள் வேண்டாமென்று கூறிவிடுவாரா என்ன?

நல்ல குடிதண்ணீருக்கும், உடைகளுக்கும், உணவுக்கும் இதுபோன்ற பிறவற்றிற்கும் நம் மக்கள், நம் சிறார்கள், நம் முதியவர்கள் பொது நிறுவனங்களையும், அரசுசாரா அமைப்புக்களையும் வெளிநாட்டுப் பரோபகாரிகளையும் கையேந்தியிருக்கிறார்களே. இவர்களுக்கு உதவ இந்த தர்மகர்த்தாக்கள் ஏதும்செய்ய முன் வரக் கூடாதா? தாங்களே செய்யமுடியாவிட்டாலும் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நம்பிக்கையான நிறுவனங்கள் மூலம் ஏதும் செய்யமுடியாதா?

அதுதான் போகட்டும். போர்க்கால அனர்த்தங்களால் சீரழிந்து போயுள்ள சிறிய கிராமத்துக் கோயில்களின் புனரமைப்புக்களுக்கு உதவலாமல்லவா?

எல்லாவற்றுக்கும் மனம் வேண்டும், மனம் உண்டானால் மார்க்கமும் உண்டு.

### புத்தர் சிலையின் தலைமீது....

அமெரிக்காவில் புத்தர் சிலையின் தலைமீது ஒரு மனிதன் ஏறி அமர்ந்திருப்பது போன்ற ஒரு காட்சி ஹொலிவூட் படமொன்றில் காட்டப்படுவதாக வெளியான தகவல்கள் உலக பௌத்தர்களைப் பெரும் கொதிப்புக்குள்ளாக்கி விட்டது. குறிப்பாக, இலங்கையில் பெரும் எடுப்பில் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

இறுதியில் அந்த ஹொலிவூட் படநிறுவனம் புத்த சமயத்தவர்களின் ஆட்சேபத்துக்குள்ளான பகுதியைப் படத்திலிருந்து அகற்றுவதாகவும் தற்செயலாக இடம்பெற்றுவிட்ட அந்தக் காட்சிக்காக வருந்துவதாகவும் அறிவித்தது. புத்தர் சிலை மேல் ஒருவர் அமர்ந்து இருப்பதுபோல் வெளியான படம் வெறும் 'கிராபிக்' உருவாக்கம் என்றும் விளம்பரத்துக்காக வெளியிடப்பட்ட அக்காட்சி அசல் படத்தில் இடம்பெறாதென்றும் தயாரிப்பாளர்கள் அறிவித்திருந்தமை பௌத்தர்களுக்குத் திருப்தியளித்திருக்கவேண்டும். ஏனென்றால், எதிர்ப்பு இயக்கம் எழுந்த கையோடு முற்றுப் பெற்றுவிட்டது.

### இந்து சமய உருவங்கள்

இதேபோன்று சில மாதங்களுக்கு முன்னர் இந்துக்களின் பெண் தெய்வங்களை இழிவு படுத்தும் வகையில் பிரிட்டனில் சில பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டன.

பெண்கள் அணியும் உள் ஆடைகள், கழிவறைகளின் தள சலவைக் கற்கள் மற்றும் செருப்புக்களிலும் கூட இந்தத் தெய்வ உருவங்கள் பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடற்கரைகளில் மேலைநாட்டுப் பெண்கள் இந்தத் தெய்வங்களின் உருவம் பொறிக்கப்பட்ட நீச்சல் உடைகளுடன் காணப்பட்டதையடுத்து அங்குள்ள இந்து அமைப்புக்கள் விழித்துக் கொண்டன. பரந்த அளவில் எதிர்ப்புக் கிளம்பியதால் அந்தத் தயாரிப்புக்களை கைவிடுவதாகவும இந்துக்களின் மனங்களையும புண்படுத்தியமைக்காக மன்னிப்புக் கோருவதாகவும் அவைகளைத் தயாரித்த நிறுவனங்கள் தெரிவித்திருந்தன. இதில் பகிடி என்னவென்றால், ஒரு சமயத்தின்

**நந்தன் எழுதுவது**

மிகப் புனிதமான சின்னங்களை மிக இழிவான காரியங்களுக்குப் பயன்படுத்துகிறோம் என்ற மனப்பக்குவம்கூட இந்த மேல்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு இல்லாமல் போயிருப்பதுதான். தெய்வமும் தெய்வ அனுட்டானங்களும் அங்கே வெறும் அன்றாடக் கடமைகள் போலாகிவிட்டன. தங்கள் சமயத்தைத் தவிர ஏனையவையெல்லாம் கேலிக்கும் கிண்டலுக்குமுரியவை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ! இல்லையென்றால், இந்துக்களின் புனித சின்னங்களான பெண் தெய்வங்களின் உருவங்களை தமது நாட்டுப் பெண்களின் உள் ஆடைகளில் (ஜட்டிகளில்) பொறிக்கத் துணிந் திருப்பார்களா? இந்த உருவங்கள் அதற்குத் தான் உரியவை என்று அவர்கள் கருதியிருப்பார்கள் போலும்.

கீழைத்தேய நாடுகளில் மதங்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தபோதிலும், ஒரு மதத்தின் சின்னத்தை இவ்வாறு பகிரங்கமாக இழிவுபடுத்தத் துணியமாட்டார்கள். குறிப்பாக, தீவிர இந்து சமயத்தவர்கள் எல்லா மதங்களிலும் உண்மையுண்டு என்று நம்புவதனால் சகல மதங்களும் இறைவனை நோக்கியே மனித

(VI பக்கம் பார்க்க)

# வழித்துணையாகாத வருந்தல்கள்...!

கடவுள் எழுதிய அழகான ஓவியங்களாய் மனிதர்கள் இவ்வுலகில் உலாவருகிறார்கள். கடவுளுக்கும் சிலவேளைகளில் கைபிழைபாடு ஏற்பட்டுவிடுகின்றது போலும். அவனுடைய ஒரு சில ஓவியங்களில் கோணல்கள் விழுந்துவிடுகின்றன. அந்தக் குறைபாடுடைய ஓவியங்களை 'ஊனமுற்றவை' என்று ஏக வசனத்தில் கூறிவிடுகிறார்கள்.

ஓவியம் கலைந்தது என்று ஓவியனுக்குக் கவலையில்லை. ஏனென்றால், கடவுள் எனும் ஓவியன் குணம், குறி இல்லாதவன். ஆதலால் அதை வரைந்த தூரிகைக்கும் வ்ண்ணங்களுக்கும் வருந்துவதற்கு வாய்ப்பில்லை.

மனித ஓவியங்கள் பல வண்ணங்கள். கறுப்பு, வெள்ளை, மஞ்சள், மாநிறம் என்று பருமட்டாய்க் கூறலாம். குறைபாடுகள், வண்ண வேறுபாடுகள் இன்றி எங்கும் நிறையவே காணப்படுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களில் இருக்கின்ற குறைபாடுகளை உடற்திறன் குறைபாடு என்று நயம்பட உரைக்கின்றார்கள். இதனால், இக்குறைபாடுகள் உடையவரை உடற்திறன் குறைந்தவர் என்று விளிப்பதே நயக்கத்தக்க நாகரிகமாகும்.

பள்ளிப் பருவத்திலேயே நண்பர்களுக்குப் பட்டங்கள் வைத்துப் பகிடி பண்ணிப் பழகிவிட்டார்கள். இளமையில் வைத்த பட்டம சிலை மேல் எழுத்தாகி சீவியம் முழுவதும் நிலைத்து விடுவதும் உண்டு. கூன், குருடு, செவிடு, விசர், ஊமை முதலிய சொற்களைப் பெயர் அடைமொழிகளாகப் பாவிப்பது பாதகம் என்பேன். காரணம் எதுவாக இருப்பினும், உடற்திறன் குறைந்தவனை இத்தகைய சொல்லம்புகளால் புண்படுத்தாதீர். சொற்களில் நயமில்லாத சொல்லல்ல. இது கனியிருக்கக் காய் கவர்தலுக்குச் சரியானதாகும்.

உடற்திறன் குறைந்தவர்கள் உலகத்தில் எட்டு சதவீதத்தை எட்டிவிட்டார்கள். பிறப்பால் மட்டுமன்றி, போர், விபத்து, நோய், தற்கால நெருக்கடியான வாழ்க்கை முறை முதலிய பல காரணங்களால் உடற்திறன் குறைபாடு ஏற்படுகிறது. ஒரு சில அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டுமே இத்தகையோருக்கு ஓரளவு பாதுகாப்பு இருக்கிறது. தமது நாட்டு மக்களையே பாதுகாக்க முடியாமல் தவிக்கின்ற நாடுகளில் இத்தகையோரைக் கவனிப்பவர் யாரும் இல்லை.

இவர்களிற்பலர் இன்றுங்கூட வீட்டு மூலைகளில் முடங்கிக் கிடக்கிறார்கள். இவர்களில் இரண்டு சதவீதமானோர் எழுத்தறிவு உடையோராய் இருக்கின்றனர். இவர்களுக்கு மூன்று சதவீதமான வேலைவாய்ப்பினை வழங்கவேண்டும் என்று கருத்தளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், நடைமுறையில் இவர்கள் வேலைவழங்குவோரால் மூன்றாம் தரத்திலேயே வைத்து மதிப்பிடப்படுகின்றார்கள். இவ்வருடம் அரச எழுதுவினைஞர் சேவைக்கு உடற்திறன் குறைந்தவர்களில் 80 பேரைச்



சேர்த்துக்கொள்வதாக அறிவித்தல் வந்திருப்பது எமக்கு ஆறுதலாக உள்ளது. இவர்களுக்கு அதாவது, இந்த உடற்திறன் குறைந்தவர்களுக்கும் கூட யாராவது ஊக்கமும் உதவியும் கொடுத்தால் இவர்களாலும் ஆக்கமுள்ள செயற்பாடுகளில் ஈடுபடமுடியும்.

தனது பார்த்தல், கேட்டல், பேசுதல் ஆகிய புலன்களினைக் காவு கொடுத்த பின்னரும் ஹெலன்ஹெல்லர் கல்வியால் உயர்ந்து அமெரிக்க நாட்டின் மதிப்பிற்குரிய முதற்பெண்மணி என்ற பெருமையினை எட்டினார். அவர் சென்ற வழியினைப் பின்பற்றி இன்றுவரை சாதனை படைத்தவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். ஒவ்வொருதுறையிலும் இவர்கள் தங்கள் முத்திரைகளைப் பதித்திருக்கிறார்கள். இசையில் பீத்தோவான், கர்நாடக சங்கீதத்தில் எஸ்.ஆர்.மாருதிபிரசாத், வெங்கடசுப்பிரமணியன் ஒலிம்பிக் சாதனையில் (நீச்சல்) வயர்சிமா, கின்னஸ் சாதனையில் கோன் லெளேன், யோகோ ஒனோ சைக்கிள் ஓட்டத்தில் ஆம்ஸ்ரோங்....... என்று இப்படியாக ஒரு நீண்ட பட்டியல் இருக்கின்றது.

நெஞ்சில் உரமும் செயற்றிறனும் கொண்டு சாதனை படைத்தவர்கள் சக்கரைப் பொங்கலில் போட்ட பயறின் அளவுக்குத்தான் உள்ளனர். அரிசி மணிகளாய் அவிந்து அல்லற்படுபவர்களே அநேகம்பேர். இவர்கள் சமூகத்தில் உள்ள உங்களின் உதவிக்கரங்களை எதிர்பார்த்து நிற்கிறார்கள். உடற்திறன் குறைந்தவர்களுக்கு உதவுவது ஒவ்வொரு குடிமக்களினதும் சமூகக் கடமை என்பதனை உணரவேண்டும். இவர்களுக்குப் பொருளாதார உதவிகள்தான் செய்யவேண்டும் என்பதில்லை. போக்குவரத்தின்போது அல்லது வேறு பொது இடங்களிற்கூட அவர்கள் சுமுகமாகப் போய்வர உதவி செய்யலாம். அத்துடன், அவர்களோடு சிறிது நேரம் உரையாடி மகிழ்வது அவர்களது மனதிற்கு இதமாக இருக்கும். 'ஊனம் என்பது பாவம் அல்ல; ஊனம் என்பது சாபமும் அல்ல' என்பார் கவிஞர் வைரமுத்து.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று
அறிவறிந்த ஆழ்வினையின்மை பழி" ~ என்பது வள்ளுவம்.

"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ" என்பார் கவியரசர்.

'மனிதரில் உயர்வு தாழ்வு என்பது இல்லை' என்று பாரதியின் வரிகளும் கூறும்.

இவற்றின் பொருள் எல்லாமே ஒன்றுதான்.

உடற்திறன் குறைந்தவரையும் சமனாக நினைத்து ஒன்று போல் நடத்துவதே மனிதநேயம் ஆகும். சிலர் அடுத்தவர்களைச் சீண்டிப்பார்ப்பதில் ஆனந்தம் அடைகிறார்கள். 'இன்னொருவரின் வேதனை இவர்களுக்கு வேடிக்கை' இதனையே 'இதயமற்ற மனிதருக்கு இதுவெல்லாம் வாடிக்கை' என்று வருத்தப்படுகின்றார் கவியரசர்.

உலக மக்களிடையே பார்வையற்றவர்கள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாளில் விழிப்புலனற்றவர்களுக்கு வழித்துணையாக இந்த சமூகம் இருக்கவேண்டிய தேவையை உணரவேண்டும். அவர்களையும் சமூக ஓட்டத்திலே இணைத்துக்கொண்டு அவர்களும் சாதாரண மனிதர்களைப் போல் வாழ்வதற்கு உதவுகின்ற உள்ளத்தை நாம் எல்லோரும் பெறவேண்டும்.

எல்லா மனிதர்களும் இந்த உலகத்தில் வாழ உரிமை உடையவர்கள் "வாழ்க்கைக்குப் பணம் வேண்டும். மலருக்கு மணம் வேண்டும். எல்லோருக்கும் நல்ல குணம் வேண்டும். வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நிதானம் வேண்டும். உடற்திறன் குறைந்தவர்களுக்கு சமாதானம் வேண்டும். மனதிலே சமாதானம், அமைதி இருந்தால் கண்பார்வை இல்லாதவர்களும் கூட சாதனைகளைச் செய்வார்கள் என்பது நிச்சயம். இவை யாவற்றிற்கும் உங்களின் நல் உள்ளம் அவசியம்.


- சு.சிவராசா

# சேதுகால்வாய்த் திட்டம் சாத்தியமாகுமா?

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஆழம் குறைந்த கடற்பரப்பினை ஆழமாக்கிக் கப்பல் போக்குவரத்தினை மேற்கொள்வது என்பது சேது கால் வாய்த் திட்டம். சொல்லுக்கு இலகுவாய் உள்ளது. நடை முறைக்கு சாத்தியப்பட்டதாகவும் இரு நாடுகளில் உள்ள வர்களின் சம்மதமும் இருக்குமா?

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஏற்படவுள்ள பிராந் திய பாதுகாப்பு நலன் சார்ந்த பிரச்சினைகளும் புவியியல், பொருளாதாரம், அரசியல் என்ற நீண்டசிக்கல்களும் இத் திட்டத்தின் பின்னால் உள்ளன.

சேது சமுத்திரத்திட்டம் 1860 அளவில் பேசப்பட்டு ஆரம்பிக்கப்படலாம் என்றநிலையில் இருந்தது. பின் இருநாடுகளின் சுதந்திரத்திற்கு பின்னான காலங்களிலும்




மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறிய இருநாட்டு அரசியல் தலைமைகளும் இது தொடர்பான பேச்சுக்களை எடுத்த போதும் அது பேச்சளவிலேயே முடிந்து விட்ட விடய மாகவே இருந்தது.

கடந்த ரணில் அரசும் பா.ஜ.க.(B.J.P.)அரசும் பாலம் போடுவது தொடர்பாகப் பேச்சுக்களை இந்தியாவில் வைத்து நடத்தின. அதுவும் பேச்சுடனேயே முடிந்துவிட்டது. அப் போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர் ணான்டஸ் இத்திட்டம் ஆரம்பமாகிவிட்டது என்ற தொனியில் கருத்துக்களை வெளியிட்டார்.

இத்திட்டம் சாத்தியம். ஆனால், தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் உள்ள பாலத்தினால் தமிழ் நாட்டையும் கொழும்பையும் இணைத்து வேக நெடுஞ்சாலை ரயில்பாதைகளை அமைப்பதால் சென்னையையும் கொழும்பையும் இணைக்கலாம். இடையில் பிரிந்து செல்லும் இந்த வேகப் பாதைகள் (EXPRESS WAY) திருகோணமலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு செல்லும் வகையில் திட்டங்கள் (நன்றி: உலக உலா XXVIII கலாநிதி சோமஸ்கந்தன்) முன்பு இருந்தன.

### இந்தியாவிற்கு ஏற்படப்போகும் நன்மை

இந்தியாவின் கப்பல்கள் மேற்குப் பகுதியில் இருந்து கிழக்குப் பகுதிக்கோ, அன்றி கிழக்குப் பகுதியில் இருந்து மேற்குப் பகுதிக்கோ செல்வதாயின் இலங்கையைச் சுற்றியே செல்லவேண்டியுள்ளது. இதற்குக் காரணம் இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையேயான ஆழம்குறைந்த கடற்பகுதி. இதனை ஆழமாக்குவதால் இலங்கையைச் சுற்றிச் செல்ல வேண்டிஏற்படாது. இதனால், 400 கடல் மைல் நீளமான 36 மணிநேர கடற்பயணத்தைக் குறைக்க முடியும்.

இதனால், போக்குவரத்துக்கான செலவுகள், நேரம் மீதப்படுத்தப்படும். அரபிக் கடலில் பயணிக்கும் கப்பல்கள் மன்னார் வளைகுடா வழியாக பாக்ஜலசந்தி சென்று வங்கக் கடலுக்குச் சென்றுவிடும்.

### இதனால் இலங்கைக்கு என்ன?

தெற்காசியாவில் உள்ள முன்னணி துறைமுகங்களில் ஒன்று கொழும்புத்துறைமுகம். 1997 ஆம் ஆண்டு பெறப்பட்ட தரவின்படி உலகில் அதிகூடிய இலாபத்துடன் இயங்கும் துறைமுகங்களில் இருபத்திரண்டாம் (22) இடத்தை கொழும்புத்துறைமுகம் பெற்றுள்ளது.

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் சாத்தியமானால் காங்கேசன்துறை துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம் போன்ற தமிழர்களின் ஆளுகைக்குட்பட்ட துறைமுகங்கள் வளம் பெற்றுவிடும். இதனைச் சிங்கள பேரினவாத அரசுகள் விரும்புமா?

யாழ்.குடாநாடு நிலத்தடி நீரையே நம்பியுள்ளது. குடிதண்ணீர் மற்றும் விவசாயத் தேவைகளினை இதன் மூலம் பூர்த்தி செய்கின்றனர். நாளாந்தம் விவசாயத் தேவைக்காக பெருமளவான நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகின்றது.

தற்போது யாழ்.குடா நாட்டின் சில இடங்களில் நீர் உவர்த்தன்மையாக மாறிவருகின்றது. குடாநாட்டின் நீர்மட்டம் கடல் மட்டத்தைவிட தாழ்ந்திருக்கிறது. கடல் படுக்கையை ஆழமாக்கும்போது தரைப்பகுதிக்குள் கடல்நீர் செல்லும் அபாயம் உள்ளது. நிலத்தடி நீர் இதனால் உவர்த்தன்மையாக மாறும். இதன் தாக்கம் உடனடியாக உணரப்படாது விட்டாலும் காலப் போக்கில் ஏற்படவாய்ப்புக்கள் உள்ளன.

குடாநாட்டிற்கான நன்னீரை பெற்றுக்கொள்ள ஆனையிறவு கடல்நீரேரியினை நன்னீராக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கும் போது இன்னுமொரு தலையிடியாக இந்த சேது சமுத்திரத்திட்டம் உள்ளது.

### அனுமதிப்பார்களா இராம பக்தர்கள்?

இராமாயண காலத்தில் இராமன் இலங்கைக்கு வர அனுமனால் போடப்பட்டதாக கூறப்படும் இராமர் அணையைத் தகர்க்க இந்தியாவின் மதம் சார்ந்த கட்சிகளும் இராம பக்தர்களும் சம்மதிப்பார்களா? -

அமெரிக்காவின் நாசா ஆய்வுக்கழகம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் முன்பு பாலம் இருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் நாசாவின் செயற்கைக்கோள் ஒன்று இப்பிரதேசத்தை படம் எடுத்துள்ளது.

இவற்றைக் கொண்டு நெதர்லாந்து நாட்டின் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் புவியியல் விஞ்ஞானியான ஆஃபு சில்லிங் என்பவர் இந்தப் படத்தை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.

அவர் கூறியதாவது:-

இயற்கையிலேயே இந்தப் பாலம் இருந்தது. இதற்குப் பெயர் ஆதாம் பாலம். தலைமன்னாருக்கிடையே இருந்த இந்தப் பாலம், பல குட்டித்தீவுகள் ஒன்றாக இணைந்து உருவானது. இந்தத் தீவுகள் சுண்ணாம்பால் ஆனவை. முன்பு கடல் நீருக்கு வெளியே இந்தச் சுண்ணாம்புக்கல் பாலமானது தெரிந்தது. காலப்போக்கில்தான் கடலுக்குள் மூழ்கியது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் மூழ்கியிருக்கும் பாலத்தை மேலே கொண்டுவர முடியும் - என்கிறார் சில்லிங்.

சுண்ணாம்பு என்பது கல்சியம் கார்பனேட் என்பதை அறிவோம். இந்த சுண்ணாம்பு கற்பாறைக்குள் ஆழமாகத் துளைகளைப் போட்டு அதில் சல்பூரிக் அமிலத்தை செலுத்தவேண்டும். இது இரசாயன மாற்றத்தால் ஜிப்சமாக (கல்சியம் சல்பேட்) ஆகிவிடும். சுண்ணாம்பிலும் பார்க்க ஜிப்சம் அதிக இடத்தை ஆக்கிரமிக்கக் கூடியது. சுண்ணாம்பு ஜிப்சமாக மாறும்போது பாறையின் அளவுபெரிதாகி மேலே எழும் (செயற்கைக் கோளின் தரவுப்படி கடல்மட்டத்தில் இருந்து 2 மீற்றருக்கு சுண்ணாம்புக் கற்பாலம் மூழ்கி இருக்கிறது).

இந்த தொழில்நுட்பத்தை 2000 ஆம் ஆண்டு தமது பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட பரிசோதனையின் வெற்றியின் பின் தெரிவித்தார் சில்லிங். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆதாம் பாலத்தை மேலே கொண்டுவர முடியும் என்று உறுதியாகத் தெரிவித்தார்.

இந்தியாவின் தொழிற்சாலைகளில் பெருமளவான சல்பூரிக் அமிலம் கழிவுப் பொருளாக உற்பத்தியாகிறது. இதனைக்கொண்டு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் தரைவழித் தொடர்பை ஏற்படுத்தலாம். பாரதியின் கனவும்

சி.கேசவன்

நனவாகும்.

இவற்றை எல்லாம் மறந்து பணமுதலைகளின் நன்மைக்காக இயற்கையின் அழிவிற்கு வழிகோலுகின்ற செயற்பாடுகளில் இந்திய மத்திய அரசு இயங்குவது இலங்கைக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது ஒரு சாராரின் கருத்து.

எது எவ்வாறெனினும், சேது சமுத்திரக் கால்வாய் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலேயே உறுதியாக சேதுகால்வாய்த் திட்டம் சாத்தியம் என்று கூறமுடியும்.

இந்திய, இலங்கை நிலைவரங்களை உன்னிப்பாக ஆய்ந்து அறிவோர் மேலும் காரணங்களை அறிவர்.

## வினை இல்லை ஒல் விடை!

பயம் சுரக்கும்
உன் விழிகள்.....
ஏதோ செய்தி சொல்கிறது
மொழியின் வலி புரியாது
முழிக்கிறேன் நான்!
மொழி பெயர்க்க முடியாது
நண்பர்களும் கைவிரிக்கின்றனர்.

அன்பே உந்தன்
கணநேரப் பார்வையொன்றில்
தூரப்போய் நான்
விழுந்து போகிறேன்.
கோரம் இல்லா உன் நினைவில்
கோலம் என் மனதெங்கும்
விழுந்து போயுள்ளது.
வீரம் இல்லாக் காரணத்தால்
விடைக்கு ஆசை கொள்கிறேன்
வினாவினைத் தராமல்!

நீயெனக்கு மட்டும் தானென்று
பிரகடனம் செய்கின்றேன்
ஒருசிறு வட்டத்துள் மட்டும்!

துணிவில்லா எனக்கேன்
காதலென்று... உன்னைத்
தூர எறிய முடியாது
துடித்துக் கொள்கிறேன்.
அணிசேர்க்கும் உன் நாமத்தை
என் நாமத்தோடு சேர்த்தெழுதி
காகிதங்களைப் பத்திரப்படுத்துகிறேன்
காதலையும் தான்!
என்றாவது ஒரு நாள்...
உன்னிடம்
வினாவினைச் சொல்கிறேன்
நீ விடையினைத் தா!

நண்பர்கள் சொல்கிறார்கள்
அன்பே... அப்போது நீ...
யாருக்குச் சொந்தமென்று
யாருக்குத் தெரியுமென்று?

எனினும்..... என் உயிரே
நான் என்ன செய்ய?

வீரம் இல்லாக் காரணத்தால்
வினாவினைத் தராமல்
விடைக்கு ஆசை கொள்கிறேன்.

**த.அஜந்தகுமார்,**
முதலாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## திருவிழாவும் நீயும்

இன்றிந்தத் திருவிழா
வெகு கோலாகலமாய்க்
களை கட்டுகின்றது.
நீ வருவாயென்றெண்ணியே
நானும் தரிசனம் வேண்டி
வந்தெழுந்தருளினேன்.

உன்னைத் தேடும்
படலத்தில்...
படருமென் நினைவுப் பாடல்கள்
உனையடையுமுன்...
உயிர் துறக்குமோ என்றஞ்சி
உருகிப் போய் நான்
"வேட்டியோடு" அலைகிறேன்.

ஐஸ்கிறீம் கடைகளில்
ஏதோவொரு கதிரையிலாவது
நீ முகம் காட்டாயோ வென்று
நினைவேங்கும் கணங்களோடே
நான் நடக்கின்றேன்,
நான் திரிகின்றேன்.
உனை மட்டும் காணவில்லை.

காண நினைக்காதோரைக்
கண்டேன்.
காணவேண்டாமென்றிருந்தாரையும்
கண்டேன்.
உனை மட்டும் காணாதென் நெஞ்சு
பொறுக்காது திணறிற்று.

வாய் அரற்றி
ஏதேதோ நான் புலம்பி...
கோயில் வீதியில்
நீயில்லா அநாதையாகித்
திரிகின்றேன்.
நீறிடவோ பொட்டிடவோ
கற்பூரம் கொளுத்தவோ
என்னால் முடியவில்லை.

சன நெரிசலும்
உன் நினைவு நெரிசலும்
காரணமாய் வியாபகம் கொண்டிற்று.

நான் திரும்பி வீடு வந்தேன்.
இப்போது எனக்குள்
நீ... சிரித்தபடி
சிதையாது வீற்றிருக்கிறாய்.

**கவிநேசன்.**

# வித்தகர் விபுலானந்தரும் பாரதியார் பாடல்களும்...



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மரபுக் கவிதைகளின் செல்வாக்கு நிரம்பி இருந்தது. சங்க இலக்கியங்களில் வல்லவரான பல புலவர்கள் தமது ஆக்கங்



களை மரபுக் கவி மூலமாகவே வெளியிட்டு வந்தனர். தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ் குறவஞ்சி, மணிமாலை, முதலாம் பிரபந்தங்கள், மரபுக் கவிதைகளாலேயே ஆக்கப்பட்டு வந்தன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவரான சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், சிறந்த தமிழ் அறிஞராகவும் ஆழ்ந்த சிந்தனையாளராகவும் இருந்தமையால் அவர் மரபுக் கவிகளின்றி புதிய முறையில் கவிதைகள் ஆக்கினார். அவரது அப்புதிய முறையிலான கவிதைகளை அக்காலத்தில் வாழ்ந்த பல தமிழ் அறிஞர்கள், தரமான கவிதைகள் என்று ஏற்க மறுத்துவிட்டனர்.

இந்த நிலையிலே, சென்னையில் இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த விபுலானந்த அடிகளாரிடம் தாம் கொண்டிருந்த மதிப்பினால் பாரதியார் பாடலை முன்வைத்தனர். அடிகளார் மும்மொழிகளன்றி முத்தமிழ் வித்தகராகவும் விளங்கியவர். சங்கீத சாஸ்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். பாரதியாரின் பாடல்களை நன்கு ஆராய்ந்த அடிகளார் அப்பாடல்களில் தேசீயம், சமயம் சம்பந்தமான நல்ல பல கவிதைகள் அமைந்திருந்ததைக் கண்டுகொண்டார். பாரதியாரின் கவித்திறனை மெச்சிய விபுலானந்த அடிகளார் அவற்றை எப்படியும் அச்சேற்றி அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்று விரதம் புணடார்.

அதற்காகத், தமிழ் நாட்டிலேயே தக்க அறிஞர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையைக் கூட்டி, அச்சபையில் பாரதியாரின் பாடல்களில் சிலவற்றை தாமே இசைத்துப் பாடிக் காட்டினார். அங்கே கூடியிருந்த அறிஞர்கள் சிலரும் சில பாடல்களைத் தாமே இசைத்துப் பாடி அவற்றில் பொதிந்து கிடக்கும் பொருள் வளத்தைக் கண்டுகொண்டனர்.

### அறிந்ததும் அறியாததும

புதுக்கவிதைகளைப் புதிய பாணியில் இசைத்துப்பாடி, தேசீயத்துக்கு அவை உகந்தனவாக இருக்குமாறு அச்சேற்றியும் விட்டார்கள். இன்று அப்பாடல்கள் எல்லாம் எல்லாத் தமிழ்மக்கள் வாயிலும் இசைக்கப்படுகின்றன. எல்லா வானொலிகளிலும் அவை ஒலிபரப்பப்பட்டும் வருகின்றன.

இவ்வாறு தமிழ்ப் புலவன் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களை உலகறியச் செய்தவர் நமது விபுலானந்த அடிகளார் என்று பெருமையுடன் கூறி மகிழக் கூடியவர்கள் நமது ஈழத்தமிழர்களேயாவர்.

### சிதம்பரத்துக்கு ஒரு பல்கலைக்கழகம்

அக்காலத்தில் சென்னையில் ஒரு பல்கலைக்கழகம் மாத்திரமே இருந்தது. சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் கட்டாயம் வேண்டும் என அக்காலத் தமிழ் அறிஞர்கள் பலரும் விரும்பினர். விபுலானந்த அடிகளார் முத்தமிழ் வித்தகராக மட்டுமன்றி பன்மொழிப் புலவராகவும் இருந்தமையால் அவர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு சென்னை சென்று பல காரணங்களை எடுத்துக்கூறி அரசாங்கத்திடமிருந்து புதியதொரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொண்டது.

அதன்பின், குழுவினர் மதிப்புக்குரிய அண்ணாமலைச் செட்டியாரிடம் சென்று, தமது கருத்தை எடுத்துக் கூறினர். அண்ணாமலைச் செட்டியாரின் பெரும் பொருளுதவியால் சில வருடங்களிலேயே பல்கலைக்கழகம் எழுந்து நிமிர்ந்து வானளாவி நின்றது. அங்கே பல்துறை சார்ந்த பாடநெறிகள் கற்பிக்கப்பட்டன.

தமிழ்த்துறைக்கு அப்பல்கலைக்கழகத்தில் விபுலானந்த அடிகளாரே தலைவராக நியமிக்கப்பட்டார். அடிகளாரிடம் வெள்ளைவாரணனார், அருணாசலம் என அழைக்கப்பட்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்ற பல மேதாவிகள் படித்து வித்து வான்களாகினர்.

ஆகவே, இப்பல்கலைக் கழகம் அதனை உருவாக்கக் காரணமாக இருந்தவரின் பெயரால், "அண்ணாமலைப் பல்கலைக்கழகம்" என அழைக்கப்பட்டது." "பல்கலைக்கழகம் அமைந்த பிரதேசம் அண்ணாமலை நகர்" எனவும் வழங்கப்பட்டது.

இதன்பின்னர் 1942 ஆம் ஆண்டளவில் நமது ஈழநாட்டில் கண்டி, பேராதனை பல்கலைக்கழகத்தில் சில ஆண்டுகாலம் விபுலானந்த அடிகளார் தமிழ்த்துறை பேராசிரியராக இருந்து பல அறிஞர்களை உருவாக்கினார். அடிகளாரின் செயறபாடுகள் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமைதரக் கூடியதாக அமைகின்றது.

முதுபெரும் புலவர், கலாபூஷணம்,
வை.க.சிற்றம்பலவனார்.

# கிழக்கும் மேற்கும் இணையாது...!

நாடர்ச்சியாக இந்த நாட்டில் நிலவிய யுத்தத்தால் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்கு உள்ளானவர்களும, அதே யுத்தத்தைக் காரணம் காட்டிப் பணம் தேடும் நோக்கில வெளிநாடுகளுக்குச் சென்றவர்களும் அடங்கிய புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத்தாரில் அவனும் ஒருவன்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவுக்குள் நுழைந்தவன், ஆரம்பத்தில் அங்கும் இங்கும் பகுதிநேர வேலைசெய்து, காலபோக்கில் நிரந்தர வேலையில் அமர்ந்து, படிப்படியாகக் குடியுரிமை பெற்று, தன் சினனஞ்சிறுவயதில் பெற்றோருடன் கனடாவுக்குச் சென்று தங்கிவிட்ட யாழ்ப்பாணத்துப் பெணணொருதியை மணம்செய்து, இரு பிள்ளைகளுக்குத் தந்தையாகி, சொந்தமாக கார், வ்டு என்ற அந்தஸ்துக்களுடன் இன்று வசதியாக வாழ்ந்து வருகின்றான்.

சரி, இப்போது விஷயத்துக்கு வருவோம்.

யாழ்ப்பாணத்தில் அவன் பிறந்து வளர்ந்த குக்கிராமத்திலேயே தங்கிவிட்ட தனது பெற்றோரில் தற்போது உயிருடனிருக்கும் தாயைப் பார்க்க இத்தனை ஆண்டுகள் கழித்து தன் குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்திருக்கிறான்.

பத்து ஆண்டுகளுக்கு முன் தகப்பன் காலமாகிவிட, தகப்பன் வழி உறவினரொருவரின் பராமரிப்பில் வாழும் தாயுடன் ஒரு சில நாள்களைக் கழிக்கவும், பிறந்து வளர்ந்து தன் இளமைக்காலத்தைக் கழித்த அந்த ஊர் மண்ணில் மீண்டும் கால் பதிக்கவும், ஒன்றாய்ப் படித்துக் கூடி விளையாடிக் கும்மாளமடித்த நண்பர்களைக் கண்டு பேசி மகிழவும் கிடைத்த வாய்ப்பு அவனது மனதுக்குப் பெரும் இதமளித்ததென்னமோ உண்மைதான்.

பெற்றெடுத்த தன் ஒரே மகனை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நேரில் காணவும், முன்னொருபோதும் நேரில் சந்தித்திராத தன மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகளைக் கண்டு பேசி மகிழக் கிடைத்த வாய்ப்பு அவனது வயதான தாயின் மனதைப் புளகாங்கிதம் அடை யச் செய்திருக்கும் என்பதும் உண்மைதான்.

ஆனால்... யாழ்ப்பாணத்தில் பிறந்தபோதும், தன் சின்னஞ்சிறு வயதிலேயே இம் மண்ணை விட்டுச் சென்று விட நேர்ந்ததால், யாழ்ப்பாணத்து மண்வாசனை மற்றும் கலாசார விழுமியங்களை அனுபவித்துணரச் சந்தர்ப்பம் கிட்டாததால், மேற்கு நாட்டுக் கலாசாரத்துடன் ஒன்றிப்போய் விட்ட அவனது மனைவிக்கும், கனடா மண்ணில் பிறந்து அந்நாட்டுச் சூழ்நிலையில் வளர்ந்த காரணத்தால் அவனது பிள்ளைகளுக்கும் யாழ்ப்பாணத் துச் சூழலும், யாழ்ப்பாணத்தாரின் வாழ்க்கை நடைமுறையும் கொஞ்சமும் ஒத்துவரவில்லை.

குறிப்பாக அவர்களது கற்பனை உருவில் நிலைபெற்றிருந்த அவர்களது 'மதர் இன்லோ' ஆகவும், 'கிறாண்ட் மா' ஆகவும் அவனது தாய் இருக்கவில்லை;

இதன் பிரதிபலிப்பாய், அவனது தாய் எவ்வளவுதான் பரிவோடும் பாசத் தோடும் அவர்களைக் கிட்ட நெருங்க முயன்றாலும், அவனது மனைவியும் பிள்ளைகளும் மனதாலும், செயலாலும் அந்த வயதான கிழவியை விட்டுத் தூர விலகிச் செல்ல முயன்றனர்.

உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பாசம் மிகுந்த தாய்க்கு கடைசியில் மிஞ்சியது ஏமாற்றமே.

நான்கு நாள்களுக்கு முன்னர் நடந்தது இதுதான்.

பல ஆண்டுகள் கழித்துச் சந்திக்க நேர்நத பால்ய வயது நண்பனும், இத்தனை ஆண்டு காலமும் தன் தாயின் தேவைகளை அக்கறையுடன் கவனித்து உதவியவனுமான தன் நெருக்கமான நண்பனொருவனுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தான.

பேச்சு வாக்கில், பிள்ளைகளுக்குத் தமிழ் உணர்வே தெரியாத வகையில், தமிழ் தெரியாத தமிழர்களாக வளர்த்திருப்பதாக அவனது நண்பன் உரிமையுடன் இவன் மீது குற்றம்சாட்டினான்;

"என்ன செய்வது; சூழ்நிலை அப்படி! நாம் இருவரும் தொழில் பார்ப்பதால் வாழ்க்கை இயந்திரமயமாய் அமைந்து விடுகிறது."

நணபனின் குற்றச்சாட்டை சமாளிக்க இவனுக்கு வேறு வழியேதும் இருக்கவில்லை.

விடைபெற்றபோது, வசதி கிடைக்கும் போது தனது வீட்டுக்கு விஜயம் செய்யுமாறு அந்த நண்பன் அழைப்பு விடுத்தான்.

அழைப்புக்குக் கௌரவம் கொடுத்து இனறு மனைவி பிள்ளைகளுடன் நண்பனின் வீட்டுக்கு இவன் போனதால்தான் இத்தனை மன உளைச்சல்பட வேண்டி நேர்ந்துள்ளது.

ஓரளவு வசதியாக வாழ்ந்த இவனது நண்பனின் வாழ்க்கையைப் பாழாய்ப் போன யுத்தம் தலைகீழாக மாற்றி விட்டிருந்தது.

செய்து வந்த தொழிலையும் இழந்து, வீடுவாசல் சொத்துப்பத்தெல்லாம் இழந்து, நிர்க்கதியாகிச் சிரமமான நிலையில் வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தாலும் அவன் சோர்ந்துவிடவில்லை. அவனது எண்ணங்களும், உணர்வுகளும் எந்த வகையிலும் பாதிப்புறவில்லை.தனக்கு

வீயெஸ்ரி

மதிப்பளித்து, தம் நெருக்கமான நட்புக்கு கௌரவமளித்து தன் வீடு தேடிக் குடும்பத்தாருடன் வந்த நண்பனின் பெருந்தன்மை கண்டு அவன் மனம குதாகலித்தது; கஷ்டத்தின் மத்தியிலும் நண்பனுக்கு விருந்தளித்து, அன்பொழுக உபசரித்து அனுப்பி வைத்தான் அவனது ஆத்ம நண்பன்.

திரும்பி வரும் வழியில் தன் நண்பனின் தரித்திர நிலையைச் சுட்டிக்காட்டி விமர்சித்ததோடு, வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதால் ஏதோ பெரும் உதவியை எதிர்பார்த்தே இவ்விதம் விழுந்து விழுந்து அவர்கள் உபசரித்ததாக மனைவி கற்பனையில் உருவாக்கி வெளியிட்ட கருத்து ஒருபுறம். அவர்கள் அன்போடு தயாரித்து வழங்கிய உணவை உட்கொண்டதால் வயிற்றைக் குமட்டுவதாக மகள் ஜாடை காட்டிக்கேலி செய்தது ஒருபுறம்.

இத்தனைக்கும், மனதில் தோன்றிய வேதனையையும் வெறுப்பையும் வெளியில் காடடிக் கொள்ளாது மௌனம் சாதித்தான் அவன்,

"இதோ, கேட்டுக்கொள்ளுங்கள்! கனடாவுக்கு வருமுன்னர், நானும் பெற்றோரும் இதை விடத் தரித்திர நிலையில்தான் வாழ்ந்தோம்; அப்போதெல்லாம் எம்மை ஆதரித்து உதவியவர்கள் என் நண்பனும் அவனது பெற்றோருமே. அவனது தற்போதைய வறுமை நிலையைச் சுட்டிக்காட்டி எங்கள் நட்பைக் கொசசைப் படுத்துவது கொஞ்சம் கூட நியாயமற்றது."

இப்படி உரத்துச் சத்தமிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு; மனதில் இவ்விதம் புழுங்கனாலும் வெளியில் வாய்விட்டுச் சொல்வதற்கு அவனது வரட்டுக்கௌரவம் தடைபோட்டது. சிலவேளைகளில் உண்மைகள் ஊமையாகிவிடுகின்றன.

இன்னும் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் இந்த மண்ணின் கலாசாரத் தனித்துவத்தையோ, விழுமியத்தையோ எவராலும மாற்றிவிடமுடியாது. அது இந்த மண்ணில் வாழும் மனிதர்களின் இரத்தத்துடன் ஊறிப் போய்விட்டதொன்று. சூழ்நிலைக்கு ஏற்ப நடத்தையும் நாகரீகமும் மாறலாம். ஆனால் இந்த மண்ணின் வாசனை மாறவே மாறாது.

மேற்குலகக் கலாசாரப் பின்னணியில் வாழ நேர்ந்ததால் இவர்கள் போன்ற இரண்டும் கெட்டான்களுக்கு இந்த மண்ணின் கலாசாரப் பாரம்பரியமோ, பண்பாடோ இலேசில் புரியப்போவதில்லை.

நாவலர் காலத்துக் கலாசாரம் புரியாது விட்டாலும் பொங்குதமிழ் கால உணர்வாவது இவர்களைச் சிந்திக்க வைக்காதா? மொத்தத்தில் கிழக்கு கிழக்குத்தான்; மேற்கு மேற்குத்தான்.

இவர்களது அமெரிக்க டொலராலும், அரைகுறை ஆங்கிலத்தாலும் வேண்டுமானால் அரைகுறைகளின் மனதைக் கவரலாம். ஆனால் அசல் யாழ்ப்பாணத்தானின் மனதை வெல்ல முடியாது.

கிழக்கும் மேற்கும் சந்திக்க முடிந்தாலும இணைவதென்பது மிக மிகக் கடினமே.

# விடுதலை உணர்வை தமிழ்த் தேசியத்தை பேசுகின்ற கதைகள்...

ஒரு பார்வை
இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

'முதற்பயணம்' சிறுகதைத் தொகுப்பு எங்களால் எங்கள் மண்ணில் தொகுக்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்பில் உள்ள கதைகளோ அல்



லது இதுபோன்ற தொகுப்புகளில் உள்ள கதைகளோ தமிழகத்துத் தரத்திற்கோ. உலகத் தரத்திற்கோ இருக்கின்றதோ. இல்லையோ எங்கள் வாழ்வை. எங்கள் வாழ்வியலை. நெருக்கடிகளை எங்கள் விடுதலை உணர்வை எங்கள் போராட்ட எழுச்சியைப் பற்றிப் பேசுகின்றன.

எனவே. எங்கள் கதைகள் சர்வதேசக் கதைகளாக அமைய முன்னர்... எங்கள் கதைகள் தமிழ்த் தேசியக் கதைகளாக அமைய வேண்டும். அதனை 'முதற் பயணம்' செய்கின்றது.

"எங்களது தாயக விடுதலைக்காய்க் களத்தில் நின்று போராடினோம். விழுப்புண்கள் தாங்கினோம். இதனால் எங்களது உடல் வலுக் குறைந்தது உண்மைதான். ஆனாலும். உள்ளத்து உறுதி குறையவே இல்லை. எனினும். மீண்டும் களத்திலே நின்று செயற்பட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானோம்.

எங்களது உள்ளத்தில் இலட்சிய நெருப்பு எரிந்துகொண்டே இருக்கிறது'. அதனால். என்றும் நாங்கள் ஊக்கம் பெற்றபடியே உள்ளோம்.

உடலின் ஓர் உறுப்பை அல்லது சில பாகங்களை இழந்தமையால் களத்தில் நின்று நேரடியாகச் செயற்படமுடியாத நிலையில் எமது அடுத்த கட்டப் பணிக்கான தயார்ப்படுத்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் 'அருமை' கல்விக்கூடப் போராளி மாணவர்களாகி நாம் எமது மனப் பதிவுகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள முனைகின்றோம்'' என இந்தக் கதைகளை எழுதிய சிறுகதையாளர்கள் கூறுகின்றார்கள்.

இவர்கள் கூறுவதை நாம் மிக உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். எத்தகைய மன நிலையில் எவ்வாறான தாகத்துடன் இவர்கள் இதனைக் கூறுகின்றார்கள் என்பதை விளங்கிக்கொள்ள முனையவேண்டும்.

"இன்றைய இலக்கிய வளர்ச்சிப் போக்கில் குறிப்பிடத்தக்க பண்புடைய பல படைப்புக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

"இவைகளில் போராளிகளினால் எழுதப்படும் படைப்புக்களில் செயலறிவால் தெரிந்து கொள்ளப்படுகின்ற போராட்ட அம்சங்கள் ஆழமாகப் பதிவாகி இருக்கவே செய்யும். அந்த உணர்வுகள் எழுத்தின் மீது அழுங்குப் பிடியாக இருப்பதனால் அவைகள் உன்னதமான ஆக்கங்களாகவே பிறக்கின்றன'' என்கிறார் 'முதற்பயணத்திற்கு' அணிந்துரை எழுதிய இ.கபிலன் அவர்கள்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ்ச் சிறுகதை ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு ராணி இருந்தாள் என்ற மாதிரியாகத் தொடங்கிப் பிறப்பு. வளர்ப்பு. சாதி. சமயம். வர்க்கம். தோற்றம். அது. இது என அக்கு வேறு. ஆணி வேறாக வரிவரியாகக் காவியம் பாடியது சித்தரித்துச் சித்தரித்து வளர்ந்த கதை இன்று ஒரு சொல்லின் மூலம் ஓராயிரம் அர்த்தங்கள் புரியக்கூடியவாறும் சொன்னதைவிட சொல்லாதவை ஊடாக விளங்க வைக்கும் சிறுகதைகள் வந்துவிட்டன.

"இவ்வளவு போருக்குப் பின்னரும். பிரச்சினைகளுக்குப் பின்னரும் ஈழத்தமிழ் மக்களின் இலக்கிய உலகம் தட்டையாகத் தான் உள்ளது" என்ற குற்றச் சாட்டுக்கள் மத்தியில் எங்களுடைய கதைகளைப் பற்றி நாங்கள் பேச வேண்டியுள்ளது.

எங்கள் படைப்பாளிகளுக்கு உள்ள முக்கிய பிரச்சினை அவர்கள் முழுநேரப் படைப்பாளிகளாக இல்லாமல் இருப்பதுதான்.

எங்கள் மண்ணில் உள்ள முழுப் படைப்பாளிகளுமே ஏனைய பணிகளுக்கு இடையேயான இடைவெளியை நிரப்புகின்ற ஒரு செயறபாடாக எழுத்தினை வைத்துள்ளார்கள். பல்வேறு பணிகளுக்குள் எங்கள் படைப்பாளிகள் இருப்பதனால் அவர்களுக்குப் பலவிதமான கட்டுகள் / தளைகள் உள்ளன. அவர்களால் இந்தக் கட்டுக்களை உடைக்கமுடியாது.

எழுதக் கூடிய சூழல் அதாவது. mood இருக்கும்போது எழுதமுடியாது. நேரம் இருக்கும் போது mood வராது.

நினைத்த நேரம் படுத்து. நினைத்த நேரம் தூங்கி எழவோ. தேசாந்திரமாகத் திரிந்து அலையவோ ஹோட்டல்களில் தங்கியிருந்து எழுதவோ எங்கள் படைப்பாளிகளால் முடிவதில்லை. என்றாலும் எழுதுகின்றார்கள்.

இந்தச் சிறுகதைகளை எழுதிய படைப்பாளிகளும் தம் பல்வேறு பணிகளுக்கு இடையில் இதனை எழுதியுள்ளனர். கதை எழுத வேண்டும் என்பதற்காக யாரும் தமது ஏனைய வேலைகளை ஒதுக்கி வைக்கவோ ஒத்திப் போடவோ மாட்டார்கள்.

கருமணி. புனிதன். தமிழ் நிலா. தேவபானு. சிவேந்திரன் ஆகியோரால் எழுதப்பட்ட விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர். பிரியாத வரம் வேண்டும். என்ன வழி? துளிர்க்குமா?. முதற் பயணம். எங்களையும் வாழவிடுங்களேன். எதிர் பார்ப்பு. அவனும் ஒரு போராளி. வேப்ப மரங்கள். சிரஞ்சீவிகள். நிலவு. அவன் மறக்கவில்லை. இங்கும் இவான் என்னும் தலைப்புகளில் கதைகள் உள்ளன.

கருமணி எழுதிய கதை 'விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர்'.

தாய். தங்கை. போராளி தர்மன் ஆகியோரைப் பாத்திரங்களாகக் கொண்ட கதை.

"அண்ணா கண்ணாடியைத் தந்திட்டு இந்தப் போட்டோவைப் பாருங்கோ" என்கிற தங்கை அண்ணாவின் கண்களை உற்றுப் பாக்கிறாள்.

"அம்மா. அண்ணாவுக்கும் என்ர கண் மாதிரி எண்டு பொய் சொல்லிப் போட்டியள்" என்கிறாள்.

கதையின் நிறைவு இவ்விதமாக முடிய ஒரு புதிய வாசல் அங்கே திறக்கின்றது. பல போராளிகளில் தர்மன் ஒரு வகை மாதிரியே.

(வளரும்)

# செம்மணியில் கண்ணுறங்கும் கண்மணிக்கு!

காற்றோடு
நீயனுப்பிய கடிதம் - என்
கரங்களுக்குக் கிட்டியது

உந்தன்,
கனவுமுகம் என் கண்களில்
தெறித்தது மகனே!

உனைப் பற்றிய - எனது
தேடலின் முயற்சி வீணாகியதோ?

கருவறையில் நீ
காலால் உதைக்கையில்
களிகொண்டதடா என் நெஞ்சு
பிஞ்சு உனை புதைகுழிக்குள்
புதைத்தாய்;
வலி கொண்டதடா நெஞ்சு!

ஆவி உருகுதடா
செல்வமே! உனைக் காண,
ஆவல் பெருகுதடா

உயிரோடு உனக்கு
உலைவைத்தவன் யாரடா?
யாரடித்தான் உனக்கு?
சொல்லடா வாய்திறந்து.

தாலி அறுந்தவள் அடித்தாளா?
இல்லை,
தாலி அறுத்தவன் அடித்தானா?
சொல்லடா செல்வமே சொல்லு!

அண்ணன் இல்லாத
வேளைபார்த்தா அடித்தான்
வேங்கை மறவனின்
வீரம்தெரியுமா அவனுக்கு/அவளுக்கு

புளியந்தடியால்
புழுதி பறக்க அடித்தது
அவர்களுக்குத் தெரியலையோ?
அன்னமுன்னாக் காயெடுத்து
அனல் பறக்க கொடுத்ததும்
நினைவில்லையோ?

ஆவி நிலையிலும்
உனது கல்லறைக்கு
முகவரியிட்டாய்
உன் நினைவால் - என்
முகவரி கிழிந்து
அலைகிறேன்....
வாசலில் இருந்து
வைகறையைத் தேடி
வாசமிழந்து பேனேனடா

என் செல்வமே!
உன் நினைவுகளின்
ஈரத்தைத் தாங்கிய - என்
இதயமும் வாடி வதங்குதடா?

உன்
அப்பாவும் உனைத்தேடி
வீதிவழி போனார்
இன்னும் வீடு திரும்பவில்லை

தங்கையோ தலை சீவ
மாட்டேன் என்கிறாள்
தம்பியும் மூலைக்குள்
இருந்து, தேம்பித் தேம்பி
அழுகிறான்...
யாருக்கு யார் ஆறுதல்
சொல்வது?

நீளும் என் புலம்பல்களுக்கு
தேடியொரு விடைசொல்ல
காற்றின் உரிமைக் குழுவும்
காதுகொடுத்ததாய்த் தகவலில்லை
அவர்களின் வாசலிலும்
ஈனக்குரலின் தீயெரியும்
அப்போதாவது விடியுமா?

எல்லாமே கண்துடைப்புக்கு
கடமையாற்றுகின்றன.

இனி,
என்னசொல்லி நானெழுத
அழுதழுது கண்ணீரும்
வற்றிப்போய் விட்டது
செம்மணியின் உப்போடையில்
எஞ்சிய கண்ணீரின் மை தொட்டு
எழுதிய என் கடிதத்தை
அனுப்புகிறேன்.

உடனே நீ பதிலனுப்பு
மறு மடலை - என்
உடல் கிழித்து
மிஞ்சிய நினைவுகளைக்
குருதியால்
உனக்கெழுதுவேன்

இப்படிக்கு
அம்மா

(செம்மணிப் புதைகுழிக்குள் உறங்கும் மகனுக்கு தாயின் புலம்பல் கவிதை)

- சுதேசிகன்

# கலிபோர்னியாவில்...

(III பக்கத் தொடர்ச்சி)

குலத்தை அழைத்துச் செல்கின்றனவென்று நம்புவதால் பிற மதச்சின்னங்களை இழிவுபடுத்துவதை தெய்வ நிந்தனையாகக் கருதுகிறார்கள். இந்தத் தெளிவு மேற்கு நாட்டவர்களுக்கில்லை. இருந்தால் இம்மாதிரிப் பொருள்களை உற்பத்தி செய்யமாட்டார்கள். உற்பத்தி செய்தாலும் அவைகளைப் பொதுமக்கள் வாங்கமாட்டார்கள். அந்தவகையில், கீழைத்தேசத்தவர்கள் எவ்வளவு நாகரீகம் மிக்கவர்களாய் இருக்கிறார்கள் என்பது வெளிப்படுகிறது அல்லவா?

## இலவசம் என்றால் இப்படியா?

சில சமயங்களில் பொதுச் சேவை நிறுவனங்களின் பெயரால் தனிப்பட்டவர்கள் புகழும், பெயரும் பெற்றுக்கொள்ள முயல்வதைப் பார்க்கிறோம். இப்படியான சம்பவங்கள் பரவலாக நடைபெறுகின்றன.

சங்கானைப் பகுதியிலிருந்து ஒருவர் அனுப்பியுள்ள தகவல் வருமாறு:

சங்கானைப் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையமொன்றிற்கு பொதுசேவை நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இலவச உடுபுடவைகள் அவர்கள் பாவனை செய்யமுடியாத நிலையில் கிழிந்தும், கந்தல்களாகவும் இருந்ததினால் அவைகளை ஏற்க அம்மக்கள் மறுத்த சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது.

சங்கானையில் அமைந்துள்ள தற்காலிக இடம்பெயர்ந்தோர் நிலையமொன்றுக்கு மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பொதுச் சேவை நிறுவனத்தினரால் ஒரு தொகுதி உடுபுடவைகள் வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. அவைகளை வாங்கிய மக்கள் விரித்துப் பார்த்தபோது, ஏற்கனவே பாவிக்கப்பட்டவையாகவும், இனிமேல் பாவிக்கமுடியாதவையாகவும் இருந்துள்ளன. அவ்விடத்திலேயே அவர்கள் அவைகளை எடுத்து வீசியுள்ளனர். இந்நேரத்தில் இவர்களுடன் கூடவந்த ஒருவர் அவர்களைப் பார்த்து மற்ற நிறுவனங்கள் எல்லாம் புதிய உடுப்பா தருகிறார்கள்? விரும்பினால் வாங்குங்கள்; சும்மா தருவதைக்கூட வாங்குவதற்கு உங்களுக்கு விருப்பம் இல்லாவிடில் நாம் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறியுள்ளார். இவருடைய ஏற்பாட்டின் பேரிலேதான் இந்நிகழ்வும் இடம்பெற்றதாக அங்குள்ள மக்கள் கூறிக்கொண்டனர். அவர்கள் கொடுத்த புடவையையும் ஏற்க மறுத்துவிட்டனர். அகதிகள் என்றால் மக்களா? மாக்களா? நாமும் மனிதர்கள் தானே. இப்படி எம்மை இழிவுபடுத்திக் கேவலமான உடுபுடைவை வழங்குவதிலும் பார்க்க வழங்காமலேயே இருந்திருக்கலாம் என்று அவர்கள் விசனப்பட்டுக்கொண்டனர் என்று எழுதியுள்ளார்.



# இறைவன் விரும்பியபடி நடந்துகொண்டால்.........

அந்த ஊரிலேயேயுள்ள அந்தக் கோவிலுக்கு ஒரு பெருமையுண்டு. அற்புதம் நிறைந்த இறைவன் அங்கு கோயில் கொண்டிருக்கிறாராம்.

ஒரு காலத்திலே அந்தக் கோயிலைத் தங்கள் பெட்டி பூட்டிய உழவு இயந்திரத்தில் வீற்றிருக்கச்செய்து சிலர் வீதி வலம் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

"அதுவல்லவா பக்தி... அதனாலன்றோ விக்கினத்தைத் தீர்க்கும் இறைவனும் அவர்களுக்கு அள்ளிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்" என்று அவ்வூர் மக்களும் வியந்து பாராட்டினார்களாம்.

அந்த வீதிவலம் மிகவும் அற்புதமாக இருக்குமாம். ஆண்டவன் இருவர் வரும் வாகனமான உழவு இயந்திரமும் அதிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆண்டவனாக (இ)றை வருமாக - நித்திய கருமவிதியாக அதெல்லாம் நடந்து கொண்டிருந்ததாம்.

நாளாக நாளாக அந்த முன்மாதிரியை வேறு சிலரும் பின்பற்றத் தொடங்கினர். இன்னும் சிலர் முன்னவர்களைப் போலப் பல சுற்றுக்கள் என்பது போலவன்றிப் பிள்ளையாரைப் பின்பற்றினர். அவர் அப்பனையும் அம்மையையும் ஒரு முறை சுற்றிவந்து மாம்பழத்தைப் பெற்றவராயிற்றே! சில முச்சக்கர வண்டிக்காரர்களும் 'வெள்ளோட்டம்' மாதிரி ஒருமுறை மட்டுமே வீதிவலம் வருவதுடன் நிறுத்திக்கொண்டனர்.

இப்படியே போனால் அடிக்கடி முட்டிமோதி விபத்துக்களை ஏற்படுத்திவரும் மோட்டார் சயிக்கிள்காரர்களும் கோவிலை வீதிவலம் வர ஆரம்பித்தால்...? அதன்பின்னர்தான் ஆலய அறங்காவலர்களும் ஓடி விழித்துக்கொண்டனராம். அதெல்லாம் ஆகாத காரியம் - ஆண்டவனுக்கே பிடிக்காத சங்கதிகள் என்பதைப் புரிந்துகொண்டு அவைகளுக்குத் தடைவிதிக்கப் பட்டதாம்.

குறிப்பிட்ட அந்தக் கோயிலுக்கும் இரண்டு இந்து கலாசார அமைச்சர்களும் அள்ளிக்கொடுத்தவர்கள். மக்களும் பணம், அன்பளிப்பு என்றெல்லாம் வழங்கி வருகிறார்கள். இன்னொருவர் இனி வழங்குவதற்கு 'அதை' விட்டால் வேறு வழியில்லை என்பதால் போலும், ஒலிபரப்புச் சாதனங்களை அன்பளிப்புச் செய்துவிட்டார்.

சுற்றாடலை மாசுபடுத்தும் ஒலிபெருக்கிகள் பற்றியும் கோவில்களில் அவைகளின் 'அத்து' மீறிய பாவனை பற்றியும் பல கண்டனங்களும் முறைப்பாடுகளும் நாளாந்தம் வந்தவண்ணமாக இருக்கின்றன. இவ்வெழுத்தாளரும் முன்னர் இதுபோன்ற தொரு பத்தியில் கோவில்களில் நிரந்தரமாகப் பொருத்தப்படும் ஒலிபெருக்கியின் சாபக்கேடுகள் பற்றி எழுதியுள்ளார். (ஒலிபெருக்கிகளுக்கு ஓய்வுவேண்டும் - உதயன் 27.10.2001) அதனாலெல்லாம் ஓரளவு பயன் கிடைத்ததையும் மறுப்பதற்கில்லை. சில கோவில்களில் அவைகளுக்கு ஓய்வுகொடுக்கப்பட்டும் வேறு சில கோவில்களில் அவை 'அடக்கி வாசிக்கப்' பட்டும் வருகின்றன.

முன்னர் குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட ஊர்க்கோயிலுக்கும் அந்த அன்பர் 'பழி' வாங்கவேண்டும் என்பதற்காக அப்படிச்செய்திருக்க மாட்டார். தேவை கருதியும் பக்திச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் தான் 'அவை' பயன்படுத்தப்படும் என




நினைத்திருப்பார். சில கோவில்களுக்கு முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச்செய்த மகாகனம் பொருந்திய மந்திரியார் கூட அவைகளுக்கு 'லயிலேசு' கொடுக்கும் பாவத்தைச் செய்யவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.

**அதிகாலையில் எழுப்புவதற்கு...**

அதிகாலையில் மக்களைத் தட்டி எழுப்புவது போல நடந்து கொள்ள வேண்டியதில்லை. அந்தநேரத்தில் வானொலி தேசிய சேவையில் கூடப் பக்தி மார்க்கத்தைத் தாண்டவல்ல நிகழ்ச்சிகள் தான் ஒலிபரப்பாகின்றன. விரும்புபவர்கள் அதையே அளவான தொனியில் கேட்டுப் பரவசமடையலாம். தேவை - தேவையை ஒட்டியென்று சொன்னேனே அதற்கொரு விளக்கம்.

திருவெம்பாவை காலங்களிலே பஜனைக்குழு திருவெம்பாவை பாடி மக்களைத் துயிலெழுப்பியவாறு குறிப்பிட்ட கோவிலை நோக்கி ஊர்வலமாகச் செல்வதுண்டல்லவா? ஏற்கனவே, தயாராயிருந்தவர்கள் அதிலே தாங்களும் சேர்ந்துகொள்வார்கள். அப்படி முடியாதவர்கள் நேரடியாகவே கோவிலுக்குச் செல்வார்கள். எல்லோருமே அங்கே வழிபாடுகளை முடித்துக்கொண்டு பிரசாதத்துடன் வீடு திரும்புவார்கள்.

வேறு சில இடங்களில் அதிகாலையில் "இன்னும் என்ன உறக்கம்? நாங்கள் பாடுவது உங்கள் செவிகளில் விழவில்லையா?" என்றெல்லாம் துயிலெழுப்பி வருவார்கள். அவர்களை நம்பிக் கோவிலுக்குச் சென்றால் அங்கு பூட்டிய கதவுகளைத்தான் தரிசிக்கவேண்டும். காரணம் அங்கெல்லாம் ஆகக் குறைந்தது பத்து மணிக்குப் பின்னர் தான் திருவெம்பாவை தொடங்கப்பெறும்....

இறைவன் விரும்பும்படியாக நடந்து கொண்டால் தான் இறைவனும் நம்மைக் காப்பாற்றுவார் என்பதற்கு ஒரு கதை சொல்லவா?

ஒருவன் ஒரு மர உச்சியிலுள்ள ஒரு கிளையிலிருந்துகொண்டு கிளையின் அடிப்பாகத்தை வெட்டிக்கொண்டிருந்தான்.

அதனைத் தமது ஞானக் கண்ணால் கவனித்துவிட்ட உமாதேவியார் பதறியடித்துக்கொண்டு சிவபிரானைத் தட்டியெழுப்பினார்.

"பிராண நாயகரே! பூலோகத்திலே நமது பக்தன் செய்வதைக் கவனித்தீர்களா? அவன் கிளை முறிந்து விழுந்து இறப்பதற்கு முன்னர் அவனைக் காப்பாற்றவேண்டும். உம்...புறப்படுங்கள்"

அவர்களுக்கிடையேயும் கௌரவப் பிரச்சினை போலும். சிவபிரான் சொன்னார். "அவன் கிளை முறிந்து விழும்போது அப்பா என்று குரல் கொடுத்தால் நான் அவனைக் காப்பாற்றுகிறேன். அம்மா என்றால் நீ காப்பாற்றவேண்டும் இருவருமே தயாராகவும் இருந்தார்கள்.

அந்தோ! கடைசியில் அவன் இருவருக்குமே வேலை வைக்கவில்லை. கிளை முறிந்து விழும்போது அவன் 'ஐயோ' என்று தான் குரல்கொடுத்தான்.



சண் அங்கிள்

---

# பறவைகள்


சிறுவர்கள் சிந்தனைக்கு

மகாகவி பாரதி பறவைகளிடம் மிகமிக ஈடுபாடு கொண்டவர். அவர் பறவைகளுடன் மிகவும் தோழமை கொண்டவர். பறவைகளே மகிழ்ச்சியின் அடையாளங்கள்; சுதந்திரத்தின் குறியீடுகள். பறவை மாதிரி தன்னை ஆக்கிக்கொள்கிற மனிதனே என்றும் லட்சிய மனிதன். பறவைகளைப் பார்ப்பதும் அவற்றைப் பற்றி நினைப்பதும் மகிழ்ச்சிக்குரிய மனப் பயிற்சியாகும். பறவைகள் போல் வாழ்வதும் மனித வாழ்க்கையின் லட்சியமாகும்.

குழந்தைகளான உங்களைப் பார்க்கிறபொழுதெல்லாம் பறவைகளின் நினைவே வருகிறது. உங்களுக்கு இறக்கைகள் முளைக்கவேண்டும் என்கிற கற்பனை வருகிறபொழுதே பெரியவர்களுக்கு அவ்விதம் இல்லாததால் பயமும் வருகிறது. பறவைகள் பெரியவர்களைக் கண்டால் பறந்துபோய்விடுகின்றன. ஆனால், சிறிய குருவிகள் மாதிரி எங்கும் திரிந்து பறக்கிற குழந்தைகளாகிய நீங்கள் பெரியவர்களைக் கண்டவுடன் தாவி ஓடி வருகிறீர்கள். குருவிகள்போல் நீங்கள் எங்கு திரிந்தாலும் பறந்தாலும் பெரியவர்களிடமே வந்துவிடவேண்டும். பறவைகள் போல் சுதந்திரமாகவும் - சந்தோஷமாகவும் இருக்கிற நீங்கள் அவற்றைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்வதனால் அப்பறவைகளை விடவும் மகிழ்ச்சியாய் இருக்கலாம்.

எல்லா உயிரினங்களைப் போலவும், தோன்றி மறைகிற இந்தப் பறவை இனங்களின் தனிச்சிறப்பு பலப்பல. தம்முடைய தோற்றத்தினாலும் குரலினாலும் அவை மனிதருக்கு நிரந்தரமான உல்லாசத்தைத் தருகின்றன. மனிதரோடு எந்தத் தொடர்புமில்லாமல் வாழ்கிற அந்த வண்ணப் பறவைகள், மனிதன் மீது கொண்ட அன்பால் அவனது வீட்டு மாடங்களையும், சோலைகளையும் அலங்கரித்தும் இன்னிசையால் நிரப்பியும் இறைவனின் மொழியைப் பேசுகின்றன. அவை கூட்டமாகக் கூடிப் பறந்து மகிழ்ந்தாலும் புனிதமான குடும்பங்களையும் காத்துக் கொள்கின்றன. மிருகங்கள் போல் அவை போரிடுவதில்லை.

மிருகங்களில் கூட்டமாக வாழ்கின்ற இனங்களும் உண்டு; தனித்துக் குடும்பமாக வாழ்கிற இனங்களும் உண்டு. கூட்டமாக வாழ்கிற மிருக வகைகளில் யானை ஒன்று. குடும்பமாய் ஒதுங்கிவாழ்கின்ற மிருகங்களில் சிங்கம் ஒன்று. இவை கூட்டங்களாக ஒன்றை ஒன்று தாக்கியும் அல்லது தனித் தனியாக ஒன்றை ஒன்று எதிர்த்தும் வாழ்வது இயற்கை. மனித சமூகம் இந்த நிலைகளை எய்துவது ஒரு வீழ்ச்சியாகும். ஆனால், பறவை இனம் கூடி வாழ்வதற்கு, இலக்கணமாய், குடும்பமாய் நிலைபெறுவதற்கு இலக்கணமாய், வாழ்கிறது. எனவே, பறவையைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்வது உங்கள் விளையாட்டின் ஒருபகுதியாக இருக்கட்டும்.



பறவைகளிலும் விலங்குத் தன்மை கொண்டவை உண்டு. அவையும் கூட, மனிதரின் மகிழ்ச்சிக்கு இடையூறாக வருவதில்லை. கிளியும், குயிலும், நாகணவாய்ப் புள்ளும், மீன்கொத்தியும், மரங்கொத்தியும், கரிச்சான் குருவியும் காடுகள், ஊர்கள் எங்கும் பேதமின்றி பறந்துதிரிவன.

பருந்தும், வல்லூறும் வானத்தில் வாழ்வன; பிணந்தின்னுவன. கூகையும், ஆந்தையும் தமது தோற்றத்துக்காக வெட்கிப் பகலில் பதுங்கி இரவில் திரிவன. எந்தக் கொடிய பருந்தும் ஒரு சிட்டுக் குருவியைக் கூடத் துன்புறுத்துவதில்லை. பறவைகளை எவர் தயவுமின்றி வாழுமாறு இயற்கை பரிபாலிக்கிறது.

இவ்வாறு தனிச் சிறப்புடைய பறவை இனத்தில் நம்முடைய ஆதரவு இல்லாவிட்டால் நசிந்துவிடக் கூடிய வர்க்கங்களும் உண்டு. அவை கோழி, வாத்து முதலியன. இவற்றால் மனிதவுக்கு நிறையப் பலவுண்டு. மனிதர்களாகிய நாம் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் போதே கொத்தித் திரிகிற கோழிகள், மேய்ந்து வாழ்கிற வாத்துகள் போனற பறவைகளை நம்மோடு கூட்டி விளையாட ஆரம்பித்து விட்டோமானால் பொருளாதாரக் கவலைகள் இல்லாமல் வாழமுடியும். மனிதர்களை அண்டியுள்ள பறவைகள் மனிதருக்குச் சுமையாக மாறுவதில்லை.

இவ்வளவு சிறப்பான குணங்களைப் படைத்த பறவைகளில் ஏமாற்றும், திருட்டும் குணமாகக் கொண்ட ஓர் ஏழைப் பறவை காகம். மனிதருக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஏமாற்றித் தின்னுகிற இதே காகம் அசுத்தத்தீதயும் கழிவுப்பொருள்களையும் விரும்பிச் சுவைப்பதால் நமது பரிதாபத்திற்குரியது.

குழந்தைகளே! இதுவரை அறிந்த பறவைகளின் குணங்களை மனிதர்களும் பெற்றிருக்கிறார்கள் என்பதை இப்போது நினைத்துக்கொள்ளுங்கள். ஆனால், நம்மால் வெறுக்கத்தக்க பறவை என்று எதுவுமே இல்லை. அதுபோலவே ஏமாற்றுகிறவர்களுக்கும் ஏமாற்றுவதில் தாங்கள் வல்லவர்கள் என்பதிலே மகிழ்ச்சி அடைகிறவர்களுக்கும் நீங்கள் இரக்கம் காட்டுவீர்களாக.

ஒற்றுமைக்கு உதாரணமாகப் பாமரர்கள் எடுத்துக்காட்டுகிற காகத்தைப் பாரதி சமூகப் பார்வைகொண்டு 'எத்தித் திருடும்குணம் அதற்கு உண்டு' என்று காட்டுகிறார். இதனால், காகத்தை வெறுக்கலாகாது. 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின் கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா...' என்றும் பாரதி பாடியிருக்கிறார். காக்கைச் சிறகினில் ஒரு காட்சியும், காக்கைக் குணத்தில் ஒரு நீதியும் சொல்லுகிறார் பாரதி.

பறவை மாதிரி வாழ்கிற மனப்பக்குவத்தைப் பெறுகிற மனிதருக்குக் கடமைகளும் உண்டு. கடமை என்பது பிறர்க்குச் செய்வதல்ல. தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் ஒருவன் ஆற்றித் தீரவேண்டிய கடமைகளுக்கு ஸ்வதர்மம் என்று பெயர்.

எப்படி நம்முடைய ஆனந்தமும் நம்முடைய விளையாட்டும் இன்னொரு குழந்தையை வைவதால் கெட்டுப் போகிறதோ, அதுபோலவே நம்மைச் சார்ந்திருப்பவற்றை நாம் சரிவர ஆதரித்துப் போற்றிப் பாதுகாக்காவிடில் அதாவது ஸ்வதர்மத்தைச் செய்யாவிடில் நம்முடைய வாழ்க்கை குலைந்துபோகும். எனவே, நம்மை அண்டி இருக்கின்றவை என்னென்ன என்று முதலில் அறிந்துகொள்வோம்.

கோழி போன்றவற்றைத் தவிரப் பிற பறவைகள் நம்மை அண்டி வாழ்வன அல்ல. அதுபோலவே பசுவும், எருதும், குதிரையும், ஆடும் மனிதரையல்லாமல் வேறு எவரையும் அண்டிப்போவதில்லை. அவற்றை ஆதரித்தல் ஏதோ நம் முடைய தர்மகாரியம் மட்டுமல்ல, அதுவே நமது ஸ்வதர்மமுமாகும்.

விளையாடிக்கொண்டிருக்கின்ற பொழுதே இந்தப் பறவைகளோடும் மிருகங்களோடும் உறவுகொள்வதனால் - அவற்றோடு தோழமை கொள்வதனால் - மனிதாகது அவை உரிமையாகவும் ஆகின்றன. அதனால் செல்வம் பெருகுகிறது; சமூகம் வாழகிறது; குழந்தைகள் ஆனந்தமாக விளையாடுகிறார்கள்.

த.ஜெயகாந்தன்
நன்றி: பாரதிபாடம்

# யாரோடு நோவோம்...?

எக்காலத்திலும் இல்லாதவாறு இப்போது குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் யாழ்ப்பாண இளைஞர்கள். இவர்கள் மீது கீழ்ப்படியாமை, கலாசார விழுமியங்களில் சீர்குலைவை மேற்கொள்ளுதல், வன்முறை மனோபாவத்தில் இயங்குதல், பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தல், சமூகச் செயற்பாடுகளில் இணையாமல் எதிர்த்திசையில் செல்லுதல் என அடுக்கடுக்காகப் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்பவர்கள் வேறு யாருமல்ல; சில வருடங்களுக்கு முன்னர் இளைஞர்களாக இருந்து அடுத்த பருவத்திற்குள் பிரவேசித்தவர்கள்.

இந்தக்குற்றச்சாட்டுக்களை ஒட்டு மொத்தமாக மறுதலிக்க முடியாததுதான். குழுச் சண்டைகளிலும், சாகச மோட்டார் பவனியிலும் தமக்கும், பிறருக்கும், சொத்துகளுக்கும் அழிவையும், சேதத்தையும் ஏற்படுத்தும் கைங்கரியங்களில் இந்த இளைஞர்களில் ஒரு பகுதியினர் ஈடுபடுவது வாஸ்தவமே. ஆள்நடமாட்டம் குறைந்த வீதிகளிலும், மறைவிடங்களிலும் இணைகளுடன் பிரசன்னமாயிருப்பவர்களிலும் இளசுகளே அதிகம்.

இவையெல்லாம் இளைஞர்கள் மீது சுட்டுவிரல் நீட்டக் காரணமானவைதான். ஆனால், ஒட்டுமொத்தமாக இளைஞர் சக்தி மீது சேற்றை அள்ளி வாரி, அவர்கள் மீது கண்டனங்களையும், குற்றங்களையும் அடுக்குவது சமூக ஆரோக்கியத்திற்கு உதவுவதாகுமா?

ஒரு புறம் குருதிச் சேற்றில் நீராடி, தீயில் தலையுலர்த்தி கந்தக வாசனையை நுகர்ந்து தேச விடுதலைக்காகத் தம்முயிர்களைக் கொடுத்தவர்களும், கட்டமைப்புக்குள் தமது கடமையை ஆற்றுபவர்களும் இங்குள்ள இளைஞர்களில் ஒரு பகுதியினர்தான். இராணுவ நடடிக்கைகள் தந்த தாக்கங்களாலும், 'இயக்கங்களில் தலைநுழைக்கக் கூடாதென்னும் பெற்றோர்களின் நிர்ப்பந்தத்தாலும் புலம்பெயர்ந்து மேற்குலகில் கடின உழைப்பில் ஈடுபடுபவர்களும் இங்குள்ள இளைஞர்களில் ஒருபகுதியினர்தான். அதில் ஒரு சிறுபகுதியினர் மேற்குலகின் பண்பாட்டுக்குள் தமது சுய அடையாளங்களை இழந்து போன அவலமும் நேர்ந்துள்ளது.

இன்னொரு புறம் கல்வி, தொழில் என்ற ரீதியில் முன்னேற்றங்களைக் காணத்துடிக்கும் இளைஞர்களும் இங்குதான் உள்ளனர்.

இவர்களைத் தவிர்த்தே முன்னாள் இளைஞர்களால் சுட்டுவிரல் நீட்டப்படும் இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இவர்களின் பின்னணியை நாம் அறிந்துள்ளோமா?

யுத்தம் நாம் விரும்பாமலே எம்முள் பல மனக்காயங்களை உருவாக்கிவிட்டது. மன முறிவுகள், மனக்காயங்கள் பலரிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது இளைஞர் சமூகத்தை அதிகம் பாதித்துள்ளது. இயல்பாகவே யுத்தம் சார்ந்த வன்முறை மனோபாவம் இந்த இளைஞர்கள் விரும்பியோ விரும்பாமலோ இவர்கள் மீது திணிக்கப்பட்டு விட்டது. கூடவே தமிழ்ப்படங்களும், மெகாத் தொடர்களும் வன்முறை மனோபாவத்தை மேலும் வளர்க்கின்றன. இன்றைய தமிழ்ச்சினிமாக் கதாநாயகன் வன்முறைகளால் சாகசம் புரிந்து உயர் தலைவனாக, இளைஞர் இதயங்களில் புகுந்துள்ளான். அவன் பெண்களுடன் பாடி ஆடுவான்; பெண்களுடன் பகிடி சேஷ்டைகளில் ஈடுபடுவான். பெற்றோரின் கண்களில் மண்ணைத்தூவி நண்பர்களை வந்தடைவான். நண்பர்கள், ஆசிரியர்களை ஏமாளிகளாக்கி ஹீரோத்தனம் புரிவார்கள்.

தமிழ்ப்படத்தின் கதாநாயகனாகத் தம்மைப் பாவிக்கும் தோரணையில் பல இளைஞர்கள் இங்கும் உருவாகிவிட்டனர். அண்மைக்காலத்தில் பெரிதும் பேசப்பட்டு வந்த "தீனாகுறூப்", "பாட்ஷா குறூப்", "சாமுராய்குறூப்" எல்லாம் இந்த வகையானதே. இன்றும் அது - குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் - உள்ளது. இடையிடையே பத்திரிகைகளில் வெளிவரும் குழுச்சண்டைச் செய்திகளே இதற்குச் சான்று.

இன்று இங்குள்ள 'சுட்டப்படும்' இளைஞர்களது பெற்றோருக்கு உள்ள ஒரே பயமாக இருந்தது இவர்கள் இயக்கத்திற்குப் போகக் கூடாது என்பதே.

வெளிநாடுகளில் இருந்துவரும் பணமும் ஆடம்பர இலத்திரனியல் சாதனங்களும் இந்த இலக்கினை முன்வைத்து, அவர்களுக்கு அவர்களது பெற்றோரால் அள்ளிவழங்கப்பட்டன. மோட்டார் சைக்கிள்களும், வீடியோக்கமராக்களும் அவர்களை அவர்கள் விரும்பும் உலகுக்கு, அவர்கள் விரும்பும் வாழ்விற்கு ஓரளவாவது இட்டுச்சென்று கொண்டிருக்கிறது. மோட்டார் சைக்கிள் வாங்க வழியற்ற இளைஞர்கள் பலர் தமது சகபாடிகள் மோட்டார் சைக்கிளில் வலம் வருவது போல தாமும் வரவேண்டும் என்பதற்காக பெற்றோரை வதைத்து, மிரட்டி அவற்றை வாங்கி மகிழ்ந்த கதைகள் பலவுண்டு. இவையெல்லாம் யுத்தத்தின் பின்னாக நேர்ந்த ஐரோப்பிய நிலைப்பட்ட சமூகவாழ்வின் சில பருக்கைகள் தான்.

இன்று மேற்குலகின் கட்டற்ற, நமது பண்பாட்டுக் கோலங்களிலிருந்து மாறுபட்ட வாழ்வின் தூறல்கள் இங்கும் விழத்தொடங்கிவிட்டன. இங்குள்ள விழுமியங்கள் சிதைந்து போகும் வண்ணம் மேற்குலக வாழ்வு நமது சமூகத்தை உருமாற்றிக்கொண்டிருக்கின்றது. இதற்கு யாழ்ப்பாணச் சமூகம் முழுவதுமே ஓரளவுக்குப் பலியாகிக் கொண்டுதானுள்ளது. இதில் அதிகம் உள்வாங்கக் கூடிய வாய்ப்புக்கள் இளைஞர்களுக்கே உள்ளன.

நமது வாசல்கள் விரிந்து விட்டன. உலகப்பொருள்கள் கொழும்பினூடாக யாழ்ப்பாணத்தில் கடை விரித்துள்ளன. கொழும்பின் வணிக நடவடிக்கைத் தளமாகவும் யாழ்ப்பாணம் மாறிவிட்டது. கூடவே கொழும்பின் வாழ்க்கை முறையும் யாழ்ப்பாண இளைஞர்களில் பலர் கொழும்பில் நின்று அந்த வாழ்க்கையை அனுபவித்தவர்கள். அவர்கள் அதனை இங்குள்ள தமது சகபாடிகளுடன் சேர்ந்து அனுபவிக்க முயல்கிறார்கள். இங்குள்ள கட்டமைப்புக்கள் அதற்கு வாய்ப்பளிக்காத போதும், அது பெரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு பல வழிகளிலும் இளைஞர்கள் திசைதிரும்பி நிற்கின்றனர். அதை ஜீரணிக்காமல் கண்டனக்குரல் எழுப்பும் முன்னாள் இளைஞர்கள் இவர்களுக்கு என்ன ஆற்றுப்படுத்தல்களைச் செய்தார்கள்?

- ஏகலைவன்

கற்பக வல்லி நின் பொற்பதம் தந்த
சிற்பிதக் கலைவளம் சிந்தனைச் சிமிழ்ப்புலம்!
சொற்களின் பரவலை கற்பனைக் கருக்களால்
அற்புத ஆட்சிசெய்த விற்பன்ன அரசு!

கண்களை மூடினும் கலையினை விழித்த
பண்பட்ட புலவே பண்பாட்டின் புலமே!
எண் திக்கும் வாழும் ஏற்றகலை வலமே - எம்
மண் மகிழும் உன்னால் வீராமணித் தலமே!

## அழகிய(ல்) ஆட்சியின் அற்புத அரசு!



நாட்டிய வித்தையும் நயந்தரு கவிகளும்
காட்டிய வித்தகே கலை யழகே - நீ
சூட்டிய கீதத்தின் சுகந்தரு நாதத்தால்
தேட்டமாய் நிமிருதே கல்விக் கமலம்!

வாழும் கலை வளத்திற்கு ஆழம் தந்த அழகே
ஏழிசை கானத்தில் எழுந்திட்ட உலகே
நாளைய அழகியலின் இன்றைய உயர்வே
வாழுவீர் என்றுமெம் வண்ணத்து உருவே!

(முத்தமிழ் கலாநிதி பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் அவர்களின் நினைவாக வரையப்பட்ட கவிதை)

- மானியூர் ரட்ணேஸ்

## பாறையுடன் பேசுதல்...

சக மனிதனின்
சிரிப்பைத் தின்று
திருப்திப்படுகிறாய்

அடுத்தவனின்
சந்தோஷசத்தைச் சுரண்டி
சுண்ணாம்பாய் வெற்றிலையிற் தடவி
சப்பிவிட்டு
நாக்கிழுத்துச்
சிவப்புப் பார்க்கிறாய்

வகையற்றவனின்
ஒரே போர்வை
உன் காலடியிற் கிடக்கிறதொரு
சாக்காக.

எந்தவொரு எதிராளியின்
வலி முனகலும்
விழாது உன் காதில்

நாற்புறமும் நிலைக் கண்ணாடி பதித்த
உன் பாதாள லோகச்
சுவர்க்ள் நடுவே
குறட்டை விட்டுறங்கு - நீ
சுகமாக!

- ந.சத்தியபாலன்.

# இணையத்தள அறிமுகம்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளின் ஒளிப்படங்களை ஒரே தொகுப்பில் உலகெங்கும் கண்டு கொள்ள வசதியாக ஒளிப்பட இணையத்தளம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

'ஈழவிஷன் (EELA VISION) எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த இணையுத்தளத்தை - eela vision .com' என்னும் முகவரியூடாகப் பார்வையிட முடியும்.

'ஈழவிஷன்' இது அழகுத் தமிழர் தாயகத்தின் ஒளி. ஓவியக்காட்சிகளின் இணையப்பக்கம். இதில் ஈழத்தமிழர் தாயகத்தின் சகல பரிமாணங்களும், ஒளிக்காட்சிகளாக இடம்பிடிக்கின்றன.

இலங்கைத்தீவின் ஒரு பகுதியாக உள்ள ஈழத்தமிழர் தாயக காட்சிகளின் பதிவான இவை வெறுமனே அழகுணர்ச்சிக்காக மட்டுமல்ல உலகெங்கும் உள்ள ஈழத்தமிழ் மக்கள் தம் தாயகத்தை அறியவும், தெரியவும், ஈழத்தமிழர் தாயகம் எப்படிப்பட்டது என அறியவிழைவோருக்குமாக இந்த இணையத்தளம் இயங்குகின்றது.

தரமான ஒளிக்காட்சிகளை மட்டும் இதில் இணைப்போம். சில காட்சிகள் ஒரே இடமாகத் திருப்பித் திருப்பி இருப்பதாக நினைக்கலாம். ஆனால், சில பரிமாண வேறுபாடுகளுக்காக அவற்றை இணைத்துள்ளோம் - என்கின்றனர் அதன் நிர்வாகக் குழுவினர்.

(Iஆம் பக்கத் தொடர்ச்சி)

**புலிகளின்...**
சேர்ந்தியங்குகின்றன!

இதற்கு அப்பால் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவராகவும் தற்போது இந்திய பாதுகாப்புத்துறையில் ஆலோசகராகவும் இருக்கும் நாகேந்திரநாத் டிக்ஸித்திலிருந்து தனது கருத்தாடல்களை ஆரம்பித்துள்ளார். இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி, இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள், இந்தியாவின் வெளியுறவுக்துறை, பாதுகாப்புத்துறை ஆகியவற்றில் முக்கிய பொறுப்புகளிலுள்ள அதிகாரிகள் என ஆழமான, விரிவான சந்திப்புகளை ரணில்விக்கிரமசிங்கா மேற்கொண்டவண்ணமிருந்தார். ஜெயலலிதாவுடன் கருத்தாடல்செய்கிறார். முற்றிலும் இலங்கை இனப்பிரச்சினை சார்ந்த அரசியல் - இராணுவ முக்கியத்துவம் மிக்க தளங்களில் இக்கலந்துரையாடல்கள் இடம்பிடித்திருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இக்கட்டத்தில் இந்தியாவுக்கு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் மேற்கொண்டிருக்கும் விஜயம் அவர்அங்கு வருமாறு அழைக்கப்பட்டதனால் நடைபெற்ற விஜயம் என்றே தீர்க்கமாகத் தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் ஐரோப்பாவுக்கான நீண்ட இராஜதந்திரச் சுற்றுலாவும் ரணிலின் இந்திய விஜயமும் நோர்வேயின் பரபரப்புமிக்க அனுசரணைத்தனங்களும் 'காகங்கள் இருக்க பனம் பழங்கள் விழுந்த கதைகளல்ல'!

## பூமராங்

ஆஸ்திரேலியாவின் ஆதிவாசிகள் பன்நூறு ஆண்டுகளாக உபயோகிக்கும் இந்த பூமராங் என்ற ஆயுதம் விஞ்ஞானிகளுக்கெல்லாம் ஒரு விந்தையாக இருக்கிறது. ஏனென்றால் மனிதனால், அதுவும் காட்டுமிராண்டிகள் எனப்படுபவரால், கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஏவுகணை இது. இதை அந்தக் கற்கால நாகரிக மனிதர்கள் எப்படிக் கண்டுபிடித்தாங்கள் என்பது பற்றி இப்போது ஒரு தகவலும் அறியமுடியவில்லை.

வளைந்த தடி ஒன்றை வீசி எறியும்போது அது வேகமாகச் செல்லுவதைத் தற்செயலாகக் கவனித்த ஒருவன் பூமராங்கை அமைக்க முயன்றிருக்கலாம். சுமார் நூறு கஜங்களுக்கு அப்பாலுள்ள மனிதன் அல்லது விலங்கை நோக்கி இந்த ஏவுகணையை விட்டெறிந்தால், அது தன் இலக்கைத் தாக்கிக்கொல்லும். கொல்லுவதோடு நில்லாமல் தன்கைக்குத் திரும்பியும் வந்துவிடும். இப்போது இரு வகை பூமராங் தயாரிக்கப்படுகிறது. ஒன்று இலக்கைத் தாக்கக் கூடியது. மற்றொன்று தாக்கிவிட்டுத் திரும்பக் கூடியது. இந்தியா, எகிப்து, அரிசோனா (ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தது) முதலிய நாட்டு ஆதிவாசிகள் இதை உபயோகிக்கிறார்கள்.



பூமராங் பிறை வடிவமானது. எறிந்தால் திரும்பிவரும் பூமராங் சிறிது வளைவுள்ள 'L' என்ற எழுத்து வடிவத்தில் ஒரு விலா நீளமாகவும், மற்ற விலா குட்டையாகவும் இருக்கும். இதன் ஒருபுறம் தட்டை யாகவும் மற்றொருபுறம் சிறிது உருட்டினாற் போலுமிருக்கும். முனைகள் எதிர் எதிர்ப்புறமாக சிறிது முறுக்கினாற் போல இருக்கும். இதைத் தயாரிப்பதற்குப் பலவகை மரங்களை உபயோகிக்கிறார்கள்.

பூமராங் எறிவதற்கும் அது திரும்பி வரும்போது பற்றுவதற்கும், பயிற்சிஇல்லாவிட்டால் கைபோய்விடும். ஏனென்றால் இலக்கைத் தாக்கி விட்டுத் திரும்பும் பூமராங் அவ்வளவு வேகமாகவரும்.

# லொத்தர் சீட்டுக்களுக்கு மிகக் கூடுதலான பரிசுகள் வழங்கும் அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபையினால் 2004 ஜனவரி மாதம் 26ஆம் திகதி 'ஜயோதா' புதிய லொத்தர் சீட்டு சந்தையில் அறிமுகப்படுத்தப் பட்டது. இலங்கையின் லொத்தர் வரலாற்றில் முதலாவது சீட்டிழுப்புக்காகப் பாரிய விற்பனை யைச் செய்ததன் மூலம் 'ஜயோதா' பொதுமக் களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளது.

தற்காலத்தில்கூட பாரிய விற்பனையை மேற் கொண்டுவரும் 'ஜயோதா' டிக்கட்டின் விசேட நற் பண்புகளை விளக்குகிறது அபிவிருத்தி லொத்தர் சபை.

* சுப்பர் பரிசு ஒரு கோடி ரூபாவில் ஆரம் பிக்கிறது.

* பத்து லட்சம் ரூபா பெறுமதியான பரிசுப் பொதிகள் அல்லது அதற்குப் பதிலாக 12 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதிவாய்ந்த ஒரு புத்தம் புதிய வீடு.

* மேலும் ஏனைய சாதாரண பரிசுகள்.

* இதற்கு மேலதிகமாக, வெற்றிபெறாத டிக்கெட்டுகளுக்காக விசேட சீட்டிழுப்பினை மேற்கொண்டு ஐந்து மாவட்டங்களைத் தெரிவு செய்து, ஐந்து வீட்டு மின்சார உபகரணத் தொகுதி களும் வழங்கப்பட்டன.

'ஜயோதா' டிக்கட்டுகளுக்காக, தற்போது நடைமுறையிலுள்ள பொதுமக்களின் ஆர்வத்தை மேலும் உயர்ந்த மட்டத்திற்குக்கொண்டு வருவ தற்காகவும், கூடுதலான பரிசுப் பெறுமதிகளை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக் கத்திலும் 2004 ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் தற்போது வழங்கப்படும் வீட்டு மின் சார உபகரணத் தொகுதிகளுக்குப் பதிலாக, ரூபா 65,500வுக்கும் அதிகம் பெறுமதிவாய்ந்த புத்தம் புதிய 'ஹீரோ ஹொண்டா' மோட்டார் சைக்கிளை வழங்க, அபிவிருத்தி லொத்தர் சபை தீர்மானித் துள்ளது. மேலும், முன்னர் வழங்கப்பட்ட ஐந்து மாவட்டங்களுக்குப் பதிலாக 8 மாவட்டங்களைத் தெரிவுசெய்து, இந்தப் பரிசுகளைப் பெற்றுக் கொடுத்து, பரிசுகளை மேலும் விரிவாக்கி, அதி கம் அதிகமாக வெற்றியாளர்களைத் தோற்றுவிக்க லொத்தர் சபை நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

இந்தப் புதிய பரிசுத் தொகைகளுடன் லொத் தர் சீட்டுகளுக்காக மிகக் கூடுதலான பரிசுத் தொகைகளை வழங்கும் லொத்தர் நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை மீண்டும் தனது நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளது.


இதுவரை 'ஜயோதா' டிக்கட் ஊடாக முறையே ரூபா 2,07,64,200, ரூபா 1,02,70,700, ரூபா 1,84,02,325 ஆகிய மூன்று கோடீஸ்வரர்களை யும், பத்து லட்சம் ரூபா பெறுமதியான 83 பரிசு களையும் (அதன் பெறுமதி ரூபா 8,30,00,000) மற்றும் ரூபா 65,000 பெறுமதியான 365 வீட்டு மின் உபகரணங்களின் தொகுதிகளையும் (அதன் பெறுமதி ரூபா 2,37,25,000யும்) மிகக் குறுகிய காலமான 8 மாதகாலங்களுக்குள் வழங்கியுள் ளது. வேறு எந்தவொரு லொத்தர் நிறுவனமும் வழங்கியிராத இவ்வ ளவு பெரிய தொகை செல்வத்தை அபிவிருத்தி லொத்தர் சபை வாரி வழங்கியமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறது.

1983ஆம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபை, அதற்கு கிடைக்கும் சகல இலாபங்களையும், ஜனாதிபதி நிதியத்திற்கும், அதில் ஐம்பது வீதத்தை மகாபொல உயர்கல்வி மாணவர் நிதியத்திற்கும் வழங்குகிறது. 2003ஆம் ஆண்டில் இலங்கையின் லொத்தர் வரலாற்றில் ஆகக் கூடிய விற்பனைச் சாதனையாக 370 கோடி ரூபாவை அபிவிருத்தி லொத்தர் சபை பதிவு செய்துள்ளது. தற்போது 'ஜயோதா' டிக்கட்டு களை சந்தையில் அறி முகப்படுத்துவதன் மூலம், ஜனாதிபதி நிதி யத்திற்கு நூறு கோடி ரூபாவை ஒதுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகி றது. ஜனாதிபதி நிதியத்திற்கு ஒதுக்கப்படும் இந்த நிதி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்த உதவியாக அமைகிறது. விசேடமாக, கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்காகவும், பாரிய சேவைகளைச் செய்து வருகிறது. மேலும், சமயத்தலங்கள், நலன்புரி நிறுவனங்கள், விளையாட்டு மற்றும் கலை ஆகிய துறைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன. அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் விநியோக முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் போன்றவர்களுக்கு தொழில்வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்காகத் துணைபுரிய அளப்பரிய சேவையையும் ஆற்றமுடிந்துள்ளது.











### ஆஸ்பத்திரி வீதியில் எச்.என்.பி. வங்கி

## இரண்டு வருடகாலத்திற்குள் யாழ். மக்கள் அமோக ஆதரவு

### கிளை முகாமையாளர் புவிராஜ் தகவல்

யாழ்ப்பாணத்தில் எச்.என்.பி. அஸ்யூரன்ஸ் (HNB-Assurance) தனது கிளையை ஆரம்பித்து இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. மக்களின் நல்ல ஆதரவும் வரவேற்பும் தமக்குக் கிடைத்துள்ளது.

இப்படி பெருமிதத்துடன் கூறினார் அந்தக் கிளையின் முகாமையாளர் எஸ்.எம்.புவிராஜ்.

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் எச்.என். பி. வங்கியுடன் இணைந்ததாக சிறிய அறையில் இயங்கும் இக்கிளை விரைவில் தனி அலுவலகம் ஒன்றைத் திறக்க விருக்கின்றது.

குடாநாட்டில் 150 முகவர்களைக் கொண்ட வலைப்பின்ன லில் செயற்படும் தமது அலுவலகம் மாதாந்தம் 10 லட்சம் ரூபா வுக்குக் காப்புறுதி வழங்கி வருகிறது என்று அக்கிளையின் முகாமையாளர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான ' தேதுணு' காப்புறுதித்திட்டம், வருடந் தோறும் பெறுமதி உயரும் ஆயுள்காப்புறுதித் திட்டமான 18 வய துக்கு மேற்பட்டவர்களுக்கான 'பிரதீப' திட்டம், காப்புறுதி முதிர்ச்சியடைய முன்னர் கட்டும் தொகையைப் பெறும் 'ரஸ்மி' திட்டம் போன்ற திட்டங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இத்திட்டங்களில் இணைபவர்களுக்கு விசேட சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான திட்டங்களில் அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் மருத்துவ வசதிக்கும் உதவிகள் கிடைக்கும்.

காப்புறுதி முதிர்ச்சியடைந்து கொடுப்பனவுகள் வழங்கப் பட்ட பின்னரும், குறிப்பிட்ட காலத்துக்கு காப்புறுதி வசதி இத்திட் டங்களில் உள்ளன.

இதேபோன்று ஆயுள் காப்புறுதித் திட்டத்தில் பல்வேறு.வசதி கள் அளிக்கப்பட்டுள்ளன — என முகாமையாளர் புவிராஜ் விளக் கிக் கூறினார்.

ஆயுள்காப்புறுதியும், பொதுக் காப்புறுதியும் யாழ்ப்பாணத் தில் அறிமுகம் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வாகனக் காப்புறுதி, சொத்துக் காப்புறுதி ஆகிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட் டுள்ளன.

பயங்கரவாதம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சொத்துகள் காப்புறுதி செய்யப்படுகின்றன. வீடு மற்றும் வீட்டி லுள்ள நகைகள் மற்றும் பொருட்களுக்கு இக்காப்புறுதி செய்யப் படுகின்றது. அத்துடன், சேர்த்து அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு ஆயுள் காப்புறுதியும் வழங்கப்படும் என்று அவர் விளக்கமளித் தார்.

குடாநாட்டில் பல்வேறு காப்புறுதி நிறுவனங்கள் செயற் பட்டபோதும், மக்களுக்கான சேவையை மக்கள் இருப்பிடங் களுக்குச் சென்றே வழங்கி வருகின்றோம் — என்று பெருமைப் பட்டார் எஸ்.எம். புவிராஜ்.

# மார்புப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் இது சிலிங்கோ ஏற்பாட்டில் அதற்கான நிகழ்ச்சிகள்

'சர்வதேச மார்புப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக' அனுஷ்டிக்கப்படும் ஒக்டோபரில் மாதம் முழுவதும் மார்பு புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு வழங்கவும் என சிலிங்கோ ஹெல்த் கெயார் சென்டர் (Ceylinco Healthcare Centre) பிரசார நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளது.

இப்பிரசார நடவடிக்கை இம்மாதம் முதலாம் திகதி கொழும்பிலுள்ள டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இப்பிரசாரத்தை இலகுவாக எடுத்துச் சென்று மக்கள் மத்தியில் விழிப்பூட்டும் பொருட்டு 'ஆரம்பக் கண்டுபிடிப்பே புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும்' என்ற வாசகம் தாங்கிய Pink Ribbonகள் விநியோகிக்கப்பட்டன.

கொழும்பிலும் புறநகர்களிலுமுள்ள 35 வியாபார நிறுவனங்கள் சிலிங்கோ ஹெல்த் கெயார் சென்டரால் வழங்கப்பட்ட இந்த Pink Ribbonகளைத் தங்களின் வாடிக்கையாளர்களுக்குக் கட்டணமின்றி இலவசமாக இம்மாதம் முழுவதும் விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

சர்வதேச மார்புப் புற்றுநோய் மாதமாகிய இந்த ஒக்டோபரில் இந்த Pink Ribbonயை அணிந்துகொள்ளும் ஒருவர் புற்றுநோயிலிருந்து உயிர்தப்பி வாழ்வோரைக் கௌரவப்படுத்துபவராகவும், இந்நோயால் மரணித்தோரை ஞாபகமூட்டுபவராகவும் மற்றும் இந்நோய்க்கு சிகிச்சை தேடுவோருக்கு ஆதரவு வழங்குபவராகவும் தம்மைக் காட்டிக்கொள்கின்றார்.


இவ்வைபவத்தில் கலந்துகொண்டசிலிங்கோ ஹெல்த் கெயார் சேர்விஸஸின் பிரதித் தலைவர் ஆர்.ரங்கநாதன் உரையாற்றும்போது கூறியதாவது:—

எந்த வகையைச் சேர்ந்த புற்றுநோய் என்றாலும் அதனை ஆரம்பத்தில் கண்டறிந்தால் நோயாளி குணமடையவோ அல்லது அந்நோய் மேலும் பரவிச் செல்வதைத் தடுக்கவோ போதுமான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.



மார்புப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு சிலிங்கோ ஹெல்த் கெயார் சென்டர் விசேட பிரசார நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்பிப்பு வைபவம் இம்மாதம் முதலாம் திகதி கொழும்பிலுள்ள டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட சிலிங்கோ ஹெல்த் சேர்விஸஸின் பிரதித் தலைவர் ஆர்.ரங்கநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

மார்புப் புற்றுநோயைப் பொறுத்தவரை இந்நோயின் ஆரம்பக் கண்டுபிடிப்பால் மார்பு இழக்கப்படுவதையோ அல்லது இந்நோய் உடம்பின் ஏனைய பாகங்களுக்குப் பரவுவதையோ தடுக்க முடியும்.




இலங்கைப் பெண்களிடையே தோன்றும் புற்றுநோயின்பொதுவான வடிவம் தான் மார்புப் புற்றுநோய்.

பெண்களின் சனத்தொகையில் 5 சதவீதத்தினர் அல்லது 20பெண்களில் ஒருவர் என இப் புற்றுநோய்க்கு ஆளாகின்றனர். 40 தொடக்கம் 50 வயது வரையிலான பெண்களின் மரணத்துக்கு முதன்மைக் காரணம் இவ்வகைப் புற்றுநோயே.

இந்த அபாயகரமான நிலை மாற வேண்டும் என்றால், இந்நோய் பெரிதாக உணரப்படுவதற்கு முன் இரண்டு வருடங்கள் வரைக்கும் Mammography என்ற சிகிச்சை முறை இந்நோயைக் கண்டுபிடிக்கும் என்ற உண்மையைப் பெண்கள் ஏற்று இச்சிகிச்சை முறையைப் பின்பற்ற வேண்டும்.

இம்மாதம் முழுவதும் தொடரும் இப்பிரசார நடவடிக்கையில் Mammography சிகிச்சை முறையும் வழங்கப்படும். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் இச்சிகிச்சை முறையைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட இதே பிரசாரம் காரணமாக இதுவரை கிட்டத்தட்ட 1,500 பெண்கள் சிலிங்கோ ஹெல்த் கெயார் சென்டரில் இச்சிகிச்சையைப் பெற்று வருகின்றனர்.

சிலிங்கோ ஹெல்த் கெயார் சென்டர் உலகப் புகழ்பெற்ற Washington Hospital Centre இன் அனுசரணையில் நிறுவப்பட்டது.

வாய், மார்பு மற்றும் குடல் புற்றுநோய்கள் போன்றவ்வற்றைக் கண்டறிவதற்கான கருவிகள் இந்நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று குடும்பப் பரம்பரை வழியாக வருகின்ற நோய்கள் பற்றி அறியக் கூடிய கருவிகளும் இந்நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

Mammography, Colonoscopy, Endoscopy, Laryngoscopy, Ultrasound Screenig and X-ray போன்ற வைத்தியப் பரிசோதனைகள் இந்நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் கூறினார்.

நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.



எஸ் லோன் இலடசினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.